# செயலாற்றுகை அறிக்கை - 2024

செலவினத் தலைப்பு - 296

## இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு)த் திணைக்களம்

**நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு**

## கட்டுப்பாட்டாளர் நாயகத்தின் செய்தி



நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் கீழ் காணப்படும், 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் (கட்டுப்பாட்டு) சட்டத்தின் மூலம் நிறுவப்பட்டுள்ள இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் கட்டுப்பாட்டுத் திணைக்களத்தின் 2024 ஆம் ஆண்டிற்கான செயலாற்றுகை அறிக்கையை வெளியிடும் இச் சந்தர்ப்பத்தில் திணைக்களத்தின் கட்டுப்பாட்டாளர் நாயகம் என்ற வகையில் செய்தியொன்றை வெளியிடுவதற்கு முடியுமானதை நான் பெற்ற பாக்கியமொன்றாகக் கருதுகிறேன்.

இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்திற்கு இணங்கி இந் நாட்டின் பாதுகாப்பு, பொருளாதாரம், பொதுச் சுகாதாரம், சுற்றுச் சூழல் பாதுகாப்பு என்பவற்றைக் கருத்திற் கொண்டு நிலையான அபிவிருத்தியடைந்த நாட்டிற்காக இறக்குமதி மற்றும் ஏற்றுமதி முறைகளை ஒழுங்குபடுத்துதல் என்ற ‘செயற்பணியூடாக’ திணைக்களத்தை நடத்திச் செல்ல 2024 ஆம் ஆண்டில் புதிய பல செயற்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டன.

மேற்கூறப்பட்ட பல்வகைப்பட்ட பணிகளைச் செயற்படுத்துவதற்காக 16 அதிவிசேட வர்த்தமானிகள் தேவைக்கேற்றவாறு அமைச்சின் செயலாளரின் அறிவுறுத்தல்கள் மற்றும் மேற்பார்வையின் கீழ் கௌரவ நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சரின் அனுமதியின் கீழ் வெளியிடுவதற்கு நடடிவடிக்கை எடுக்கப்பட்டது.

முன்னைய வருடங்களில் இருந்த பொருளாதார நெருக்கடி நிலைமை, 2024 ஆம் ஆண்டில் படிப்படியாக நல்ல நிலைக்கு திரும்பியதன் அடிப்படையில், பெரும்பாலான இறக்குமதிக் கட்டுப்பாடுகளை நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டதுடன், பொது சுகாதார மற்றும் சுற்றுச் சூழல் பாதுகாப்பு சார்ந்த பிரச்சினைகள் அதிகரிப்பதைக் கருத்திற் கொண்டு, பாதுகாப்பான மற்றும் வினைத்திறனான வணிக ஓட்டத்திற்கு வசதியளிப்பதற்காக தரநிலை மற்றும் தர அளவுகோல்களை மேம்படுத்துதல் மற்றும் புதிய தரநிலைகளை அறிமுகப்படுத்துவதற்குரிய ஒழுங்குவிதிகளை உருவாக்கி வெளியிடுவதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு, 2024 ஆம் ஆண்டின் முதற் காலாண்டில் இத் திணைக்களம் செயற்பட்டது.

பொருளாதார நிலை சாதகமாதல் மற்றும் இறக்குமதிக் கட்டுப்பாடுகளைத் தளர்த்தப்பட்டதன் காரணமாக கணிக்கப்பட்ட இறக்குமதி அதிகரிப்பைக் கருத்திற் கொண்டு இறக்குமதி உரிமங்களை வழங்கும் கொள்கைக் கட்டமைப்பை மேம்படுத்துவதற்கான பணியை பல வருடங்களின் பின்னர் ஆரம்பிக்க முடிந்ததுடன், பல கொள்கைகள் தற்காலத்திற்குப் பொருத்தமானவாறு மற்றும் சேவை பெறுனர்களுக்கு தற்போதைய சட்டக் கட்டமைப்புக்குள் இறக்குமதி செயற்பாடுகளை அவசரமாக செய்வதற்கு முடியுமானவாறு மேம்படுத்துவதற்கு முடியுமானமை நாம் அடைந்த வெற்றியாகும்.

மேலும், இலங்கை உடன்பட்டுள்ள சர்வதேச உடன்படிக்கைகளின் ஊடாக நடைபெறும், இறக்குமதி ஏற்றுமதி ஒழுங்குபடுத்தல்களுக்கு வசதிகளை வழங்கி, இறக்குமதி ஏற்றுமதிக் கட்டுப்பாடுகளும் எமது திணைக்களத்தின் மூலம் நடைபெறுவதுடன், விசேடமாக பாஸல், ரொட்ரடேம், மொன்ட்ரியல் போன்ற உடன்படிக்கைகளின் ஊடாக நடைபெறும் மின் கழிவுகள், தீங்கு விளைவிக்கும் இரசாயனப் பொருட்கள் மற்றும் ஓசோனைப் பாதிக்கும் இறக்குமதிகளை ஒழுங்குபடுத்துதலை இங்கு விசேடமாகக் குறிப்பிட முடியும். அது மாத்திரமின்றி, ஐக்கிய நாடுகளின் பாதுகாப்பு சபையின் 1540 ஆவது முன்மொழிவு மூலம் பரிந்துரைக்கப்பட்டுள்ள, சர்வதேச அமைதிக்கு பாதிப்பு ஏற்படுத்தும் ஆயுத உற்பத்திக்காக பயன்படுத்தப்படும் பொருட்கள் சம்பந்தமான ஒழுங்குபடுத்தல்களுக்காக சட்டங்களை இயற்றுவதற்கு நடவடிக்கைகளை எடுப்பதானது திணைக்கத்திற்கு பொறுப்பளிக்கப்பட்டுள்ள பெரும் சவால்களில் ஒன்றாகக் கருத முடியும். இதற்காக, நடவடிக்கைகளை எடுப்பதற்காக தற்போதுள்ள 1969 ஆம் ஆண்டின் 1 ஆம்

இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் (கட்டுப்பாட்டு) சட்டத்தின் ஏற்பாடுகள் போதுமானதாக இல்லையென கண்டறியப்பட்டுள்ளதுடன் அதைத் தாண்டிய ஒழுங்குபடுத்தலொன்றிற்காக மூலோபாய வணிக முகாமைத்துவச் சட்டமொன்றை வரைவதற்கு தற்போது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன், அது பிராந்தியத்தில் மிக முக்கிய சட்டமியற்றும் செயற்பாடொன்றாகவும் சர்வதேச வணிகத்தில் முக்கிய தீர்மானமொன்றாகவும் கருத முடியும்.

திணைக்களத்தினால் தமது தூர நோக்கு மற்றும் செயற்பணியை முன்னோக்கி நிலையாகவும் ஒழுங்காகவும் நடாத்திச் செல்வதற்காக புதிய தொழில்நுட்பத்துடன் ஒருங்கிணைந்து இத் திணைக்களம் உலகின் ஏனைய நாடுகளின் தொழில்நுட்பக் கட்டமைப்புக்களுடன் இணையும் செயற்பாடுகளையும் அடைவதற்கு செயற்பட்டுள்ளது. அதன்படி, அமெரிக்க அரசின் நிதியுதவியின் கீழ் எஸ்தோனிய அரசினால் உருவாக்கப்பட்ட இறக்குமதி மற்றும் ஏற்றுமதி உரிமங்களை வழங்கும் நிகழ்நிலை கணனி அமைப்பொன்றை எமது திணைக்களத்திற்குப் பெற்றுக் கொள்ள முடிந்தமை நாம் பெற்ற விசேடமான வெற்றியாகும். 2024 ஆம் ஆண்டின் இறுதிக் காலாண்டில் இவ் இலத்திரனியல் உரிமங்களை வழங்கும் அமைப்பை ஆரம்பித்ததுடன், அதன் மூலம் இலங்கை சுங்கம், இறக்குமதி உரிமங்களைப் பெற்றுக் கொள்வதற்காக பரிந்துரை வழங்கும் அரச நிறுவனங்கள் மற்றும் உரிமம் பெற்ற வணிக வங்கிகளை ஒரே இயங்குதளத்திற்கு (Single Digital Platform) கொண்டு வர முடிந்தமையினால் சேவை பெறுநர்களுக்கு திணைக்களத்திற்கு வராமல் உரிமங்களை மற்றும் பற்றுக்களைப் பெற்றுக் கொள்ள முடிதல் மற்றும் அனைத்து செயற்பாடுகளும் காகிதமற்ற (Paperless) தொழில்நுட்பத்தில் இடம்பெறுவதானது இலங்கையின் டிஜிட்டல்மயமாக்கத்தின் மைல்கல்லொன்றெனக் குறிப்பிடுகிறேன்.

எதிர்காலத்தில் இத் திணைக்களத்தின் செயற்பாடுகளை மென்மேலும் வினைத்திறனாக்குவதற்காக திணைக்களத்தின் பணிக்குழுவுடன் இணைந்து திணைக்களத்தின் செயற்பாடுகளை ஆய்வு செய்து மேலும் மேம்படுத்துவதற்காக பல்வேறு வேலைத்திட்டங்களை திட்டமிட்டுள்ளதுடன், அதற்கான கால எல்லைகளும் நிர்ணயிக்கப்பட்டுள்ளன.

பொதுவாக, 2024 ஆம் ஆண்டில் எதிர்பார்த்த செயலாற்றுகை இலக்குகளை அடைந்து, திணைக்களத்தின் தூர நோக்கிற்காக படிப்படியாக முன்னேறுவதற்காக நிர்வாக அலுவலர்கள் உள்ளிட்ட அனைத்துப் பணிக்குழுவினரும் எனக்கு வழங்கிய பங்களிப்பையும் இச் சந்தர்ப்பத்தில் நன்றியுடன் ஞாபகமூட்டுகிறேன்.

மேலும், இக் கால கட்டத்தில் நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அமைச்சின் ஊடாகக் கிடைத்த வழிகாட்டல்களையும் கருத்திற் கொள்ள வேண்டும். அதேபோல், இத் திணைக்களத்தின் செயற்பாடுகளுடன் நேரடியாகத் தொடர்புபடும், இலங்கை மத்திய வங்கி, இலங்கை சுங்கம் மற்றும் இலங்கையின் வணிக வங்கி அமைப்பு, மற்றும் உரிமங்களை வழங்கும் போது பரிந்துரைகளை வழங்கும் அமைச்சுக்கள், திணைக்களங்கள், நிறுவனங்கள், அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் நியதிச்சட்ட சபைகளின் ஒத்துழைப்புக்களுக்கும் நன்றிகளைக் கூறிக் கொள்கிறேன்.

1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் (கட்டுப்பாட்டு) சட்டத்தின் மூலம் பூர்த்தி செய்யப்படும் சட்டரீதியான கட்டமைப்புக்குள் அரச பொருளாதாரக் கொள்கைக்கு இணங்கி பெரும்பான்மையாக தனியார்த் துறையினரைக் கொண்ட சேவை பெறுநர்களின் எதிர்பார்ப்புக்களை பூர்த்தி செய்யும் வகையில் இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் கட்டுப்பாட்டுத் திணைக்களத்தை நடத்தி மிகவும் வினைத்திறனான மற்றும் பயனுள்ள சேவையொன்றை வழங்குவதற்கு எதிர்காலத்திலும் பாடுபட திணைக்களத்தின் நாம் அனைவரும் ஒன்றாக உறுதிமொழி எடுப்போம்.

**டீ.டீ. உபுல்மலீ பிரேமதிலக்க**
இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் கட்டுப்பாட்டாளர் நாயகம்

# உள்ளடக்கம்


| | | | |
|---|---|---|---|
| 1 | அத்தியாயம் - நிறுவனத்தின் சுயவிபரம் / செயற்படுத்தப்படுவதன் சாராம்சம் | | 1 |
| | 1.1 | அறிமுகம் | 1 |
| | 1.2 | திணைக்களத்தின் செயற்பணி, தூரநோக்கு மற்றும் நோக்கங்கள் | 2 |
| | 1.3 | திணைக்களத்தின் பொறுப்புக்கள் மற்றும் பணிகள் | 3 |
| | 1.4 | ஒழுங்கமைப்புக் கட்டமைப்பு மற்றும் விளக்கப்படம் | 4 |
| 2 | அத்தியாயம் - முன்னேற்றம் மற்றும் முன்னோக்குப் பார்வை | | 8 |
| | 2.1 | பொருட்கள் இறக்குமதி மற்றும் ஏற்றுமதி ஒழுங்குபடுத்தல் சம்பந்தமான கொள்கை ரீதியான உத்தரவுகள் | 8 |
| | 2.2 | இறக்குமதி மற்றும் ஏற்றுமதி கட்டுப்பாட்டு உரிமங்களை வழங்குதல். | 21 |
| | 2.3 | கடந்த 3 வருட காலத்திற்குள் விநியோகிக்கப்பட்ட உரிமங்கள் தொடர்பான தரவு மதிப்பாய்வு | 30 |
| | 2.4 | இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் கொடுப்பனவுகள் முறைகள் மற்றும் கட்டளைகள் | 34 |
| | 2.5 | இலங்கையில் இறக்குமதி மற்றும் ஏற்றுமதி ஒழுங்குபடுத்தல் மற்றும் வசதியளித்தல் | 36 |
| | 2.6 | புதிய மேம்படுத்தல்கள் | 40 |
| 3 | அத்தியாயம் - வருடத்திற்கான முழு நிதி செயலாற்றுகை | | 47 |
| | 3.1 | 2024 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிச் செயலாற்றுகைக் கூற்று | 47 |
| | 3.2 | 2024 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் திகதிக்கான நிதி நிலைமைகள் தொடர்பான கூற்று | 48 |
| | 3.3 | 2024 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைகின்ற ஆண்டுக்கான காசுப்பாய்ச்சல் கூற்று | 49 |
| | 3.4 | வருமான சேகரிப்பின் செயலாற்றுகை | 50 |
| | 3.5 | 2024 ஆம் ஆண்டில் ஒதுக்கீடு செய்யப்பட்ட ஏற்பாடுகளைப் பயன்படுத்திக் கொள்வதன் செயலாற்றுகை | 51 |
| | 3.6 | நி.பி.208 பிரகாரம், ஏனைய அமைச்சுக்கள்/திணைக்களங்களின் பிரதிநிதியாக இத்திணைக்களத்திற்கு வழங்கப்பட்டுள்ள ஒதுக்கீடுகள் | 51 |
| | 3.7 | நிதியல்லாத சொத்துக்களின் அறிக்கையிடலின் செயலாற்றுகை | 51 |
| | 3.8 | கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை | 52 |

| | | |
|---|---|---|
| 4 | **அத்தியாயம் - செயலாற்றுகைக் குறியீடு** | **52** |
| | 4.1 நிறுவனத்தின் செயலாற்றுகைக் குறியீடு (செயலாற்றுகைத் திட்டத்தின் அடிப்படையிலானது) | **52** |
| 5 | **அத்தியாயம் - நிலையான அபிவிருத்தி நோக்கங்கள் (SDG) அடைவுகளுக்கான செயலாற்றுகை** | **52** |
| | 5.1 இனங்காணப்பட்ட நிலையான அபிவிருத்தி நோக்கங்கள் | **53** |
| | 5.2 நிலையான அபிவிருத்தி அடைவுகளை அடைவதற்கான வெற்றிகள் மற்றும் சவால்கள் | **59** |
| 6 | **அத்தியாயம் - மனித வள சுயவிபரம்** | **59** |
| | 6.1 பணியாளர்களின் எண்ணிக்கை முகாமைத்துவம் | **59** |
| | 6.2 திணைக்களத்தின் செயலாற்றுகையினை முன்னிட்டு மனித வளத் தட்டுப்பாடு அல்லது மேலதிகத்தின் அச்சுறுத்தல் | **60** |
| | 6.3 மனித வள அபிவிருத்தி | **61** |
| 7 | **அத்தியாயம் - இணக்கப்பாட்டு அறிக்கை** | **67** |
| | **முடிவுரைக் குறிப்பு** | **79** |
| **(இணைப்பு 01) கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை** | | |

# 1 அத்தியாயம் - நிறுவனத்தின் சுயவிபரம் / செயற்படுத்துவதன் சாராம்சம்

## 1.1 அறிமுகம்

1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் (கட்டுப்பாட்டு) சட்டத்தை அடிப்படையாகக் கொண்டு நிறுவப்பட்டுள்ள இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் கட்டுப்பாட்டுத் திணைக்களமானது மிகவும் முறையான மற்றும் சர்வதேச வர்த்தகத்திற்கு ஏற்றவாறு சர்வதேச வர்த்தகத்திற்கு வசதிகளையளிக்கும் ஓர் பாத்திரத்தை ஏற்கும் நிலை வரை இன்று ஒளிர்ந்து வருகின்றது. அதன்படி, நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு, இலங்கை மத்திய வங்கி மற்றும் ஏனைய உரிய தரப்பினரின் கருத்துக்கள், முன்மொழிவுகள், கண்காணிப்புக்கள் மற்றும் ஆலோசனைகளுடன் ஒன்றிணைந்து சந்தர்ப்பத்திற்கேற்றவாறு மரபு முறைப் பணிகளுக்கு அப்பால் சென்று மூலோபாய அணுகுமுறை மூலம் அச் சட்டத்தின் அதிகாரங்களின் அடிப்படையில் இறக்குமதி மற்றும் கொடுப்பனவு முறை ஒழுங்குபடுத்தல்களின் ஊடாக சிறப்பான பணியொன்றையாற்றியுள்ள இத் திணைக்களம், பொருளாதாரத்தின் மீது காணப்பட்ட அழுத்தம் குறையும் சாதகமான போக்கு பற்றி கவனத்தைச் செலுத்தி, விதிக்கப்பட்ட இறக்குமதி கட்டுப்பாடுகள், மோட்டார் வாகனத்தைத் தவிர அனைத்து தற்காலிக இறக்குமதிக் கட்டுப்பாடுகளையும் 2024 ஆம் ஆண்டின் இறுதிக் காலாண்டில் தளர்த்தியது.

தேசிய பாதுகாப்பு, சுற்றுச் சூழல் பாதுகாப்பு, சிறந்த சுகாதாரம் மற்றும் பொருளாதாரப் பாதுகாப்பு ஆகிய நோக்கங்களுக்காக இறக்குமதி மற்றும் ஏற்றுமதிப் பொருட்களின் எண்ணிக்கை மற்றும் தரத்திற்காக இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் கட்டுப்பாட்டு உரிமங்களை வழங்கும் முறையை மிகவும் பயனுள்ளதாகவும் வினைத்திறனாகவும் சேவை பெறுநர்கள் திருப்தியடைமாறும் செய்வதற்கு உண்டான அனைத்து நடவடிக்கைகளும் இத் திணைக்களத்தினால் எடுக்கப்படுகின்றன. அதில் பாஸல், மொன்ட்ரியல் உள்ளிட்ட சுற்றுச் சூழல் தொடர்பான சர்வதேச உடன்படிக்கைகளுக்கு இணங்கி உரிய இறக்குமதிக் கட்டுப்பாடுகள் விதிக்கப்படுகின்றன.

மேலும், பொருட்கள் இறக்குமதியின் போது அவற்றின் தரநிலைகளை நிர்ணயிப்பதன் மூலம் பொது சுகாதாரத்திற்குரிய ஏற்பாடுகள் விதிக்கப்படுவதுடன், 164 இறக்குமதிப் பொருட்களுக்கு இலங்கை தரநிலைகள் கட்டாயமாக்கப்பட்டுள்ளன. இதற்கு மேலதிகமாக ஐக்கிய நாடுகளின் பாதுகாப்பு சபையின் 1540 ஆம் முன்மொழிவை செயற்படுத்துவதற்காக புதிய சட்டதிட்டங்களை உருவாக்குவதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

இறக்குமதி உரிமங்களை வழங்கும் கொள்கைக் கட்டமைப்பை புதுப்பிக்கும் செயற்பாடு பல வருடங்களின் பின்னர் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன், பல கொள்கைகள் தற்காலத்திற்குப் பொருத்தமானவாறு மற்றும் சேவை பெறுநர்களுக்கு இறக்குமதிச் செயற்பாடுகளை சட்டக் கட்டமைப்பிற்குள் விரைவாக செயற்படுத்துமாறும் புதுப்பிக்கப்பட்டுள்ளன.

திணைக்களத்தினால் தமது தூர நோக்கு மற்றும் செயற்பணிகளை முன்னே கொண்டு சென்று, நிலைபேறான அபிவிருத்திக்கான உலகளாவிய ஒத்துழைப்பை செயற்படுத்தும் நோக்குடன், சேவை பெறுநருக்கு வினைத்திறனாக மற்றும் விளைத்திறனாக வழங்குவதற்காக, STRATLINK மின் உரிமங்களை வழங்குதற்கான அமைப்பு நிறுவப்பட்டுள்ளது.

## 1.2 திணைக்களத்தின் தூரநோக்கு, செயற்பணி மற்றும் நோக்கங்கள்

### 1.2.1 நிறுவனத்தின் தூரநோக்கு

நிலைபேறான அபிவிருத்தியடைந்த ஓர் நாட்டை நோக்கி இறக்குமதிகள் மற்றும் ஏற்றுமதிகளை ஒழுங்குபடுத்தல்

### 1.2.2 நிறுவனத்தின் செயற்பணி

நாட்டின் பாதுகாப்பு, பொருளாதாரம், பொது சுகாதாரம், சூழல் பாதுகாப்பு போன்ற அனைத்தையும் கவனத்திற் கொண்டு, பொருட்கள் இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் கட்டுப்பாடுகள் தொடர்பில் அரசினால் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்படுகின்ற கொள்கை ரீதியான தீர்மானங்களை 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்கம் கொண்ட இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் (கட்டுப்பாட்டு)ச் சட்டத்தின் பிரகாரம் நடைமுறைப்படுத்தல்

### 1.2.3 நோக்கங்கள்

நாட்டின் பாதுகாப்பினை உறுதிப்படுத்தல், பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புதல் மற்றும் பொது சுகாதாரம் மற்றும் சூழலைப் பாதுகாப்பதற்காக அரசினால் அவ்வப்போது

எடுக்கப்படுகின்ற கொள்கைத் தீர்மானங்களுக்கு இணங்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதிகளை ஒழுங்குபடுத்தல்.

## 1.3 திணைக்களத்தின் பொறுப்புக்கள் மற்றும் பணிகள்

i. இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் கட்டுப்பாட்டிற்குரிய உரிய ஒழுங்குவிதிகள் உள்ளடக்கிய அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்களை வெளியிடல்.

ii. இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் கட்டுப்பாட்டிற்கு உரிய செயற்பாட்டு வழிகாட்டல்களை வணிக வங்கிகளுக்கு, இலங்கை சுங்கத்திற்கு மற்றும் பிற நிறுவனங்களுக்கு வழங்கல்.

iii. இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் கட்டுப்பாடுகள் தொடர்பாக வெளியிடப்படும் ஒழுங்குவிதிகளுக்குரிய உள்ளக சுற்றறிக்கைகளை வெளியிடல்.

iv. இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் (கட்டுப்பாட்டு) ஒழுங்குவிதிகளின் கீழ் இந் நாட்டுப் பொருளாதார நலன்கருதி உரிமங்களை வழங்குதல் மற்றும் ஒழுங்குபடுத்தல்.

v. உரிமக் கட்டுப்பாட்டிற்கு உட்பட்ட பொருட்களை இறக்குமதி செய்த பின்னர் பற்றுக்களை (Debit) வழங்குதல்.

vi. இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் (கட்டுப்பாட்டு) ஒழுங்குவிதிகள், அல்லது உரிமங்களின் நிபந்தனைகளை மீறும் இறக்குமதியாளர்களுக்கு மேலதிகக் கட்டணங்களை விதித்தல்.

vii. மூலோபாய வர்த்தக முகாமைத்துவ முறையொன்றை மற்றும் தரத்திலான இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் கட்டுப்பாட்டு உரிமங்களை வழங்கும் முறையொன்றை உருவாக்குவது தொடர்பில் உரிய அரச நிறுவனங்களுடன் ஒருங்கிணைந்து செயற்படல்.

viii. உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு வர்த்தகத்தினை மேம்படுத்துவதற்காக உலக வர்த்தக சங்கத்தின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதற்கு வசதிகளைச் செய்து கொடுத்தல்.

ix. பாசல் மாநாடு, மொன்ரியல் மாநாடு போன்ற சர்வதேச மாநாடுகளுக்கு இணங்குவதற்கு சுற்றாடல் அமைச்சுடன் இணைந்து செயற்படல்.

x. சர்வதேச வர்த்தகரீதியான கொடுக்கல் வாங்கல்களுக்கு பொருத்தமான ஒழுங்குவிதிகளை வெளியிடல் மற்றும் ஒழுங்குபடுத்தல்.

xi. இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் (கட்டுப்பாட்டு) ஒழுங்குவிதிகள் தொடர்பில் பிரச்சினைகள் தோன்றுகின்ற சந்தர்ப்பங்களில் சுங்கப் பணிப்பாளர் நாயகத்திற்கு தேவையான உதவிகள் / ஆலோசனைகளை வழங்கல்.

xii. திணைக்களப் பணியாளர்களின் திறமைகள், திறன்கள் மற்றும் வினைத்திறனை மேம்படுத்துவதற்கு பயிற்சி நிகழ்வுகளை நடத்துதல் மற்றும் ஊழியர் நலன்புரி.

xiii. உரிய அரச கட்டணங்களைச் சேகரித்து, ஒழுங்கிணைந்த நிதிக்கு வைப்புச் செய்தல்.

## 1.4 ஒழுங்கமைப்புக் கட்டமைப்பு மற்றும் விளக்கப்படம்

நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் கீழ் இயங்குகின்ற இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் கட்டுப்பாட்டுத் திணைக்களத்தின் இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் கட்டுப்பாட்டாளர் நாயகம் நிறுவனத் தலைவராகக் கடமையாற்றுகிறார்.

1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் (கட்டுப்பாட்டு) சட்டத்தின் கீழ் நடைமுறைப்படுத்தப்படும் சட்டதிட்டங்கள், ஒழுங்குவிதிகளை விதித்தல் மற்றும் இறக்குமதிக் கட்டுப்பாட்டு உரிமங்களை வழங்குதல் உள்ளிட்ட ஒட்டுமொத்த இறக்குமதி மற்றும் ஏற்றுமதி துறையின் செயற்பாடுகளை ஒழுங்குபடுத்துவதற்காக இத் திணைக்களம் கீழ்வரும் பிரிவுகள் மற்றும் அலகுகளின் அடிப்படையில் இயங்குகின்றது.

I. நிறுவனப் பிரிவு
II. கணக்குப் பிரிவு
III. ஆய்வுகள் மற்றும் கொள்கைகள் பிரிவு
IV. உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு
V. உரிமங்களை வழங்கும் பிரிவுகள்
- அலகு 1 – ஔடதங்கள் மற்றும் சத்திர சிகிச்சை உபகரணங்கள்
- அலகு 2 – பாவிக்கப்பட்ட வாகனங்கள் மற்றும் வாகன உதிரிப் பாகங்கள்
- அலகு 3 – இரசாயனப் பொருட்கள், உரங்கள், பூச்சிக்கொல்லிகள் மற்றும் தொழில்நுட்ப மூலப்பொருட்கள்
- அலகு 4 – கையடக்கத் தொலைபேசிகள், தொலைத் தொடர்பு சாதனங்கள் மற்றும் வேறு மின் உபகரணங்கள்
- அலகு 5 – விலங்குகள், விலங்கு உற்பத்திகள் மற்றும் ஏனைய இறக்குமதிகள்

VI. தகவல் தொழிநுட்பப் பிரிவு

இறக்குமதி மற்றும் ஏற்றுமதி கட்டுப்பாட்டுத் திணைக்களத்தின் தற்போதைய ஊழியர்கள் பின்வரும் நிறுவன விளக்கப்படத்தின் (organization Chart) கீழ் வாடிக்கையாளர்களுக்கு தொடர்ந்தும் இக் கடமைகளை செயற்திறன் மற்றும் வினைத்திறனான முறையில் நிறைவேற்றுவதற்காகவும் சேவை செய்வதற்காகவும் அர்ப்பணிக்கப்பட்டுள்ளனர்.

2024.12.31 ஆம் திகதிக்கு அனுமதிக்கப்பட்ட பணிக்குழுவினர் 122 ஆக இருப்பதுடன், சிரேஷ்ட நிலையிலிருந்து ஆரம்ப நிலைவரை 14 பதவி வெற்றிடங்கள் காணப்பட்டதுடன், தற்போதுள்ள பணிக்குழுவினரைக் கொண்டு மிகவும் சிறப்பானதோர் சேவையை வழங்குவதற்கு 2024 ஆம் ஆண்டில் நடவடிக்கை எடுக்கப்பட்டது.

பணிக்குழுவினர் தொடர்பான தகவல்கள் பின்வருமாறு.

## 2024.12.31 ஆம் ஆண்டின் ஊழியர் தொடர்பான தகவல்கள்

| பதவி நிலை | சேவை/தரம் | | | | அனுமதிக்கப்பட்ட ஊழியர் | தற்போதைய ஊழியர் | வெற்றிடம் | மேலதிக ஊழியர் |
|---|---|---|---|---|---|---|---|---|
| **சிரேஷ்ட நிலை** | | | | | | | | |
| இறக்குமதி மற்றும் ஏற்றுமதி கட்டுப்பாட்டாளர் நாயகம் | இ.நி.சே | விஷேட | SL 3 | நிறைவேற்றுத் தரம் | 01 | 01 | 00 | |
| இறக்குமதி மற்றும் ஏற்றுமதி கட்டுப்பாட்டாளர் | இ.நி.சே | I | SL 1 | நிறைவேற்றுத் தரம் | 02 | 02 | 00 | |
| இறக்குமதி மற்றும் ஏற்றுமதி கட்டுப்பாட்டாளர் (தகவல் மற்றும் தொடர்பாடல் தொழிநுட்பம்) | நாடளாவிய சேவைகள் | I | SL 1 | நிறைவேற்றுத் தரம் | 01 | 01 | 00 | |
| பிரதி/உதவி கட்டுப்பாட்டாளர் | இ.நி.சே | II/III | SL 1 | நிறைவேற்றுத் தரம் | 06 | 05 | 01 | |
| பிரதான கணக்காளர் | இ.க.சே | I | SL 1 | நிறைவேற்றுத் தரம் | 01 | 01 | 00 | |
| பிரதான உள்ளகக் கணக்காய்வாளர் | இ.க.சே | I | SL 1 | நிறைவேற்றுத் தரம் | 01 | 01 | 00 | |
| சட்ட அலுவலர் | திணைக்களம் சார்ந்த | II/III | SL 1 | நிறைவேற்றுத் தரம் | 01 | 00 | 01 | |
| உதவிப் பணிப்பாளர் (தகவல் தொழிநுட்பம்) | இ.த.தொ.தொ.சே | III | SL 1 | நிறைவேற்றுத் தரம் | 01 | 01 | 00 | |
| | | | | | **14** | **12** | **02** | **00** |
| **மூன்றாம் நிலை** | | | | | | | | |
| நிர்வாக அலுவலர் | மு.சே.உ.சே | அதி விஷேட | MN 7 | மூன்றாம் தரம் | 01 | 01 | 00 | |
| மொழிபெயர்ப்பாளர் | மொ.பெ.சே | I/II | MN 6 | மூன்றாம் தரம் | 02 | 02 | 00 | |
| தகவல் மற்றும் தொடர்பாடல் தொழிநுட்ப அலுவலர் | இ.த.தொ.தொ.அ.சே | II | MN 6 | மூன்றாம் தரம் | 01 | 01 | 00 | |
| | | | | | **04** | **04** | **00** | **00** |
| **இரண்டாம் நிலை** | | | | | | | | |
| தகவல் மற்றும் தொடர்பாடல் தொழிநுட்ப உதவியாளர் | இ.த.தொ.தொ.உ.சே | III | MT 1 | இரண்டாம் தரம் | 02 | 03 | 00 | 01 |
| தரவு முகாமைத்துவ உதவியாளர் | திணைக்களம் சார்ந்த | | MN 4 | இரண்டாம் தரம் | 01 | 01 | 00 | |
| விசாரணை உதவியாளர் | திணைக்களம் சார்ந்த | | MN 4 | இரண்டாம் தரம் | 01 | 01 | 00 | |
| அபிவிருத்தி உத்தியோகத்தர் | அ.உ.சே | I/II/III | MN 4 | இரண்டாம் தரம் | 23 | 21 | 02 | |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் | மு.சே.உ.சே | I/II/III | MN 2 | இரண்டாம் தரம் | 57 | 50 | 07 | |
| | | | | | **84** | **76** | **09** | **01** |
| **ஆரம்ப நிலை** | | | | | | | | |
| வாகன ஓட்டுனர் | வாகன ஓட்டுனர் சேவை | I/II/III | PL 3 | முதல் தரம் | 05 | 02 | 03 | |
| அலுவலக உதவியாளர் | அ.உ.சே | I/II/III | PL 1 | முதல் தரம் | 15 | 15 | 00 | |
| | | | | | **20** | **17** | **03** | **00** |
| **மொத்தம்** | | | | | **122** | **109** | **14** | **1** |

## ஒழுங்கமைப்பு அட்டவணை




உ.க - உதவிக் கட்டுப்பாட்டாளர்
அ.உ - அபிவிருத்தி உத்தியோகத்தர்
த.தொ.தொ - தகவல் தொடர்பாடல் மற்றும் தொழில்நுட்பம்

பி.க - பிரதிக் கட்டுப்பாட்டாளர்
த.மு.உ - தரவு முகாமைத்துவ உதவியாளர்
நி.அ - நிருவாக அலுவலர்

உ.ப - உதவிப் பணிப்பாளர்
வி.உ - விசாரணை உதவியாளர்
பி.மு.சே.அ- பிரதான முகாமைத்துவ சேவை அலுவலர்

ஆ மற்றும் கொ - ஆய்வு மற்றும் கொள்கை
மு.சே.அ - முகாமைத்துவ சேவை அலுவலர்

## 2. அத்தியாயம் - முன்னேற்றம் மற்றும் முன்னோக்குப் பார்வை

### 2.1 பொருட்கள் இறக்குமதி மற்றும் ஏற்றுமதி ஒழுங்குபடுத்தல் பற்றிய கொள்கை ரீதியான கட்டளை

கடந்த வருடங்களில் நாட்டில் காணப்பட்ட பொருளாதாரப் பின்னடைவு 2024 ஆம் ஆண்டில் படிப்படியாக மீட்சி நிலையை அடைவதைக் காட்டியது. அந்நிய செலாவணி இருப்பில் ஏற்பட்ட அதிகரிப்புடன் பொருளாதார நடவடிக்கைகள் இயல்பு நிலையை அடைந்ததுடன் இதுவரை உயர் மட்டத்தில் காணப்பட்ட அமெரிக்க டொலருக்கு எதிராக ரூபாயின் பெருமதி சற்று வலுவடைந்தமை காணக்கிடைத்ததுடன் அது, சாதகமான பொருளாதார விளைவாகக் காணப்படுகிறது. அதற்கமைய, கடந்த காலங்களில் காணப்பட்ட இறக்குமதி கட்டுப்பாடுகளை விதித்தல் மற்றும் வெளிநாட்டு சந்தைக்கான கொடுப்பனவு முறைகளை கட்டுப்பாடுகளை விதித்தல் என்பவற்றை படிப்படியாக தளர்த்துவதற்கு கொள்கை ரீதியாக இணக்கம் காணப்பட்டது, அதற்கமை, இறக்குமதிக் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டிருந்த மூலப் பொருட்கள், அரை முடிவுப் பொருட்கள் மற்றும் முடிவுப் பொருட்களுக்கு (மோட்டார் வாகனங்கள் தவிர) விதிக்கப்பட்டிருந்த அனைத்து இறக்குமதிக் கட்டுப்பாடுகளையும் தளர்த்தும் நடவடிக்கைகள் 2024 ஆம் ஆண்டில் இடம்பெற்றது.

பொது சுகாதாரம் மற்றும் சுற்றுச் சூழல் பாதுகாத்தல் தொடர்பான பிரச்சினைகள் அதிகரித்தலைக் கருத்திற் கொண்டு, அவசரமாக, பாதுகாப்பான மற்றும் வினைத்திறனான வணிக ஓட்டத்திற்கு வசதிகளை ஏற்படுத்துவதற்கு மற்றும் உள்நாட்டு உற்பத்திகள் மற்றும் இறக்குமதி உற்பத்திகளுக்கு நியாயமான மற்றும் சமமான சூழலொன்றை உருவாக்குவதற்காக தற்போதுள்ள தரநிலைகள் மற்றும் தர அளவுகோல்களை மேம்படுத்துதல் மற்றும் புதிய தரநிலைகள் மற்றும் தர அளவுகோல்களை, 2024 ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது.

மேலும், இலங்கை மத்திய வங்கியின் இணக்கப்பாட்டுடன் 304 இயைபு முறைக் குறியீடுகளின் (HS Codes) கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ள மோட்டார் வாகனங்கள் மற்றும் ஏனைய மோட்டார் வாகன என்ஜின் பயன்படாத பொருட்களை இறக்குமதி செய்வதற்கு விதிக்கப்பட்டிருந்த தற்காலிக இறக்குமதித் தடையை மூன்று (03) கட்டங்களில் நீக்குவதற்கு 2024 செப்டம்பர் 13 ஆம் திகதி அமைச்சரவையின் அனுமதி கிடைத்துள்ளதுடன், அதன் முதற் கட்டமாக பொதுப் போக்குவரத்து நடவடிக்கைகளுக்கு பயன்படுத்தும் பஸ் வண்டி, விசேட தேவைகளுக்குப் பயன்படுத்தப்படும் வண்டிகள் மற்றும் ஏனைய மோட்டார் என்ஜின் பயன்படாத பொருட்களை இறக்குமதி செய்வதற்கான தற்காலிக இறக்குமதித் தடையை நீக்குதல் 2024 ஆம் ஆண்டின் இறுதிக் காலாண்டில் இடம்பெற்றது.

## 2.1.1 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் (கட்டுப்பாட்டு) சட்டத்தின் கீழ் புதிய ஒழுங்குவிதிகளை வெளியிடல்

| தொடர் இல. | அதிவிசேட வர்த்தமானி இல. | திகதி | விபரம் |
|---|---|---|---|
| 1 | 2366/19 | 2024.01.11 | அரச நிறுவனங்கள் சிலவற்றின் குறிப்பிட்ட தேவைகளை நிறைவேற்றுவதற்காக, தற்காலிகமாக இடை நிறுத்தப்பட்டுள்ள தெரிவு செய்யப்பட்ட மோட்டார் வாகன வகைகளை இறக்குமதி செய்வதற்கு அனுமதி வழங்கல். |
| 2 | 2370/15 | 2024.02.07 | 2023 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) ஒழுங்குவிதிகளில் (2023.01.01 ஆம் திகதி 2312/78 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ள) இலக்கம் 12 (அ) ஒழுங்குவிதியை திருத்தம் செய்வதனூடாக வெளிநாடுகளில் சேவை புரியும் இலங்கையர்களுக்கு முழுமையாக மின்சாரத்தில் இயங்கும் வாகனங்களை இறக்குமதி செய்வதற்கு அனுமதி வழங்கப்பட்ட காலத்தை 2024.08.31 வரை நீடித்தல். |
| 3 | 2372/04 | 2024.02.19 | அமைச்சரவையினால் அனுமதி வழங்கப்பட்ட "அனுமதிக்கப்பட்ட நிறுவனமொன்றிற்கு" செயன்முறை மற்றும் மீள் ஏற்றுமதி நோக்கத்திற்காக, 2023 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க விசேட இறக்குமதி உரிம ஒழுங்குவிதிகளின் (2023.01.01 ஆம் திகதிய 2312/77 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ள) V ஆம் அட்டவணையில் வகைப்படுத்தி பட்டியலிடப்பட்டுள்ள தெரிவு செய்யப்பட்ட வாசனைத் திரவியங்கள் (உதாரணம்: மிளகு, சாதிக்காய் மற்றும் சாதிப்பத்திரி போன்ற) இறக்குமதி செய்வதற்கு அனுமதி வழங்கல். |
| 4 | 2373/28 | 2024.02.28 | ஆவணங்களுக்கு எதிரான ஏற்றுக் கொள்ளல் (DA) மற்றும் ஆவணங்களுக்கு எதிரான கொடுப்பனவு (DP) கொடுப்பனவு முறைகளுக்கு முன் அனுமதி பெறும் தேவை தொடர்பான 2022 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க இறக்குமதிக் கட்டுப்பாட்டு ஒழுங்குவிதிகளில் (2024.05.06 ஆம் திகதிய 2278/21 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ள) 6 ஆம் இலக்க ஒழுங்குவிதியை நீக்குதல். |
| 5 | 2376/14 | 2024.03.19 | அரச நிறுவனங்கள் சிலவற்றின் குறிப்பிட்ட தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக, தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ள தெரிவு செய்யப்பட்ட மோட்டார் வாகனங்களை இறக்குமதி செய்வதற்கு அனுமதி வழங்கல். |
| 6 | 2379/03 | 2024.04.08 | இலங்கை அரச (பொது) வர்த்தகக் கூட்டுத்தாபனம் (STC), தேசிய உணவு ஊக்குவிப்பு சபை மற்றும் இலங்கை ஹதபிம அதிகாரசபைக்கு 2023 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க விசேட இறக்குமதி உரிம ஒழுங்குவிதிகளின் (2023.01.01 திகதிய 2312/77 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ள) V ஆம் அட்டவணையில் வகைப்படுத்தப்பட்டுப் பட்டியலிடப்பட்டுள்ள உழுந்து |

| தொடர் இல. | அதிவிசேட வர்த்தமானி இல. | திகதி | விபரம் |
|---|---|---|---|
| | | | 2,000 மெட்றிக் டொன் இறக்குமதி செய்வதற்கு அனுமதி வழங்கல். |
| 7 | 2384/34 | 2024.05.17 | தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ள தெரிவு செய்யப்பட்ட மோட்டார் வாகனங்களை சுற்றுலாத் துறைக்கு இறக்குமதி செய்வதற்கு அனுமதி வழங்கல். |
| 8 | 2384/35 | 2024.05.17 | தெரிவு செய்யப்பட்ட இறக்குமதிப் பொருட்களுக்கு இலங்கை தரநிலையை விதித்தல். |
| 9 | 2387/35 | 2024.06.06 | அமைச்சரவையினால் அனுமதி வழங்கப்பட்ட “அனுமதிக்கப்பட்ட நிறுவனமொன்றிற்கு” செயன்முறை மற்றும் மீள் ஏற்றுமதி நோக்கத்திற்காக, 2023 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க விசேட இறக்குமதி உரிம ஒழுங்குவிதிகளில் (2023.01.01 ஆம் திகதிய 2312/77 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ள) V ஆம் அட்டவணையில் வகைப்படுத்தப்பட்டுப் பட்டியலிடப்பட்டுள்ள பாக்கு இறக்குமதி செய்வதற்கு அனுமதி வழங்கல். |
| 10 | 2390/19 | 2024.06.28 | உணவாகக் கொள்ளப்படுகின்ற தேர்ந்தெடுக்கப்பட்ட தானிய வகைகளுக்கான இறக்குமதிக் கட்டுப்பாட்டு உரிமத் (ICL) தேவையை நீக்குதல் மற்றும் ஆளில்லா விமானங்களுக்கான இறக்குமதிக் கட்டுப்பாட்டு உரிமத் (ICL) தேவையை விதித்தல். |
| 11 | 2393/36 | 2024.07.18 | அமைச்சரவையினால் அனுமதி வழங்கப்பட்ட “அனுமதிக்கப்பட்ட நிறுவனமொன்றிற்கு” செயன்முறை மற்றும் மீள் ஏற்றுமதி நோக்கத்திற்காக, 2023 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க விசேட இறக்குமதி உரிம ஒழுங்குவிதிகளின் (2023.01.01 ஆம் திகதிய 2312/77 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ள) V ஆம் அட்டவணையில் வகைப்படுத்தி பட்டியலிடப்பட்டுள்ள தெரிவு செய்யப்பட்ட வாசனைத் திரவியங்கள் (உதாரணம்: மிளகு, சாதிக்காய் மற்றும் சாதிப்பத்திரி போன்ற) இறக்குமதி செய்வதற்கு அனுமதி வழங்கல். |
| 12 | 2398/18 | 2024.08.21 | 2021 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க கொழும்பு துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழுச் சட்டத்தின் ஏற்பாடுகளின் அர்த்தத்தில் அதிகாரமளிக்கப்பட்ட நபர்களுக்கு திறந்த கணக்கு முறையின் கீழ் பொருட்களை இறக்குமதி செய்வதற்கு அனுமதி வழங்கல். |
| 13 | 2401/21 | 2024.09.11 | அமைச்சரவையினால் முறையாக அனுமதி வழங்கப்பட்ட ஒப்பந்தத்துடன் இலங்கை முதலீட்டு சபையின் கீழ் செயற்படும் மோட்டார் வாகனங்களை ஒன்றுகோர்க்கும் வேலைத்திட்டத்திற்காக புதிய வெவ்வேறு பாகங்களாக கழற்றப்பட்ட (SKD) தொகுதிகளை இறக்குமதி செய்வதற்கு அனுமதி வழங்கல் |

| தொடர் இல. | அதிவிசேட வர்த்தமானி இல. | திகதி | விபரம் |
|---|---|---|---|
| 14 | 2413/37 | 2024.12.04 | 2024 டிசம்பர் 02 ஆம் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்தின் படி, 1006.30.19 மற்றும் 1006.30.29 ஆகிய இயைபு முறைக் குறியீடுகளின் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ள அரிசி இறக்குமதி செய்வதற்கான இறக்குமதிக் கட்டுப்பாட்டு உரிமத் (ICL) தேவையை 2024.12.20 திகதி வரை நீக்குவதற்கு அனுமதி வழங்கல். |
| 15 | 2415/35 | 2024.12.18 | மூன்று கட்டங்களின் கீழ் 304 இயைபு முறைக் குறியீடுகளின் (HS Codes) கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ள மோட்டார் வாகனம் மற்றும் ஏனைய மோட்டார் என்ஜின் பயன்படாத பொருட்களை இறக்குமதி செய்வதற்கான தற்காலிக இறக்குமதித் தடையை நீக்குவதற்கான முதற் கட்டமாக பொதுப் போக்குவரத்து நடவடிக்கைகளுக்கு பயன்படுத்தப்படும் வண்டிகள், விசேட தேவைகளுக்குப் பயன்படுத்தப்படும் வண்டிகள் மற்றும் ஏனைய மோட்டார் பயன்படாத வண்டிகளை இறக்குமதி செய்வதற்கான தற்காலிகத் தடை (52 HS குறியீடுகள்) அமைச்சரவை விஞ்ஞாபனத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளின் கீழ் நீக்குதல் |
| 16 | 2416/11 | 2024.12.24 | 2024 டிசம்பர் 04 ஆம் திகதிய 2413/37 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலின் அடிப்படையில் இறக்குமதிக் கட்டுப்பாட்டு உரிமத்தைப் பெற்றுக் கொள்ளாது இந்நாட்டிற்கு அரிசி இறக்குமதி செய்வதற்கு அனுமதி வழங்கப்பட்ட கால எல்லையை 2025 சனவரி மாதம் 10 வரை நீட்டித்தல். |

## அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் இலக்கம் 2366/19 – 2024.01.11

2023 சனவரி மாதம் 01 ஆம் திகதி 2312/78 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்ட 2023 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) ஒழுங்குவிதிகளின் அடிப்படையில் இறக்குமதித் தற்காலிகத் தடை விதிக்கப்பட்டுள்ள, இயைபு முறைக் குறியீடு 8702.10.75 இன் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ள மூன்று (03) வணிக வகுப்பு ராம்ப் வண்டிகள் ஸ்ரீ லங்கன் விமான நிறுவனத்தின் பாவனைக்காக இறக்குமதி செய்வதற்கு, ஐக்கிய நாடுகளின் சனத்தொகை நிதியத்தினால் அன்பளிப்பு செய்யப்பட்ட 03 நடமாடும் மகப்பேற்று அலகுகளை இறக்குமதி செய்வதற்கு, ஐக்கிய நாடுகளின் சிறுவர் நிதியத்தினால் வழங்கப்பட்ட 21 டபள் கெப் ரக வண்டிகளைப் பெற்றுக் கொள்வதற்கு, தொழில் உரிம முறைமையை நிறுவும் போது இலங்கை மற்றும் கொரியக் குடியரசுக்கு இடையில் கைச்சாத்திடப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் கீழ் வழங்கப்பட்ட மோட்டார் வாகனமொன்று, கொரிய நிதியுதவி வேலைத்திட்டத்தின் பாவனைக்கு பெற்றுக் கொள்வதற்கு மற்றும் இலங்கை அரசு மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கி இணைந்து கூட்டாக நிதி வழங்கும் விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப மனிதவள அபிவிருத்தி

வேலைத்திட்டத்திற்காக 02 பஸ் வண்டிகளைப் பெற்றுக் கொள்வதற்காக 2023 டிசம்பர் 11 ஆம் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்தை நடைமுறைப்படுத்துவதற்காக 2024 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) ஒழுங்குவிதிகள் விதிக்கப்பட்டன.

### அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் இலக்கம் 2370/15 – 2024.02.07

இலங்கையின் உரிமம்பெற்ற வங்கிகளுக்கு முறையான வங்கி முறைகளினூடாக குறைந்த அந்நிய செலாவணித் தொகையை பரிமாறுதலின் கீழ் வெளிநாடுகளில் தொழில் புரியும் இலங்கையர்களுக்கு மின்சார மோட்டார் வாகனங்களை இறக்குமதி செய்வதற்கு அனுமதி வழங்குவதற்காக தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சரின் 2022 யூலை மாதம் 23 ஆம் திகதிய ஆம் 22/1028/625/001 இலக்க விஞ்ஞாபனத்திற்கு 2022 ஆகஸ்ட் மாதம் 08 ஆம் திகதி அமைச்சரவையினால் அனுமதி வழங்கப்பட்டது.

அதன்படி, 2023 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) ஒழுங்குவிதிகளில் 12(அ) ஒழுங்குவிதிக்கமைய, தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சின் 02/2022 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் செல்லுபடியாகும் ‘‘வாகன இறக்குமதி உரிமமொன்றை’’ பெற்றுக் கொண்ட புலம்பெயர் தொழிலாளர்களுக்கு 2023 டிசம்பர் 31 வரை முழுமையாக மின்சாரத்தில் இயங்கும் வாகனங்களை இறக்குமதி செய்வதற்கு அனுமதி வழங்கப்பட்டது.

திட்டத்தின் செல்லுபடியாகும் காலம் முடிவடைந்ததன் காரணமாக, மேலே குறிப்பிடப்பட்டுள்ளவாறு ‘‘வாகன இறக்குமதி உரிமத்தை’’ பெற்றுக் கொண்டுள்ள புலம்பெயர் தொழிலாளர்களினால் மோட்டார் வாகனங்களை இறக்குமதி செய்வதற்கு கடன் கடிதங்களை (LC) நிறுவும் காலத்தை 2024 யூன் 30 வரை நீட்டிப்பதை உள்ளடக்கி ‘‘வெளிநாடுகளில் பணிபுரியும் இலங்கையர்களுக்கு முழுமையாக மின்சாரத்தில் இயங்கும் வாகனங்களை இறக்குமதி செய்வதற்கு உரிமங்களை வழங்கும் திட்டம்’’ என்ற தலைப்பில் தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சரின் 2023 டிசம்பர் 22 ஆம் திகதிய 23/2522/625/018-III ஆம் இலக்க விஞ்ஞாபனத்தில் குறிப்பிடப்பட்டுள்ள முன்மொழிவுகளுக்கு அமைச்சரவையினால் 2024 சனவரி 08 ஆம் திகதி அனுமதி வழங்கப்பட்டதுடன் அதற்கமைய, 2023 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) ஒழுங்குவிதிகளில் 12(அ) ஆம் இலக்க ஒழுங்குவிதியில் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ள காலத்தை 2024 ஆகஸ்ட் 31 வரை நீட்டித்து 2024 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) ஒழுங்குவிதிகள் விதிக்கப்பட்டன.

### அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் இலக்கம் 2372/04 – 2024.02.19

2023 சனவரி மாதம் 01 ஆம் திகதிய 2312/77 ஆம் இலக்க வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 2023 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க விசேட இறக்குமதி உரிம ஒழுங்குவிதிகளின் மூலம் தொடர்ந்து நடைமுறைப்படுத்தப்படும், 2020 ஆகஸ்ட் மாதம் 17 ஆம் திகதிய 2189/4 ஆம் இலக்க வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 2020 ஆம் ஆண்டின் 05 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) ஒழுங்குவிதிகளின் மூலம் மிளகு, புளி, கறுவா, கராம்பு, சாதிக்காய், சாதிப்பத்திரி, ஏலக்காய், இஞ்சி மற்றும் மஞ்சள் போன்றவற்றுக்கு இறக்குமதிக் கட்டுப்பாட்டு உரிமங்கள் வழங்குவது நிறுத்தப்பட்டுள்ளது.

செயன்முறை மற்றும் மீள் ஏற்றுமதி நோக்கத்திற்காக “அனுமதிக்கப்பட்ட நிறுவனம்” என்ற பெயரைப் பெற்றுக் கொண்டுள்ள நிறுவனங்களினால், 10 இயைபு முறைக் குறியீடுகளின் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ள மிளகு, சாதிக்காய், ஏலக்காய் இஞ்சி மற்றும் மஞ்சள் இறக்குமதி செய்வதற்கு அனுமதி வழங்குதல் உள்ளிட்ட, “தேர்ந்தெடுக்கப்பட்ட நறுமணப் பொருட்கள் இறக்குமதி மற்றும் செயன்முறை மற்றும் எண்ணெய்ச் சாற்று வடிவு, ஒலியொரெசின் மற்றும் எஞ்சிய வடிவில் மீள் ஏற்றுமதி செய்யும் நடைமுறைக்கான அனுமதி” என்ற தலைப்பிலான முதலீட்டு மேம்பாட்டு அமைச்சரின் 2023 டிசம்பர் மாதம் 06 ஆம் திகதிய 23/2380/631/032 ஆம் இலக்க விஞ்ஞாபனத்திற்கு, 2023 டிசம்பர் மாதம் 18 ஆம் திகதி அமைச்சரவையினால் அனுமதி வழங்கப்பட்டது, அதன் படி, மேலே குறிப்பிடப்பட்டுள்ள 2023 டிசம்பர் 06 ஆம் திகதிய 23/2380/631/032 ஆம் இலக்க விஞ்ஞாபனத்தில் குறிப்பிடப்பட்டுள்ள முன்மொழிவுகளுக்கு அமைச்சரவையின் தீர்மானத்தை நடைமுறைப்படுத்தும் வகையில் 2024 ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) ஒழுங்குவிதிகள் விதிக்கப்பட்டன.

### அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் இலக்கம் 2373/28 – 2024.02.28

சட்டரீதியற்ற அந்நிய செலாவணி சந்தையின் செயற்பாடுகளின் அதிகரிப்பைக் கட்டுப்படுத்துதல் மற்றும் சுங்க விடுவிப்பின் போது இறக்குமதிக்கு பெறுமதி குறைந்த விலைப்பட்டியல்களை முன்வைப்பதைத் தடுக்கும் நோக்கில், இலங்கை மத்திய வங்கியினால் முன்மொழியப்பட்டவாறு தேர்ந்தெடுக்கப்பட்ட கொடுப்பனவு முறைகளின் உள்ளீடுகள், அதாவது திறந்த கணக்கு கொடுப்பனவு முறை, பொருட்களை விற்பனை செய்த பின்னர் பணம் செலுத்தும் முறை, ஆவணங்களுக்கு எதிரான கொடுப்பனவு, ஆவணங்களுக்கு எதிரான ஏற்பு கொடுப்பனவு முறை, 2020 மே மாதம் 06 ஆம் திகதிய 2278/21 ஆம் இலக்க வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 2022 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கொடுப்பனவு முறைகளுக்கான இறக்குமதிக் கட்டுப்பாட்டு ஒழுங்குவிதிகளினால் கட்டுப்படுத்தப்பட்டன. அதில் 2022 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கொடுப்பனவு முறைகளுக்கான இறக்குமதிக் கட்டுப்பாட்டு ஒழுங்குவிதிகளில் 6 ஆம் இலக்க ஒழுங்குவிதிக்கமைய, உரிய உரிமம் பெற்ற வங்கியினால் புரொபோர்மா விலைப்பட்டியலில், கப்பல் ஏற்றுமதிச் சீட்டில் / விமான ஏற்றுமதிச் சீட்டில், கப்பல் / விமானம் ஏற்றப்பட்ட தினத்திற்கு முன்னர் பெற்றுக் கொள்ளப்பட வேண்டிய முன் ஒப்புதல் பெறும் தேவையொன்றுடன் ஆவணங்களுக்கு எதிரான கொடுப்பனவு மற்றும் ஆவணங்களுக்கு எதிரான ஏற்பு ஆகிய கொடுப்பனவு முறைகள் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளன.

எவ்வாறாயினும், சில வணிக வங்கிகள் மற்றும் இறக்குமதியாளர்களினால் அவர்களது உரிமம் பெற்ற வங்கிகளில் அந்நிய செலாவணி இருப்பதனால் மேலே குறிப்பிடப்பட்டுள்ள முன் ஒப்புதல் பெறும் தேவையை நீக்குமாறு கோரிக்கைகள் விடுக்கப்பட்டன. அதற்கமைய, ‘ஆவணங்களுக்கு எதிரான கொடுப்பனவு மற்றும் ஆவணங்களுக்கு எதிரான ஏற்பு’ செயற்படுத்துவதற்கு முன் ஒப்புதல் பெறும் தேவையை தொடர்ந்து நடத்திச் செல்வது சம்பந்தமாக இலங்கை மத்திய வங்கியுடன் ஆலோசனை / கலந்துரையாடிய பின்னர் உள்நாட்டு அந்நிய செலாவணி சந்தையின் சமீப கால அதிகரிப்பை கருத்திற் கொண்டு அக் கொடுப்பனவு முறைகளில் அவ்வாறான முன் ஒப்புதல் பெறும் தேவையை நீக்குவதற்கு முடிவெடுக்கப்பட்டது.

அதன் படி, 2024 பெப்ரவரி மாதம் 29 ஆம் திகதியிலிருந்து நடைமுறைப்படுத்தும் வகையில், 2022 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கொடுப்பனவு முறைகளுக்கான இறக்குமதிக் கட்டுப்பாட்டு

ஒழுங்குவிதிகளில் 6 ஆம் இலக்க ஒழுங்குவிதிகயை நீக்கி, 2024 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க கொடுப்பனவு முறைகளுக்கான இறக்குமதிக் கட்டுப்பாட்டு ஒழுங்குவிதிகள் விதிக்கப்பட்டன.

### அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் இலக்கம் 2376/14 – 2024.03.19

2023 சனவரி மாதம் 01 ஆம் திகதிய 2312/78 ஆம் இலக்க வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 2023 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) ஒழுங்குவிதிகளின் அடிப்படையில் இறக்குமதித் தற்காலிகத் தடைக்கு உட்பட்ட கழிவு அகற்றும் வாகனம் உள்ளிட்ட பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் மற்றும் கொழும்பு துறைமுகத்தின் நாட்டு எல்லையூடாக உரித்தாகும் சுகாதாரத் திறனை மேம்படுத்துவதற்கான உபகரணங்கள் / பொருட்களை இறக்குமதி செய்வதற்கு, துறைமுக, கப்பல்துறை மற்றும் விமான சேவைகள் அமைச்சரினால் 2024 பெப்ரவரி மாதம் 07 ஆம் திகதிய தனது அமைச்சரவை விஞ்ஞாபன இலக்கம் 24/0309/628/018 ஊடாக அமைச்சரவையின் அனுமதியைக் கோரியிருந்ததுடன், முன்மொழியப்பட்ட நிறுவனங்களின் அவசரத் தேவை மற்றும் நோக்கத்தைக் கருத்திற் கொண்டு, மேற்படி அமைச்சரவை விஞ்ஞாபனத்தில் குறிப்பிடப்பட்டுள்ள மோட்டார் வாகனங்கள் மற்றும் அவ் விஞ்ஞாபனத்திற்கு நிதி, பொருளாதார நிலைபேறு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சரினால் 2024 பெப்ரவரி 26 ஆம் திகதி முன்வைக்கப்பட்ட கண்காணிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள ஏதாவது வாகனத்தை இறக்குமதி செய்வதற்கு அமைச்சரவையினால் அவர்களது 2024 பெப்ரவரி மாதம் 26 ஆம் திகதிய தீர்மானத்தின் மூலம் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

மேலும், நிதி, பொருளாதார நிலைபேறு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சரின் மேற்படி கண்காணிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அரச நிறுவனம் அல்லது அரசின் வேலைத்திட்டத்தின் மூலம், அன்பளிப்பாக / நிதியுதவி வழங்கும் வேலைத்திட்ட ஒப்பந்தங்களின் ஏற்பாடுகளுக்கமைய மோட்டார் வாகன இறக்குமதிக்காக மற்றும் அரச அல்லது தனியார் வைத்தியசாலைகளின் நேரடிப் பாவனைக்காக 'அந்நிய செலாவணி செலவிடப்படாத (NFE) முறையில் புதிய / பயன்படுத்தப்பட்ட அம்பியுலன்ஸ் வண்டிகளை இறக்குமதி செய்வதற்கு அனுமதி வழங்குவதற்கு திறைசேரி செயலாளருக்கு அதிகாரமளிப்பதற்கும் அமைச்சரவையினால் மேற்குறிப்பிடப்பட்ட தீர்மானத்தின் மூலம் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

அதன்படி, மேற்படி அமைச்சரவையின் தீர்மானத்தை நடைமுறைப்படுத்தும் வகையில், 2024 ஆம் ஆண்டின் 05 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் கட்டுப்பாட்டு ஒழுங்குவிதிகள் விதிக்கப்பட்டன.

### அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் இலக்கம் 2379/03 – 2024.04.08

2023 சனவரி மாதம் 01 ஆம் திகதிய 2312/77 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 2023 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க விசேட இறக்குமதி உரிம ஒழுங்குவிதிகளின் மூலம் 0713.31.22 மற்றும் 0713.31.29 ஆகிய இயைபு முறைக் குறியீடுகளின் வகைப்படுத்தப்பட்டுள்ள உளுந்து இறக்குமதி செய்வதற்கு இறக்குமதிக் கட்டுப்பாட்டு உரிமங்களை வழங்குவது நிறுத்தப்பட்டுள்ளது. எவ்வாறாயினும், இலங்கை அரச (பொது) வர்த்தகக் கூட்டுத்தாபனம் (STC), தேசிய உணவு ஊக்குவிப்பு சபை மற்றும் இலங்கை ஹதபிம அதிகார சபைக்கு உளுந்து, மொத்த அளவு 2,000 மெற்றிக் தொன் இறக்குமதி செய்வதற்கு அனுமதி வழங்குதல் உள்ளிட்ட, 2024 ஏப்ரல் மாதம் 01 ஆம் திகதி நிதி, பொருளாதார நிலைபேறு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சரின்

கண்காணிப்புடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய, 'உளுந்து இறக்குமதி செய்வதற்கு அனுமதியைப் பெற்றுக் கொள்ளல்' என்ற தலைப்பில் கமத்தொழில் மற்றும் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சரினால் முன்வைக்கப்பட்ட 2024 மார்ச் மாதம் 25 ஆம் திகதிய 24/0614/612/034 ஆம் இலக்க அமைச்சரவை விஞ்ஞாபனத்தில் குறிப்பிடப்பட்டுள்ள முன்மொழிவுகளுக்கு 2024 ஏப்ரல் மாதம் 01 ஆம் திகதி அமைச்சரவையினால் அனுமதி வழங்கப்பட்டது.

அதன்படி, மேற்படி அமைச்சரவையின் அனுமதியின் அடிப்படையில் மேலே குறிப்பிடப்பட்டுள்ள நிறுவனங்களுக்கு இறக்குமதி உரிமங்களின் கீழ் உளுந்து இறக்குமதி செய்வதற்கு அனுமதி வழங்கி, 2024 ஆம் ஆண்டின் 06 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) ஒழுங்குவிதிகள் விதிக்கப்பட்டன.

## அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் இலக்கம் 2384/34 – 2024.05.17

2023 சனவரி மாதம் 01 ஆம் திகதிய 2312/78 ஆம் இலக்க வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ள 2023 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) ஒழுங்குவிதிகளுக்கமைய இலங்கைக்கு மோட்டார் வாகனங்கள் இறக்குமதி செய்வது தற்காலிகமாகத் தடை செய்யப்பட்டுள்ளது. சுற்றுலா மற்றும் காணி அமைச்சரினால் தமது 2024 ஏப்ரல் மாதம் 01 ஆம் திகதிய 24/0644/615/003-I ஆம் இலக்க விஞ்ஞாபனத்தின் மூலம் "சுற்றுலாத்துறையை துரிதமாக அபிவிருத்தி செய்வதற்கு போக்குவரத்து வசதிகளை செய்தல்" என்ற தலைப்பில் சுற்றுலாப் பயணிகளின் போக்குவரத்தின் நேரடிப் பாவணைகாக மாத்திரம் சிறிய அளவிலான பஸ் வண்டிகள் மற்றும் 250 பஸ் வண்டிகள் மற்றும் 750 வேன் வண்டிகள் (6-15 இருக்கைகள்) உள்ளடங்கலாக 1,000 புதிய மோட்டார் வாகனங்களை இறக்குமதி செய்வதற்கு அமைச்சரவையின் அனுமதி கோரப்பட்டிருந்தது. அம் முன்மொழிவை அடிப்படையாகக் கொண்டு 2024 ஏப்ரல் மாதம் 01 ஆம் திகதிய அமைச்சரவையின் தீர்மானத்தை நடைமுறைப்படுத்துவதற்காக, 2024 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) ஒழுங்குவிதிகள் விதிக்கப்பட்டன.

## அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் இலக்கம் 2384/35 – 2024.05.17

தேசிய பொருளாதாரம், பொது சுகாதாரம் மற்றும் சுற்றுச் சூழலைப் பாதுகாக்கும் நோக்கில், தேர்ந்தெடுக்கப்பட்ட பொருட்களை இறக்குமதி செய்யும் போது தரம் மற்றும் தரத்தை உறுதி செய்வதற்காக 2017 இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் கட்டுப்பாட்டு (தரநிலைகள் மற்றும் தரக்கட்டுப்பாடு) ஒழுங்குவிதிகள், 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் (கட்டுப்பாட்டு) சட்டத்தின் கீழ் விதிக்கப்பட்டு 2018 மார்ச் மாதம் 29 ஆம் திகதிய 2064/34 ஆம் இலக்க வர்த்தமானியில் வெளியிடப்பட்டன.

தொழில்நுட்ப வளர்ச்சி, உற்பத்திகளின் பல்வகைப்படுத்தல், தரத்தை மேம்படுத்தல், பொது சுகாதாரம் மற்றும் சுற்றுச் சூழல் பாதுகாப்பு சார்ந்த பிரச்சினைகள் அதிகரித்ததைக் கருத்திற் கொண்டு, அவசர, பாதுகாப்பு மற்றும் வினைத்திறனான வணிக ஓட்டத்திற்கு வசதியளித்தல் மற்றும் உள்நாட்டு உற்பத்தி மற்றும் இறக்குமதி உற்பத்திகளுக்கு நியாயமான மற்றும் சமமானதோர் சூழலை உருவாக்குவது தொடர்பாக நடைமுறையிலுள்ள தரநிலைகள் மற்றும் தரக்கட்டுப்பாட்டு அளவுகோல்களை புதுப்பித்தல் மற்றும் புதிய தரநிலைகள் மற்றும் தரக்கட்டுப்பாட்டு அளவுகோல்களை அறிமுகப்படுத்தும் தேவை காரணமாக இலங்கை கட்டளைகள் நிறுவனத்தினால் அரச நிறுவனங்கள், வர்த்தக சங்கங்கள் மற்றும் வர்த்தக சபைகள் உள்ளிட்ட பிரதான தரப்பினர்களுடன் கலந்துரையாடி,

நடைமுறையிலுள்ள தரநிலைகள் மற்றும் தரக்கட்டுப்பாட்டு அளவுகோல்களை (2017 இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் கட்டுப்பாட்டு (தரநிலைகள் மற்றும் தரக்கட்டுப்பாடு) ஒழுங்குவிதிகளில் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ள) திருத்தம் செய்யப்பட்டு புதுப்பிக்கப்பட்டுள்ளதோடு வளர்ந்து வரும் உற்பத்தித் தொழில்நுட்பம், நுகர்வு முறைகள் மற்றும் வணிக ஓட்டங்களை முகங்கொடுப்பதற்காக புதிய தரநிலைகள் மற்றும் தரக்கட்டுப்பாட்டு அளவுகோல்கள் நிறுவப்பட்டுள்ளன.

அதற்கமைய, நிதி, பொருளாதார நிலைபேறு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சரினால் 2024 பெப்ரவரி மாதம் 28 ஆம் திகதிய 24/0466/604/056 ஆம் இலக்க விஞ்ஞாபனத்தின் மூலம் முன்மொழியப்பட்டுள்ளவாறு, புதுப்பிக்கப்பட்ட தரநிலைகள் மற்றும் தரக்கட்டுப்பாட்டு அளவுகோல்களை நடைமுறைப்படுத்துவதற்கான ஒழுங்குவிதிகளை விதிப்பதற்கு அமைச்சரவையினால் 2024 மார்ச் மாதம் 11 ஆம் திகதி அனுமதி வழங்கப்பட்டதுடன், அதன்படி, 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் (கட்டுப்பாட்டு) சட்டத்தின் கீழ் தரநிலைகள் மற்றும் தரக்கட்டுப்பாட்டு ஒழுங்குவிதிகள் விதிக்கப்பட்டன.

## அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் இலக்கம் 2387/35 – 2024.06.06

முதலீட்டு மேம்பாட்டு அமைச்சரினால் ‘பெறுமதி சேர்த்தல் மற்றும் மீள் ஏற்றுமதி நோக்கத்திற்காக பாக்கு இறக்குமதி செய்தல்’ என்ற தலைப்பில் முன்வைக்கப்பட்ட 2024 மே 22 ஆம் திகதிய 24/0983/631/019-I ஆம் இலக்க விஞ்ஞாபனம் தொடர்பாக 2024 மே 22 ஆம் திகதிய அமைச்சரவையின் தீர்மானத்திற்கமைய, இறக்குமதிக் கட்டுப்பாட்டு உரிமமொன்றைப் பெற்றுக் கொள்வதன் கீழ் செயன்முறை மற்றும் மீள் ஏற்றுமதி நோக்கத்திற்காக “அனுமதிக்கப்பட்ட நிறுவனங்களால்” பாக்கு (உலர்த்திய, கோது நீக்கிய மற்றும் சூடேற்ற செயற்பாட்டிற்கு உட்படுத்தப்பட்ட) இறக்குமதி செய்வதற்கு முடியுமானவாறு இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) ஒழுங்குவிதிகளை திருத்தம் செய்வதற்கு அனுமதி வழங்கப்பட்டது.

அதன்படி, முதலீட்டு மேம்பாட்டு அமைச்சரின் 23/0585/631/008-I ஆம் இலக்க விஞ்ஞாபனத்தின் அடிப்படையில் 2023 மார்ச் 27 ஆம் திகதிய அமைச்சரவையின் தீர்மானத்தின் மூலம் அனுமதிக்கப்பட்டவாறு, “நடைமுறை: மீள் ஏற்றுமதி நோக்கத்திற்காக பாக்கு செயன்முறைப்படுத்தும் கைத்தொழில்” இற்கு அமைய வெளியிடப்பட்ட அனுமதிக்கப்பட்ட நிறுவனமொன்றினால், உள்நாட்டு சந்தையில் வேறு எந்த வகையிலும் நேரடியாக அல்லது மறைமுகமாக விற்பனை செய்யும் நோக்கத்திற்கல்லாது, இயைபு முறைக் குறியீட்டில் நான்கு (04) இலக்கத்தினாலான மாற்றத்துடன் ஆகக் குறைந்தது 35% உள்நாட்டு பெறுமதி சேர்த்தலுடன் மற்றும் அந்நடைமுறையின் ஏனைய விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளின் கீழ், செயன்முறை மற்றும் மீள் ஏற்றுமதி செய்யும் நோக்கத்திற்காக, 2023 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க விசேட இறக்குமதி உரிம ஒழுங்குவிதிகளின் V அட்டவணையில் பட்டியலிடப்பட்டுள்ள இயைபு முறைக் குறியீடு 0802.80.90 – பிற (உலர்த்திய, கோது நீக்கிய மற்றும் சூடேற்ற செயற்பாட்டிற்கு உட்படுத்தப்பட்ட) இன் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ள பாக்கு இறக்குமதி செய்வதற்கு இறக்குமதி செய்வதற்கு 2024 ஆம் ஆண்டின் 08 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) ஒழுங்குவிதிகள் விதிக்கப்பட்டன.

## அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் இலக்கம் 2390/19 – 2024.06.28

பயறு (இயைபு முறைக் குறியீடு 0713.31.19), உளுந்து (இயைபு முறைக் குறியீடு 0713.31.22 மற்றும் 0713.31.29), கௌபி (இயைபு முறைக் குறியீடு 0713.35.90), குரக்கன் (இயைபு முறைக் குறியீடு 1008.29.10), நிலக்கடலை (இயைபு முறைக் குறியீடு 1202.30, 1202.41 மற்றும் 1202.42) மற்றும் சோயா மா (இயைபு முறைக் குறியீடு 1208.10) இறக்குமதி செய்வதற்கு இறக்குமதிக் கட்டுப்பாட்டு உரிமத் தேவையை நீக்குவதற்காக, அவ்வாறான அனைத்து பொருட் தொகைகளினதும் கப்பல் ஏற்றுமதிச் சீட்டு அல்லது விமான ஏற்றுமதிச் சீட்டுத் தினத்திற்கு முன்னர் விவசாயத் திணைக்களத்தின் தேசிய தாவர தடுப்புக் காப்பு சேவையினால் வழங்கப்பட்ட தேசிய தாவர தடுப்புக் காப்பு உரிமமொன்றை சமர்ப்பிப்பதன் கீழ் இவ் இறக்குமதி செய்யப்பட்ட உணவாகக் கொள்ளப்படும் தானியத் தொகையை விடுவிப்பதற்கு இலங்கை சுங்கப் பணிப்பாளர் நாயகத்திற்கு உத்தரவிட்டு "உணவாகக் கொள்ளப்படுகின்ற தேர்ந்தெடுக்கப்பட்ட தானிய வகைகளை இறக்குமதி செய்யும் போது இறக்குமதிக் கட்டுப்பாட்டு உரிமத் தேவையை நீக்குதல்" என்ற தலைப்பில் நிதி, பொருளாதார நிலைபேறு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சரின் 2024 மே மாதம் 13 ஆம் திகதிய 24/0939/604/104 ஆம் இலக்க விஞ்ஞாபனத்திற்கு வழங்கப்பட்ட தமது 2024 யூன் 03 ஆம் திகதிய தீர்மானத்தின் மூலம் அமைச்சரவையின் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இதற்கு மேலதிகமாக, இலங்கை சுங்கத்தினால் பாதுகாப்பு அமைச்சிற்கு மற்றும் இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் கட்டுப்பாட்டுத் திணைக்களத்திடம் கோரப்பட்ட கோரிக்கையின் அடிப்படையில், இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் கட்டுப்பாட்டுத் திணைக்களத்தின் முன்மொழிவுக்கமைய, ஒழுங்குபடுத்தப்படாத இறக்குமதி காரணமாக தேசிய பாதுகாப்பு ஏற்படும் பாதிப்புகளுக்கு முடிவாக 88.06 இயைபு முறைத் தலைப்பில் 11 இயைபு முறைக் குறியீடுகளின் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ள ஆளில்லா விமானங்களை (ட்ரோன் விமானம்) மேலே குறிப்பிடப்பட்ட 2023 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க விசேட இறக்குமதி உரிம ஒழுங்குவிதிகளின் I ஆம் அட்டவணைக்கு உட்சேர்க்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. அத் தீர்மானத்தை நடைமுறைப்படுத்தும் வகையில் 2024 ஆம் ஆண்டின் 09 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) ஒழுங்குவிதிகள் விதிக்கப்பட்டன.

## அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் இலக்கம் 2393/36 – 2024.07.18

'அனுமதிக்கப்பட்ட நிறுவனம்' என்ற பெயரைப் பெற்றுள்ள நிறுவனங்களினால், 10 இயைபு முறைக் குறியீடுகளின் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ள மிளகு, சாதிக்காய், ஏலக்காய், இஞ்சி மற்றும் மஞ்சள் இறக்குமதி செய்வதற்கு அனுமதி வழங்குவதற்காக 2023 டிசம்பர் மாதம் 18 ஆம் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்தின் படி விதிக்கப்பட்ட 2024 ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) ஒழுங்குவிதிகளில், 4 மற்றும் 6 ஆம் இலக்க ஒழுங்குவிதிகளை திருத்தம் செய்வதன் கீழ் அவ் ஒழுங்குவிதியை, இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் கீழ் புதிய ஒழுங்குவிதியொன்றாக விதிப்பதற்கு அமைச்சரவையினால் 2024 யூன் 11 ஆம் திகதி அனுமதி வழங்கப்பட்டது. அவ் அமைச்சரவைத் தீர்மானத்தை நடைமுறைப்படுத்தும் வகையில் 2024 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) ஒழுங்குவிதிகள் விதிக்கப்பட்டன.

## அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் இலக்கம் 2398/18 – 2024.08.21

நாட்டின் அந்நிய செலாவணி இருப்பை பலப்படுத்தல், மிகவும் பாதுகாப்பான மற்றும் சரியான கொடுப்பனவு முறைகளை உறுதிப்படுத்தல் மற்றும் பாதுகாப்பற்ற கடன் கொடுக்கல் வாங்கல்கள் பற்றிய அபாயங்களைக் குறைக்கும் நோக்கில் 2022 மே 06 ஆம் திகதிய 2278/21 ஆம் இலக்க வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 2022 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கொடுப்பனவு முறைகளுக்கான இறக்குமதிக் கட்டுப்பாட்டு ஒழுங்குவிதிகளின் மூலம் திறந்த கணக்கு முறையின் கீழ் பொருட்களை இறக்குமதி செய்வது கட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும், கொழும்பு துறைமுக நகரத்தின் அதிகார எல்லைக்குள் மற்றும் அங்கிருந்து நேரடி வெளிநாட்டு முதலீடுகளைப் பெற்றுக் கொள்ளும் மூலோபாய முக்கியத்துவம் வாய்ந்த வியாபாரங்களின் எதிர்பார்த்த பொருளாதார மற்றும் சமூகப் பங்களிப்பை கருத்திற் கொண்ட பின்னர், 2021 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க கொழும்புத் துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழுச் சட்டத்தின் ஏற்பாடுகளின் அர்த்தத்தில் "மூலோபாய முக்கியத்துவம் வாய்ந்த வியாபாரமொன்று" எனப் பெயரிடப்பட்டுள்ள அதிகாரமளிக்கப்பட்ட நபரினால் 2021 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க கொழும்புத் துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழுச் சட்டத்தின் கீழ் கொழும்புத் துறைமுக நகர அதிகார எல்லைக்கு மற்றும் அங்கிருந்து அவ்வாறான அதிகாரமளிக்கப்பட்ட நபரின் அனுமதிக்கப்பட்ட எந்தவொரு செயற்பாடொன்றையும் செய்வதற்கு, மூலதன / வேலைத்திட்டம் சார்ந்த பொருட்கள் உள்ளிட்ட பொருட்களை, அப் பொருட்கள் அதிகாரமளிக்கப்பட்ட நபரின் பெயருக்கு மாற்றப்பட்டிருந்தால் மாத்திரம், இலங்கையின் எந்தவொரு துறைமுகமொன்றிற்கும் / விமான நிலையமொன்றிற்கும் வந்தடைவதற்கு முன்னர் பெற்றுக் கொள்ளப்பட்ட கொழும்புத் துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழுவின் பரிந்துரையின் அடிப்படையில், திறந்த கணக்குக் கொடுப்பனவு முறையின் கீழ் இறக்குமதி மற்றும் சுங்க விடுவிப்புக்கான இலங்கை சுங்கப் பணிப்பாளர் நாயகத்தினால் அனுமதி வழங்குவதற்காக 2024 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க கொடுப்பனவு முறைகளுக்கான இறக்குமதிக் கட்டுப்பாட்டு ஒழுங்குவிதிகள் விதிக்கப்பட்டன.

## அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் இலக்கம் 2401/21 – 2024.09.11

87 இயைபு முறைக் குறியீட்டு அத்தியாயத்தின் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ள மோட்டார் வாகனங்களை இறக்குமதி செய்வதற்கான தற்காலிகத் தடையானது மாறாது காணப்படுவதுடன் 2023 சனவரி 01 ஆம் திகதிய 2312/78 ஆம் இலக்க வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 2023 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) ஒழுங்குவிதிகளின் மூலம் தொடர்ந்து நடைமுறைப்படுத்தப்படுகின்றது. இலங்கை முதலீட்டு சபையின் கீழ் செயற்படுத்தப்படும், அமைச்சரவையினால் முறையாக அனுமதி வழங்கப்பட்ட ஒப்பந்தத்துடன் கூடிய மோட்டார் வாகன ஒன்றுகோர்க்கும் வேலைத்திட்டத்திற்காக 87.02, 87.03 மற்றும் 87.04 இயைபு முறைத் தலைப்பின் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ள புதிய வெவ்வேறு பாகங்களாக கழற்றப்பட்ட (SKD) தொகுதிகளை இறக்குமதி செய்வதற்கு அனுமதி வழங்குவதற்கு, 2024 ஆகஸ்ட் 26 ஆம் திகதிய 24/1706/601/102 ஆம் இலக்க விஞ்ஞாபனத்திற்கு 2024 ஆகஸ்ட் 26 ஆம் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்தின் மூலம் அனுமதி வழங்கப்பட்டது.

அவ் அமைச்சரவைத் தீர்மானத்தை நடைமுறைப்படுத்துவதற்காக, இலங்கை முதலீட்டு சபையின் (BOI) கீழ் நிறுவப்பட்டு செயற்படுகின்ற நிறுவனமொன்றிற்கு, அந் நிறுவனம் மற்றும் இலங்கை முதலீட்டு சபைக்கிடையில் மேற்கொள்ளப்பட்டுள்ள மற்றும் அமைச்சரவையினால் முறையாக அனுமதி

வழங்கப்பட்ட ஒப்பந்தத்தின் ஏற்பாடுகளுக்கமைய தமது மோட்டார் வாகனங்களை ஒன்றுகோர்க்கும் வசதிக்குள் அவ்வாறான நிறுவனமொன்றினால் மோட்டார் வாகனங்களை ஒன்றுகோர்ப்பதற்காக, 87.02, 87.03 மற்றும் 87.04 இயைபு முறைத் தலைப்பின் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ள பதிவு செய்யப்படாத (புதிய) வெவ்வேறு பாகங்களாக கழற்றப்பட்ட (SKD) தொகுதிகளை இறக்குமதி மற்றும் சுங்க விடுவிப்பு செய்வதற்காக இலங்கை முதலீட்டு சபைக்குப் பொறுப்பான அமைச்சின் செயலாளரின் பரிந்துரையின் அடிப்படையில் இலங்கை சுங்கப் பணிப்பாளர் நாயகத்தினால் அனுமதி வழங்குவதற்கு, 2024 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) ஒழுங்குவிதிகள் விதிக்கப்பட்டன.

### அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் இலக்கம் 2413/37 – 2024.12.04

2023 சனவரி மாதம் 01 ஆம் திகதிய 2312/77 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்ட 2023 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க விசேட இறக்குமதி உரிம ஒழுங்குவிதிகளுக்கு அமைய, 1006.30.19 மற்றும் 1006.30.29 ஆகிய இயைபு முறைக் குறியீடுகளின் கீழ் வகைப்படுத்தப்பட்ட அரிசி இறக்குமதி செய்வதற்கு இறக்குமதிக் கட்டுப்பாட்டு உரிமங்களை வழங்குவது மீள் அறிவித்தல் வரை நிறுத்தப்பட்டுள்ளது. எனினும், உள்நாட்டு சந்தையில் காணப்படும் நாட்டரிசி மற்றும் ஏனைய அரிசி வகைகளின் தட்டுப்பாட்டோடு கடந்த நாட்களில் காணப்பட்ட அதிக மழைவீழ்ச்சி காரணமாக நெற்பயிர்ச்சைக்கு ஏற்பட்டுள்ள பெரும் இழப்புக்களைக் கருத்திற் கொண்டு போதுமான அளவு அரிசித் தொகையை உள்நாட்டு சந்தைக்கு வழங்குவதை உறுதிப்படுத்துவதற்காக அரிசி இறக்குமதிக்கு தற்போது விதிக்கப்பட்டுள்ள கட்டுப்பாடுகளை தற்காலிகமாக நீக்குவது பற்றி அமைச்சரவையினால் கருத்திற் கொள்ளப்பட்ட பின்னர், வணிக, வாணிப, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சர், கமத்தொழில், கால்நடை வள, காணி மற்றும் வடிகாலமைப்பு அமைச்சர் மற்றும் தொழில் அமைச்சரினால் முன்வைக்கப்பட்ட 24/2067/817/001 ஆம் இலக்க ஒன்றிணைந்த விஞ்ஞாபனத்திற்கான 2024 நவம்பர் 25 ஆம் திகதிய அமைச்சரவைத் தீர்மானம் தொடர்பாக 2024 டிசம்பர் 02 ஆம் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்தின் மூலம் இறக்குமதிக் கட்டுப்பாட்டு உரிமத்தைப் பெற்றுக் கொள்ளாது 2024 டிசம்பர் 20 ஆம் திகதி வரை இந்நாட்டிற்கு அரிசி இறக்குமதி செய்வதற்கு அனுமதி வழங்கப்பட்டது. அதன்படி, 2024 டிசம்பர் 02 ஆம் திகதி அல்லது அதன் பின்னர் இலங்கையின் துறைமுகத்திற்கு / விமான நிலையத்திற்கு வந்தடைதல் மற்றும் ஏனைய ஆவணங்களுடன் சுங்கப் பதிவு (சுங்க வெளிப்படுத்துகை) 2024 டிசம்பர் 04 முதல் 2024 டிசம்பர் 20 வரையான காலப்பகுதிக்குள் சுங்கப் பணிப்பாளர் நாயகத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும் என்ற நிப்ந்தனையின் கீழ், 1006.30.19 மற்றும் 1006.30.29 ஆகிய இயைபு முறைக் குறியீடுகளின் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ள அரிசி இறக்குமதி செய்வதற்கு இறக்குமதிக் கட்டுப்பாட்டு உரிமத் (ICL) தேவையை 2024 டிசம்பர் 20 ஆம் திகதி வரை நீக்குவதற்காக 2024 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) ஒழுங்குவிதிகள் விதிக்கப்பட்டன.

### அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் இலக்கம் 2415/35 – 2024.12.18

2020 மே மாதம் 22 ஆம் திகதிய 2176/19 ஆம் இலக்க வர்த்தமானியில் வெளியிடப்பட்ட ஒழுங்குவிதிகளின் மூலம், தேர்ந்தெடுக்கப்பட்ட இயைபு முறைக் குறியீடுகளின் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ள வாகனங்களை இறக்குமதி செய்வது தற்காலிகமாகத் நிறுத்தப்பட்டது. அத் தற்காலிக இடைநிறுத்தம், 2023 சனவரி மாதம் 01 ஆம் திகதிய 2312/78 ஆம் இலக்க வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 2023 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு)

ஒழுங்குவிதிகளின் அடிப்படையில் 304 இயைபு முறைக் குறியீடுகளின் கீழ் தொடர்ந்து நடைமுறைப்படுத்தப்பட்டது.

இவ்வாறான பின்னணியில், 2024 செப்டம்பர் மாதம் 12 ஆம் திகதிய 24/1945/604/208 ஆம் இலக்க அமைச்சரவை விஞ்ஞாபனத்தின் அடிப்படையில், 304 இயைபு முறைக் குறியீடுகளில் 273 இயைபு முறைக் குறியீடுகளின் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ள (31 இயைபு முறைக் குறியீடுகளின் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ள முச்சக்கர வண்டிகள் மற்றும் அனுமதிக்கப்பட்ட கால எல்லையைத் தாண்டிய மோட்டார் வாகனத்தைத் தவிர) மோட்டார் வாகன இறக்குமதிக்கு விதிக்கப்பட்டுள்ள தற்காலிக இடைநிறுத்தத்தை கீழே குறிப்பிடப்பட்டுள்ளவாறு மூன்று கட்டங்களில் நீக்குவதற்கு, 2024 செப்டம்பர் மாதம் 13 ஆம் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்தின் மூலம் அனுமதி வழங்கப்பட்டது.

அதன்படி, இலங்கை மத்திய வங்கியின் ஒப்புதலுடன், I ஆம் கட்டத்தின் கீழ் 52 இயைபு முறைக் குறியீடுகளின் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ள பொதுப் போக்குவரத்து நடவடிக்கைகளுக்கு பயன்படுத்தப்படும் பஸ் வண்டி, விசேட தேவைகளுக்குப் பயன்படுத்தப்படும் வண்டிகள் மற்றும் ஏனைய மோட்டார் என்ஜின்கள் பயன்படாத சக்கரங்களைக் கொண்ட பொருட்களை இறக்குமதி செய்வதற்கான தற்காலிக இறக்குமதித் தடையை நீக்கி, 2024 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) ஒழுங்குவிதிகள் விதிக்கப்பட்டன.

### அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் இலக்கம் 2416/11 – 2024.12.24

2024 டிசம்பர் 04 ஆம் திகதிய 2413/37 ஆம் இலக்க வர்த்தமானி மூலம் இறக்குமதிக் கட்டுப்பாட்டு உரிமத்தைப் பெற்றுக் கொள்ளாது 2024 டிசம்பர் மாதம் 04 ஆம் திகதி முதல் 2024 டிசம்பர் மாதம் 20 ஆம் திகதி வரை இந்நாட்டிற்கு அரிசி இறக்குமதி செய்வதற்கு அனுமதி வழங்கப்பட்டதுடன் அக் காலப்பகுதியை 2025 சனவரி மாதம் 10 வரை நீட்டிப்பதற்காக “அரிசி இறக்குமதி / கொள்வனவிற்கு அனுமதி” என்ற தலைப்பில் வணிக, வாணிப, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சர் முன்வைத்த 24/2256/817/001-II ஆம் இலக்க விஞ்ஞாபனத்திற்கு 2024 டிசம்பர் மாதம் 23 ஆம் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்தின் அடிப்படையில், இறக்குமதிக் கட்டுப்பாட்டு உரிமத்தைப் பெற்றுக் கொள்ளாது அரிசி இறக்குமதி செய்வதற்கு வழங்கப்பட்ட அனுமதியை 2025 சனவரி 10 வரை நீட்டிப்பதற்கு அனுமதி வழங்குவதற்கு 2024 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) ஒழுங்குவிதிகள் விதிக்கப்பட்டன.

## 2.1.2 செயற்பாட்டு ஆலோசனைகள் மற்றும் உள்ளக சுற்றறிக்கைகள் வெளியிடல்

திணைக்களத்தினால் ஒரு வருடத்திற்குள் வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தல்களில் உள்ளடங்கியுள்ள ஒழுங்குவிதிகள் தொடர்பாக இலங்கை சுங்கம், வணிக வங்கிகள் மற்றும் திணைக்கள அலுவலர்களை அறிவூட்டுவது மிக முக்கியமாகும். அதனால், வர்த்தமானியொன்று வெளியிடப்படும் அனைத்து சந்தர்ப்பங்களிலும் உரிய தரப்பினரின் தெளிவிற்காக செயற்பாட்டு ஆலோசனைகளை வெளியிடல் மற்றும் உள்ளக சுற்றறிக்கையை வெளியிடுதல் திணைக்களத்தின் பிரதான பொறுப்பாகும். அதற்கமைய, 2024 ஆம் ஆண்டில்

திணைக்களத்தினால் 16 செயற்பாட்டு ஆலோசனைகள் மற்றும் 19 உள்ளக சுற்றறிக்கைகள் வெளியிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது.

## 2.2. இறக்குமதி மற்றும் ஏற்றுமதி உரிமங்களை வழங்குதல்

இறக்குமதி மற்றும் ஏற்றுமதிச் செயற்பாடுகளை ஒழுங்குபடுத்தும் நிறுவனமொன்றாக இத் திணைக்களத்தினால் இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரப்படும் பொருட்களுக்கு உரிமங்களை வழங்குவது பிரதான பணியாகும். அதன்படி, அப் பணியை முறையாக மற்றும் வினைத்திறனாக செய்து சேவை பெறுநருக்கு சிறந்தவொரு சேவையை வழங்குவதற்கு இத் திணைக்களத்தில் 5 அலகுகள் நிறுவப்பட்டுள்ளதுடன், அவ் அலகுகள் மூலம் உரிமங்கள் வழங்கும் செயற்பாடு நடைபெறுகின்றது.

அதன் அடிப்படையில் 2024 ஆம் ஆண்டில் ஒவ்வொரு அலகுகளினாலும் வெளியிடப்பட்ட இறக்குமதிக் கட்டுப்பாட்டு உரிமங்கள் தொடர்பான தகவல்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளவாறாகும்.

### 2.2.1. அலகு 01 - ஔடதங்கள் மற்றும் சத்திர சிகிச்சை உபகரணங்கள்

இறக்குமதி உரிமங்களை வழங்குவதற்கு ஔடதங்கள் மற்றும் சத்திர சிகிச்சை உபகரணங்கள் பிரதானமாக ஐந்து தொகுதிகளாக வகைப்படுத்தப்பட்டுள்ளதுடன், ஒவ்வொரு தொகுதியின் கீழும் 2024 ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட உரிம எண்ணிக்கைகள் கீழே உள்ளவாறாகும்.

| இலக்கம் | விபரங்கள் | வகை | அனுமதிப் பத்திரங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 | மேற்கத்தேய ஔடதங்கள் | 400 | 914 |
| 2 | மிருக ஔடதங்கள் | 410 | 404 |
| 3 | ஆயுர்வேத ஔடதங்கள் | 420 | 175 |
| 4 | ஹோமியோபத்தி ஔடதங்கள் | 430 | 10 |
| 5 | சிகிச்சை உபகரணங்கள் | 450 | 80 |
| | **மொத்தம்** | | **1583** |

**ஔடதங்கள் மற்றும் சிகிச்சை உபகரணங்களுக்கு வழங்கப்பட்ட உரிமங்களின் எண்ணிக்கை**




## 2.2.2 அலகு 02 – பாவிக்கப்பட்ட வாகனங்கள் மற்றும் வாகன உதிரிப் பாகங்கள்

இவ் அலகினால் பயன்படுத்தப்பட்ட மோட்டார் வாகனங்கள் மற்றும் வாகன உதிரிப் பாகங்களுக்கு உரிமங்கள் வழங்குவதோடு 2024 ஆம் ஆண்டில் பின்வருமாறு உரிமங்கள் வழங்கப்பட்டுள்ளன.

| | விபரம் | வகை | அனுமதிப் பத்திரங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 | வெளிநாட்டுப் பணியாளர்களினால் வழங்கப்படுகின்ற நன்கொடைகள் | 110 | **06** |
| 2 | சமூக சேவை நிறுவனங்களின் நன்கொடைகள் | 150 | **09** |
| 3 | விசேட தேவை வாகனங்கள் | 180 | **01** |
| 4 | விவசாயத்துறைக்கான பயன்படுத்தப்பட்ட டிரக்டர் | 190 | **01** |
| 5 | ஆகாய விமானங்கள் மற்றும் ஹெலிகப்டர்களின் உதிரிப் பாகங்கள் | 210 | **187** |
| 6 | இயந்திரம் | 220 | **02** |
| 7 | வாகனங்கள் மற்றும் உதிரிப் பாகங்கள் | 225 | **02** |
| 8 | பொடி ஷெல் | 230 | **38** |
| 9 | பயன்படுத்தப்பட்ட மோட்டார் சைக்கிள்கள் | 240 | **02** |

| | | | |
|---|---|---|---|
| 10 | மின் மோட்டார் சைக்கிள்கள் | 242 | **154** |
| 11 | சைக்கிள்கள் | 244 | **13** |
| 12 | தலைக்கவசம் | 245 | **30** |
| 13 | வாகன சட்டகம் (Chassis) | 290 | **168** |
| 14 | இருக்கைகள் (பயன்படுத்தப்பட்ட வாகன இருக்கைகள்) | 320 | **03** |
| 15 | பயன்படுத்தப்பட்ட உடைகள் | 720 | **24** |
| மொத்தம் | | | **640** |

## பயன்படுத்திய வாகனங்கள் மற்றும் வாகன உதிரிப்பாகங்களுக்கு வழங்கப்பட்ட உரிமங்களின் எண்ணிக்கை



### 2.2.3 . அலகு 3 - இரசாயனங்கள், உரங்கள், பூச்சிக்கொல்லிகள் மற்றும் தொழில்துறை மூலப் பொருட்கள் இறக்குமதி மற்றும் ஏற்றுமதி

2024 ஆம் ஆண்டில் இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்ட இரசாயனங்கள், உரங்கள், பூச்சிக்கொல்லிகள் மற்றும் தொழில்துறை மூலப்பொருட்கள் மற்றும் ஏற்றுமதிப் பொருட்களுக்கு வழங்கப்பட்ட உரிமங்களின் விபரங்கள் பின்வருமாறு.

| | **விபரங்கள்** | **குழு** | **உரிமங்களின் எண்ணிக்கை** |
|---|---|---|---|
| **1** | முன்னோடி இரசாயனப் பொருட்கள் மற்றும் இரசாயனப் பொருட்கள் | **500** | **508** |
| **2** | பெற்றோலிய உற்பத்திப் பொருட்கள் | **510** | **1452** |
| **3** | விவசாய இரசாயனங்கள் தவிர்ந்த ஏனைய இரசாயனப் பொருட்கள், பூச்சிக்கொல்லிகள் | **520** | **1940** |
| **4** | கதிரியக்க பொருட்கள் | **530** | **182** |
| **5** | மதுசாரம் | **540** | **229** |
| **6** | உலோகங்கள், உலோகத் துணிக்கைகள் ஏற்றுமதி | **710** | **317** |
| **7** | உலோகங்கள், உலோகத் துணிக்கைகள் இறக்குமதி | **715** | **153** |
| **8** | பிளாஸ்ரிக் உணவு கொள்கலன்கள் | **730** | **01** |
| **9** | கரிம கழிவுகள் | **735** | **99** |
| **மொத்தம்** | | | **4,881** |

**இரசாயன பொருட்கள், உரங்கள், பூச்சிக்கொல்லிகள் மற்றும் தொழில்துறை மூலப்பொருட்கள் இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக்கு வழங்கப்பட்ட உரிமங்கள்**




### 2.2.4 அலகு 04 - கையடக்க தொலைபேசிகள், தொடர்பு சாதனங்கள் மற்றும் பிற

2024 ஆம் ஆண்டில் கையடக்கத் தொலைபேசிகள், தொடர்பாடல் உபகரணங்கள் மற்றும் பிற இறக்குமதி உரிமங்கள் தொடர்பான விபரங்கள் பின்வருமாறு.

| | வகை | குழு | உரிமங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 | வெடிபொருட்கள் மற்றும் ஆயுதங்கள் | 600 | 207 |
| 2 | வெட்டப்பட்ட பலகை மற்றும் மரக் குற்றிகள் | 602 | 108 |
| 3 | கையடக்கத் தொலைபேசி (பயன்படுத்தப்பட்டவை /புதிய) | 615 | 3770 |
| 4 | தொலைத்தொடர்பு உபகரணங்கள் | 620 | 1205 |
| 5 | கணினிகள் | 625 | 04 |
| 6 | வெப்ப குழாய்கள் | 631 | 16 |
| 7 | குளிரூட்டல் வாயுக்கள் | 640 | 99 |
| 8 | குளிரூட்டிகள் | 645 | 167 |
| 9 | வட்டுக்களினால் இயக்கப்படும் விளையாட்டு உபகரணங்கள் மற்றும் நாணயத்தால் இயக்கப்படும் விளையாட்டு உபகரணங்கள் | 650 | 07 |
| 10 | மின் செருகிகள் மற்றும் கெவேனிகள் | 655 | 79 |
| 11 | தூர இயக்கியின் மூலம் செயற்படுகின்ற விளையாட்டுப் பொருட்கள் | 660 | 91 |
| 12 | சிகரெட் தாள்கள் | 670 | 69 |
| 13 | பயன்படுத்தப்பட்ட வீட்டு உபகரணங்கள் | 680 | 01 |
| 14 | வாள்கள் (சர்கியுலர் வாள்கள்/ ஜிட் வாள்கள்) | 685 | 102 |
| 15 | அச்சு இயந்திரங்கள் | 690 | 210 |
| 16 | வானிலை பலூன்கள் | 695 | 01 |
| | மொத்தம் | | **6,136** |

**கையடக்கத் தொலைபேசிகள் மற்றும் தொடர்பாடல் உபகரணங்கள் மற்றும் பிற இறக்குமதிகளுக்கு வழங்கப்பட்ட உரிமங்கள்**




### 2.2.5 அலகு 5 – விலங்கு, விலங்கு உற்பத்திகள் மற்றும் ஏனைய இறக்குமதிகள்

பிற இறக்குமதிகளுக்கு கீழ் வருமாறு உரிமங்கள் வழங்கப்பட்டுள்ளன.

| | வகை | குழு | உரிமங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 | விலங்கு மற்றும் விலங்கு பொருட்கள் | 550 | 2222 |
| 2 | உப்பு | 505 | 27 |

| | | | |
|---|---|---|---|
| 3 | சீனி | 515 | 17 |
| 4 | உறைந்த மீன் | 555 | 278 |
| 5 | உறைந்த கணவாய் | 556 | 2 |
| 6 | தோல் நீக்கப்படாத மரமுந்திரிகை | 560 | 36 |
| 7 | தானிய வகைகள் | 570 | 174 |
| 8 | அரிசி | 572 | 173 |
| 9 | சக்தியளிக்கும் பானங்கள் | 575 | 55 |
| 10 | தேயிலை | 580 | 687 |
| 11 | பாம் ஓலின் மற்றும் பாம் ஸ்டெரின் | 750 | 61 |
| 12 | தங்கம் | 760 | 37 |
| 13 | புடவை | 725 | 1 |
| | **மொத்தம்** | | 3,770 |

## விலங்கு, விலங்கு உற்பத்திகள் மற்றும் ஏனைய இறக்குமதிகளுக்காக வழங்கப்பட்ட உரிமங்கள்



### 2.2.6 2024 ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட இறக்குமதி மற்றும் ஏற்றுமதி உரிமங்கள் - மாதாந்தம்

| மாதங்கள் | அலகு 1 | அலகு 2 | அலகு 3 | அலகு 4 | அலகு 5 | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| ஜனவரி | 164 | 44 | 484 | 776 | 445 | 1913 |
| பெப்ரவரி | 136 | 31 | 453 | 561 | 245 | 1426 |
| மார்ச் | 103 | 48 | 436 | 376 | 228 | 1191 |
| ஏப்ரல் | 131 | 28 | 388 | 287 | 249 | 1083 |
| மே | 119 | 62 | 373 | 337 | 299 | 1190 |
| யூன் | 114 | 42 | 349 | 411 | 253 | 1169 |
| யூலை | 132 | 58 | 492 | 532 | 367 | 1581 |
| ஆகஸ்ட் | 123 | 58 | 403 | 614 | 397 | 1595 |
| செப்டெம்பர் | 125 | 74 | 318 | 535 | 231 | 1283 |
| ஒக்டோபர் | 141 | 52 | 398 | 564 | 408 | 1563 |
| நவம்பர் | 145 | 92 | 415 | 575 | 332 | 1559 |
| டிசம்பர் | 150 | 51 | 372 | 568 | 316 | 1457 |
| மொத்தம் | 1,583 | 640 | 4,881 | 6,136 | 3,770 | 17,010 |



### 2.2.7 கடந்த 5 ஆண்டுகளில் வழங்கப்பட்ட இறக்குமதி மற்றும் ஏற்றுமதி உரிமங்களின் எண்ணிக்கை

| | பொருட்கள் | 2020 | 2021 | 2022 | 2023 | 2024 |
|---|---|---|---|---|---|---|
| அலகு 01 | மருந்துகள் | 2,594 | 2,255 | 1,832 | 1,945 | 1,583 |
| அலகு 02 | வாகனங்கள் மற்றும் உதிரிப் பாகங்கள் | 197 | 284 | 647 | 385 | 640 |
| அலகு 03 | இரசாயனப் பொருட்கள், உரங்கள், பூச்சிக்கொல்லிகள் தொழில்துறை மூலப் பொருட்கள் இறக்குமதி மற்றும் ஏற்றுமதி | 3,956 | 4,313 | 3,653 | 4,256 | 4,881 |
| அலகு 04 | கைத்தொலைபேசிகள், தொடர்பு சாதனங்கள் மற்றும் ஏனையவை | 5,083 | 8,982 | 4,231 | 5,218 | 6,136 |
| அலகு 05 | விலங்குகள், விலங்கு உற்பத்திகள் மற்றும் ஏனைய இறக்குமதிகள் | 4,299 | 3,742 | 3,443 | 3,282 | 3,770 |
| மொத்தம் | | 16,129 | 19,576 | 13,806 | 15,086 | 170,10 |

## 2.3 கடந்த 3 வருடங்களில் வழங்கப்பட்ட இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் கட்டுப்பாட்டு உரிமங்கள் தொடர்பான தரவு மதிப்பாய்வு

### 2.3.1 ஔடதங்கள் மற்றும் சத்திர சிகிச்சை உபகரணங்கள் - அலகு 1

2015 ஆம் ஆண்டின் 05 ஆம் இலக்க தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்துதல் அதிகார சபைச் சட்டத்தின் 109 ஆம் பிரிவின் படி, தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்துதல் அதிகார சபையினால் வழங்கப்படும் அனுமதியின் கீழ், மருந்துகள் மற்றும் வைத்திய உபகரணங்களுக்கு இறக்குமதி உரிமங்களை வழங்குவதற்கு முன்னர் எடுக்க வேண்டிய பாதுகாப்பான வழிமுறைகள் மற்றும் இறக்குமதி உரிமங்களில் உள்ளடக்க வேண்டிய விசேட நிபந்தனைகள் இவ் அலகினால் அறியப்பட்டுள்ளது. மேலும், 2024 ஆம் ஆண்டில் பெறப்பட்ட கூட்டு இறக்குமதி உரிமப் பயன்பாடு பற்றிய ஆய்வு செய்யப்பட்டுள்ளதுடன், வழங்குவதற்குரிய நிபந்தனைகள் மதிப்பாய்வு மற்றும் தயார்படுத்தல் செய்யப்பட்டுள்ளது.

2023 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2024 ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட மொத்த உரிமத் தொகையில் சிறிது குறைவு ஏற்பட்டுள்ளதுடன், 2024 வருடத்தில் 03 நிறுவனங்களுக்குப் புதிய கூட்டு இறக்குமதி உரிமங்கள் வழங்கப்பட்டுள்ளன. முன்னைய வருடத்தில்

வழங்கப்பட்ட இறக்குமதி உரிமத் தொகையை விட சிறு அளவிலான குறைவொன்று 2024 வருடத்தில் காணப்படுவதுடன், உலகப் பொருளாதார நெருக்கடியுடன் தொடர்புபட்ட உள்நாட்டு அந்நிய செலாவணி இருப்பு இதற்கு காரணமாக அமைந்தது.

### 2.3.2 பயன்படுத்தப்பட்ட வாகனங்கள் மற்றும் வாகன பாகங்கள் - அலகு 2

கொவிட்-19 உலகளாவிய தொற்றுநோய் நிலைமை காரணமாக நாட்டில் ஏற்பட்ட பொருளாதார ஸ்திரமின்மைக்கு தீர்வாக வாகனங்கள் மற்றும் உதிரிப் பாகங்களின் இறக்குமதிகளை 2020 ஆம் ஆண்டில் தற்காலிகமாக இடைநிறுத்துவதற்காக ஒழுங்குவிதிகளை வெளியிடுவதற்கு இத் திணைக்களத்திற்கு நேர்ந்தது. அதனூடாக நாணய மாற்று விகிதத்தின் மீதான அழுத்தத்தை குறைத்தல் இங்கு பிரதான நோக்கமாக இருந்தது. இவ் ஒழுங்குவிதிகளை வெளியிட்டதன் காரணமாக 2020 ஆம் ஆண்டிற்கு முன்னர் காணப்பட்ட நிலைமையை ஒப்பிடும் போது இவ் அலகினால் வாகன இறக்குமதிக்கு வழங்கப்பட்ட உரிமங்களின் எண்ணிக்கையில் கணிசமான குறைவைக் காணக்கூடியதாக உள்ளது.

எவ்வாறாயினும், அரசினால் எடுக்கப்பட்ட கொள்கை ரீதியான தீர்மானத்திற்கமைய 2021 ஆம் ஆண்டில் உள்நாட்டில் வாகனங்களை ஒன்றுகோர்க்கும் கைத்தொழிலை நிலைநாட்டுவதற்குத் தேவையான வசதிகளை வழங்குவதற்கு எமது திணைக்களத்திற்கு முடிந்தது. அதன்படி, 2021 ஆம் ஆண்டு முதல் 2024 ஆம் ஆண்டு வரை உரிமக் கட்டுப்பாட்டின் கீழ் வாகனங்களை ஒன்றுகோர்க்கும் கைத்தொழிலாளர்களுக்குத் தேவையான வாகன உதிரிப் பாகங்களுக்கான இறக்குமதிக் கட்டுப்பாட்டு உரிமங்கள் இத்திணைக்களத்தினால் வழங்கப்பட்டன. அதற்கமைய, வாகன உடற் பாகங்கள் மற்றும் மோட்டார் சைக்கிள் சட்டகங்களின் இறக்குமதி கணிசமான அளவு அதிகரித்தமை 2021 முதல் 2024 ஆண்டுகளின் தரவு ஆய்வின் போது காணக்கூடியதாக உள்ளது.

2022 ஆகஸ்ட் மாதம் 23 ஆம் திகதிய 2294/29 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி மூலம் மின் மோட்டார் சைக்கிள் மற்றும் துவிச்சக்கர வண்டிகளை இறக்குமதி உரிமக் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரப்பட்டது. வாகன இறக்குமதிகளுக்குத் தற்காலிக தடையொன்று காணப்படும் இக் கால கட்டத்தில் வெளிநாடுகளில் தொழில் புரியும் இந் நாட்டு பிரஜைகளுக்கு மீண்டும் இலங்கைக்கு வரும் போது மின் மோட்டார் சைக்கிளொன்று அல்லது துவிச்சக்கர வண்டியொன்றை கொண்டு வருதல் 2022 ஆம் ஆண்டிலிருந்து இன்று வரை படிப்படியாகக் குறைந்துள்ளது. ஆனாலும், மின் மோட்டார் சைக்கிள் இறக்குமதி செய்வதற்காக புதிய இறக்குமதியாளர்கள் இத் துறைக்கு உள்நுழைந்ததன் காரணமாக மின் மோட்டார் சைக்கிள் இறக்குமதிக் கைத்தொழிலில் பெரும் எழுச்சியை 2024 இறக்குமதி கட்டுப்பாட்டு உரிமத் தரவுகளிலிருந்து காணக்கூடியதாக உள்ளது.

2022 மார்ச் மாதம் 09 ஆம் திகதிய 2270/18 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலின் மூலம் மற்றும் 2022 ஏப்ரல் மாதம் 31 ஆம் திகதி 2274/42 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலின் மூலம் கண்ணாடிப் பொருட்கள், வீட்டுப் பொருட்கள், மெழுகுவர்த்திகள், தூய்மைப்படுத்தும் உபகரணங்கள், கருப்புக் கண்ணாடிகள், கடிகாரங்கள்

மற்றும் இசைப் பொருட்கள் போன்ற பொருட்கள் உரிமக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டதுடன் இப் பொருட்களுக்கு 2022 ஆம் ஆண்டில் உரிமங்களை வழங்குதலினூடாக அவ்வாண்டில் அலகு 2 இன் மூலம் வழங்கப்பட்ட உரிமங்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. பின்னர் அப் பொருட்கள் 2022 மே மாதம் 31 ஆம் திகதிய 2282/21 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி மூலம் உரிமக் கட்டுப்பாட்டிலிருந்து நீக்கப்பட்டது.

உரிமக் கட்டுப்பாட்டுப் பொருளொன்றாக ஹெல்மட் இருப்பதுடன், கிரிக்கட் விளையாட்டிற்குப் பயன்படுத்தும் ஹெல்மட்டிற்கு இறக்குமதிக் கட்டுப்பாட்டு உரிமங்களைப் பெற்றுக் கொள்ளுதல் 2022 ஆம் ஆண்டு முதல் 2024 ஆம் ஆண்டு வரை படிப்படையாக அதிகரித்ததைக் காட்டுகின்றது.

மேலும், 2024 யூன் மாதம் 28 ஆம் திகதிய 2390/19 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி மூலம் ஓட்டுனரில்லா விமானத்தின் இயைபு முறைக் குறியீட்டுக்கான (HS Code) மீளாய்வு செய்யப்பட்டு உரிமக் கட்டுப்பாட்டின் கீழ்க் கொண்டுவரப்பட்டது. அதன் காரணமாக 2024 ஆம் ஆண்டில் இப் பொருளுக்கான இறக்குமதிக் கட்டுப்பாட்டு உரிமங்களைப் பெற்றுக் கொள்வது பெருமளவில் அதிகரித்ததைக் காண முடியும்.

அதன்படி, இவ் அலகினால் வழங்கப்பட்ட மொத்த உரிமங்களை 2023 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது பெரும் அதிகரிப்பைக் காட்டுவதுடன், 2023 ஆம் ஆண்டை விடுத்து 2020 - 2024 காலப்பகுதியில் படிப்படியான வளர்ச்சியைக் காட்டுகின்றது.

### 2.3.3 இரசாயனப் பொருட்கள், உரங்கள், பூச்சிக்கொல்லிகள் மற்றும் கைத்தொழில் மூலப் பொருட்கள் இறக்குமதி மற்றும் ஏற்றுமதி - அலகு 3

இறக்குமதி செய்யப்படுகின்ற முன்னோடி இரசாயன பொருட்கள், பெற்றோலியம் சார்ந்த உற்பத்திகள், கதிர்வீச்சுப் பொருட்கள், மதுசாரம் சார்ந்த மூலப் பொருட்கள், ஏனைய கைத்தொழிலிற்குத் தேவையான இரசாயனங்கள், வேறு மூலப் பொருட்களின் இறக்குமதிக்கான உரிமங்களை வழங்குதல் மற்றும் உலோகத் துணிக்கைகளை ஏற்றுமதி செய்வதற்கு உரிமங்கள் அலகு 3 இனால் வழங்கப்படுகின்றது.

அதன்படி, 2024 ஆம் ஆண்டில் மொத்தமாக வழங்கப்பட்ட இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் கட்டுப்பாட்டு உரிமங்களின் எண்ணிக்கையானது கடந்த மூன்று வருடங்களைக் காட்டிலும் படிப்படியான வளர்ச்சியொன்றைக் காட்டுவதுடன், உள்நாட்டுப் பொருளாதார வளர்ச்சி மற்றும் அந்நிய செலாவணி விகித நிலைபேற்றின் வளர்ச்சி காரணமாக முன்னோடி இரசாயனப் பொருட்கள், பெற்றோலியம் சார்ந்த உற்பத்திகள், ஏனைய கைத்தொழில்களுக்குத் தேவையான இரசாயனங்கள், வேறு மூலப் பொருட்களை இறக்குமதி செய்வதற்கு வழங்கப்பட்ட உரிமங்கள் மற்றும் உலோகத் துணிக்கைகள் ஏற்றுமதிக்கு வழங்கப்பட்ட உரிமங்களின் எண்ணிக்கை அதிகரித்தமைக்கு காரணமாக அமைந்துள்ளமை அவதானிக்க முடிகின்றது.

### 2.3.4 தொலைபேசி, தொலைத் தொடர்பு உபகரணங்கள் மற்றும் வேறு – அலகு 4

தொலைபேசி, தொலைத் தொடர்பு உபகரணங்கள், இலத்திரனியல் உபகரணங்கள், மரப் பலகைகள், வாள்கள், தூர இயக்கி விளையாட்டுப் பொருட்கள், வெடி மருந்துகள், காற்றுத் துப்பாக்கிகன் போன்ற பொருட்களுக்கு கட்டுப்பாட்டு உரிமங்கள் இவ் அலகினால் வழங்கப்படுகின்றது.

2022 ஆம் ஆண்டு முதல் தற்போது வரை தொலைதூரக் கல்வி முறைமையுடன் கையடக்கத் தொலைபேசிப் பாவனை அதிகரிப்பு காரணமாக 615 தொகுதியின் கீழ் வழங்கப்படும் உரிமங்களின் எண்ணிக்கை அதிகரித்ததுடன், மொத்தமாக இவ் அலகினால் வழங்கப்பட்ட உரிமங்களின் எண்ணிக்கையில் அதிகரிப்பை அவதானிக்க முடிகிறது.

### 2.3.5 விலங்குகள், விலங்கு உற்பத்திகள் மற்றும் ஏனைய இறக்குமதிகள் - அலகு 5

2023 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 2024 ஆம் ஆண்டில் வழங்கப்பட்டுள்ள மொத்த உரிமங்களின் எண்ணிக்கையானது அதிகரித்த பெறுமானமொன்றைக் காட்டுவதுடன் தொகுதியாகப் பார்க்கும் போது சில தொகுதிகளில் வழங்கப்பட்ட உரிமங்களின் எண்ணிக்கை 2023 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது குறைந்த பெறுமானத்தைக் காட்டுகின்றது.

අමප/24/0904/612/047 ஆம் இலக்க மற்றும் 2024.05.22 ஆம் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்தின் மூலம், 2024 யூன் மாதத்திலிருந்து டிசம்பர் மாதம் வரை சோளம் 300,000 மெட்றிக் தொன் கால்நடை உணவு உற்பத்திக்காக இறக்குமதி உரிமங்களை வழங்குவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதுடன், அதற்காக தொகுதி இலக்கம் 550 இன் கீழ் 2,222 இறக்குமதிக் கட்டுப்பாட்டு உரிமங்கள் வழங்கப்பட்டதுடன், அவ் உரிமங்களின் அளவு 2023 ஆம் ஆண்டை விட அதிக பெறுமானத்தைக் காட்டுகின்றது.

அமைச்சரவை செயலாளரின் 24/0819/612//015 ஆம் இலக்க மற்றும் 2024.02.06 ஆம் திகதி வழங்கப்பட்ட தீர்மானத்தின் அடிப்படையில், உள்நாட்டு நுகர்விற்காக தோல் நீக்கப்பட்ட மரமுந்திரிகளை 15,000 மெட்றிக் தொன் அளவிற்கு இறக்குமதி உரிமங்களை வழங்குவதற்கு அனுமதி வழங்கப்பட்டதுடன், அதற்கு வழங்கப்பட்ட உரிமங்களின் எண்ணிக்கை 2023 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது அதிக பெறுமானத்தைக் காட்டுகின்றது.

தொகுதி இலக்கம் 580 இன் கீழ் தேயிலை இறக்குமதிக்காக வழங்கப்பட்டுள்ள உரிமங்களின் எண்ணிக்கை 2023 ஆம் ஆண்டில் 550 உம் 2024 ஆம் ஆண்டில் 687 உமாக காட்டுவதுடன், அது இத் தொகுதியில் ஒப்பீட்டளவில் வளர்ச்சியொன்றைக் காட்டுகின்றது.

2023 ஆண்டில் தொகுதி இலக்கம் 815 இன் கீழ், தயாரிக்கப்பட்ட மா, மாச்சத்துப் பொருட்கள், மோல்ட் போன்றவற்றுக்கு 358 இறக்குமதி உரிமங்கள் வழங்கப்பட்டிருந்தாலும், 2024 ஆம் ஆண்டில் இத் தொகுதியில் இறக்குமதி உரிமங்கள் வழங்கப்படாமையும் சிறப்பம்சமாகும்.

2023.12.19 ஆம் திகதிய 23/2457/627/032 ஆம் இலக்க அமைச்சரவைத் தீர்மானத்தின் மூலம், கீரி சம்பா அரிசி வகைக்கு ஒத்த GR -11 அரிசி வகையில் 50,000 மெட்றிக் தொன் அளவு இறக்குமதி செய்வதற்கு அனுமதி வழங்கப்பட்டதுடன், 2024 ஆம் ஆண்டில் 527

தொகுதி சனவரி மாதத்தில் உரிமங்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டதுடன் கடந்த ஆண்டுடன் ஒப்பிடும் போது 527 தொகுதியூடாக வழங்கப்பட்ட உரிமங்களின் எண்ணிக்கையில் வளர்ச்சியைக் காட்டுகின்றது.

## 2.4 இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் கொடுப்பனவு முறைகள் மற்றும் உத்தரவுகள்

வர்த்தக நோக்கில் மேற்கொள்ளப்படுகின்ற சர்வதேச வர்த்தகக் கொடுக்கல் வாங்கல்களை ஒழுங்குமுறைப்படுத்துதல் திணைக்களத்தின் மூலம் மேற்கொள்ளப்படுகின்றது. அதற்காக வெளிநாட்டுக் கொடுப்பனவு முறைகள் 1739/03 ஆம் இலக்க மற்றும் 2012.01.02 ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் வெளியிடப்பட்டுள்ளதுடன், அக் கொடுப்பனவு முறைகள் கீழே உள்ளவாறாகும். மேலும், இக் கொடுப்பனவு முறைகள் சம்பந்தமாக வணிக வங்கிகளுக்கு செயற்பாட்டு ஆலோசனைகள் தொடர்ந்து வழங்கப்படுகின்றன.

1. முற்கொடுப்பனவு (**Advanced Payments)**
2. ஆவணங்களுக்கு எதிரான ஏற்பு (**Documents against Acceptance - DA)**
3. கடன் கடிதம் (**Letters of Credit - LC)**
4. ஆவணங்களுக்கு எதிரான கொடுப்பனவு (**Documents against Payment)**
5. திறந்த கணக்கு (**Open Accounts - OA)**
6. பொருட்களை விற்பனை செய்த பின்னர் பணம் செலுத்தும் முறை (**Payments on Consignment Account Basis)**

மேலே குறிப்பிடப்பட்ட கொடுப்பனவு முறைகளுக்குரிய ஒழுங்குவிதிகளுக்கு இணங்குகின்ற பொருட்கள் இறக்குமதி செய்யப்படாத சந்தர்ப்பங்களில் அல்லது கொடுப்பனவு செய்யப்படாத போது அப்பொருட்களை இலங்கை சுங்கத்தினால் விடுவிப்பதற்கு முன்னர் மற்றும் இறக்குமதிக்கான கொடுப்பனவுகளைச் செய்வதற்கு அதற்குரிய காரணங்களை கவனத்திற் கொண்டு இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் கட்டுப்பாட்டாளர் நாயகத்தினால் அனுமதி வழங்கப்படும். அதன் பிரகாரம், அவ்வாறு 2024 ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட அனுமதிகள் கீழுள்ளவாறாகும்.

| 2024 ஆம் ஆண்டில் அலகு 02 மூலம் வழங்கப்பட்ட அனுமதிகள் | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| மாதங்கள் | அனுமதிகளின் வகைகள் | | | | | | | | |
| | முற்கொடுப்பனவு | ஆவணங்களுக்கு எதிரான ஏற்பு | திறந்த கணக்கு | மீள் ஏற்றுமதி | முதலீட்டு சபையில் பதிவு செய்யப்பட்ட தொழிற்சாலையிலிருந்து வெளியேற்றும் பொருட்களை உள்நாட்டு சந்தைக்கு விடுவித்தல் | மின் பரிமாற்றம் மற்றும் கடன் கடிதம் மீதான கொடுப்பனவுகள் | அந்நிய செலாவணி செலவிடப்படாத முறையிலான இறக்குமதிகள் | வேறு | மொத்தம் |
| ஜனவரி | 5 | 52 | 75 | 4 | 3 | 28 | 0 | 12 | 179 |
| பெப்ரவரி | 8 | 62 | 63 | 2 | 2 | 29 | 0 | 12 | 178 |
| மார்ச் | 6 | 48 | 48 | 1 | 4 | 20 | 0 | 8 | 135 |
| ஏப்ரல் | 5 | 60 | 59 | 2 | 0 | 21 | 0 | 7 | 154 |
| மே | 7 | 53 | 56 | 3 | 0 | 20 | 1 | 11 | 151 |
| யூன் | 5 | 61 | 25 | 3 | 0 | 19 | 1 | 13 | 127 |
| யூலை | 11 | 63 | 77 | 4 | 0 | 22 | 0 | 8 | 185 |
| ஆகஸ்ட் | 7 | 30 | 42 | 2 | 0 | 22 | 3 | 8 | 114 |
| செப்டெம்பர் | 5 | 53 | 41 | 3 | 0 | 14 | 1 | 18 | 135 |
| ஒக்டோபர் | 4 | 54 | 37 | 2 | 0 | 15 | 0 | 12 | 124 |
| நவம்பர் | 8 | 44 | 31 | 2 | 0 | 10 | 0 | 7 | 102 |
| டிசம்பர் | 2 | 47 | 44 | 8 | 0 | 14 | 1 | 11 | 127 |
| மொத்தம் | **73** | **627** | **598** | **36** | **9** | **234** | **7** | **127** | **1711** |

## 2.5. இலங்கையின் இறக்குமதி மற்றும் ஏற்றுமதி ஒழுங்குபடுத்தல்கள் மற்றும் வசதியளித்தல்

### 2.5.1 இறக்குமதி (தரநிலைகள் மற்றும் தரக் கட்டுப்பாடுகள்) கட்டளை

இந்நாட்டு நுகர்வோருக்கு, சிறந்த தரம் மற்றும் சிறந்த தரநிலைகளுடைய இறக்குமதிப் பொருட்களை பயன்படுத்துவதை உறுதி செய்வதற்காக இறக்குமதிப் பொருட்கள் இலங்கையின் தரநிலைகளுக்கு இணங்குதலைக் கட்டாயப்படுத்தி மற்றும் புதுப்பிக்கப்படும் தரநிலைகள் மற்றும் தரக் கட்டுப்பாட்டு ஒழுங்குவிதிகள் காலத்திற்கேற்ப வெளியிடப்படும். அதன்படி, தற்போது நடைமுறையிலுள்ள 2018 மார்ச் மாதம் 29 ஆம் திகதிய 2064/34 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட தரப்படுத்தலும் தரக்கட்டுப்பாடும் ஒழுங்குவிதிகளை திருத்தம் செய்ய வேண்டிய தேவை திணைக்களத்தினால் கண்டறியப்பட்டு அதற்கான நடவடிக்கைகளில் 2023 ஆம் ஆண்டில் நுழைந்தது.

தொழில்நுட்ப முன்னேற்றம், உற்பத்திப் பல்வகைமை, தரநிலைகளை மேம்படுத்தல், பொது சுகாதாரம் மற்றும் சுற்றுச் சூழல் பாதுகாப்பு சார்ந்த பிரச்சினைகள் அதிகரித்ததைக் கருத்திற் கொண்டு, அவசர, பாதுகாப்பு மற்றும் வினைத்திறனான வணிக ஓட்டத்திற்கு வசதியளித்தல் மற்றும் உள்நாட்டு உற்பத்தி மற்றும் இறக்குமதி உற்பத்திகளுக்கு நியாயமான மற்றும் சமமானதோர் சூழலை உருவாக்குவது தொடர்பாக நடைமுறையிலுள்ள தரநிலைகள் மற்றும் தரக்கட்டுப்பாட்டு அளவுகோல்களை புதுப்பித்தல் மற்றும் புதிய தரநிலைகள் மற்றும் தரக்கட்டுப்பாட்டு அளவுகோல்களை அறிமுகப்படுத்தும் தேவை காரணமாக இலங்கை கட்டளைகள் நிறுவனத்தினால் அரச நிறுவனங்கள், வர்த்தக சங்கங்கள் மற்றும் வர்த்தக சபைகள் உள்ளிட்ட பிரதான தரப்பினர்களுடன் கலந்துரையாடி, நடைமுறையிலுள்ள தரநிலைகள் மற்றும் தரக்கட்டுப்பாட்டு அளவுகோல்களை (2017 இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் கட்டுப்பாட்டு (தரநிலைகள் மற்றும் தரக்கட்டுப்பாடு) ஒழுங்குவிதிகளில் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ள) திருத்தம் செய்யப்பட்டு புதுப்பிக்கப்பட்டுள்ளதோடு வளர்ந்து வரும் உற்பத்தித் தொழில்நுட்பம், நுகர்வு முறைகள் மற்றும் வணிக ஓட்டங்களை முகங்கொடுப்பதற்காக புதிய தரநிலைகள் மற்றும் தரக்கட்டுப்பாட்டு அளவுகோல்கள் நிறுவப்பட்டுள்ளன.

அதன்படி, நிதி, பொருளாதார நிலைபேறு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சரினால் 2024 பெப்ரவரி மாதம் 28 ஆம் திகதிய 24/0466/604/056 ஆம் இலக்க விஞ்ஞாபனத்தின் மூலம் முன்மொழியப்பட்டுள்ளவாறு, புதுப்பிக்கப்பட்ட தரநிலைகள் மற்றும் தர அளவுகோல்களை நடைமுறைப்படுத்துவதற்கான ஒழுங்குவிதிகளை விதிப்பதற்கு அமைச்சரவையினால் 2024 மார்ச் மாதம் 11 ஆம் திகதி அனுமதி வழங்கப்பட்டதுடன், அதற்கமைய, இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) ஒழுங்குவிதிகளை விதித்து, 2024 மே மாதம் 17 ஆம் திகதிய 2384/35 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டது.

### 2.5.2 ஐக்கிய நாடுகளின் பாதுகாப்புச் சபையின் 1540 கொண்ட திட்டங்கள் இலங்கையில் நடைமுறைப்படுத்தல்.

அணு, இரசாயன, உயிரியல் ஆயுதங்கள் மற்றும் அவற்றை இலக்காகக் கொண்டு செய்யப்படுகின்ற முறைகள் பரவலடைவது சர்வதேச அமைதிக்கு அச்சுறுத்தலொன்றென்பதால், அவ் ஆயுதங்களை கையகப்படுத்தல், தம் வசம் வைத்திருத்தல் மற்றும் வழங்குதல், போக்குவரத்து செய்தல் மற்றும் உபயோகிப்பதற்கு அரசு சாரா செயற்பாட்டாளர்களுக்கு ஒத்துழைப்பு வழங்குவதைத் தடுக்க வேண்டும். ஐக்கிய நாடுகளின் பாதுகாப்பு சபையின் 1540 முன்மொழிவுகளை நடைமுறைப்படுத்துவது சம்பந்தமாக ஒழுங்குவிதிகளை விதிப்பதன் மூலம் அணு, இரசாயன, உயிரியல் ஆயுதங்கள் சார்ந்த பொருட்களை அமைதி நோக்கில் ஏற்றுமதி, மீள் ஏற்றுமதி, இடமாற்றம் செய்தல் (Transit) மற்றும் கப்பல் மாற்றம் செய்தல் (Trans-Shipment) ஆகியவற்றுக்குரிய சட்டங்களுக்கமைய நடைபெற வேண்டும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனாலும் அவ் விடயங்களை நிறைவேற்றுவதற்குப் போதுமான சட்டங்கள் இயற்றப்படாமை காரணமாக, இலங்கையானது இம் மூலோபாயப் பொருள் ஏற்றுமதி சம்பந்தமாக நன்கு திட்டமிடப்பட்ட சட்டக் கட்டமைப்பொன்றை தயாரிக்க வேண்டி உள்ளது. அவ்வாறான சர்வதேச உடன்படிக்கையொன்றை நடைமுறைப்படுத்துவதன் மூலம் எமது நாட்டின் மீதான பொறுப்பு மற்றும் பொறுப்புக் கூறல் வெளிப்படுவதோடு இந்நாட்டிற்கு பல நன்மைகளும் கிடைக்கும்.

மேற்படி தேவைப்பாடுகளுக்கமைவாக 1540 ஆம் இலக்க முன்மொழிவை இலங்கையில் நடைமுறைப்படுத்துவதற்கு 2019 செப்டெம்பர் மாதம் 11 ஆம் திகதிய அமைச்சரவையின் கொள்கை ரீதியான உடன்பாடு கிடைத்தது. அதேபோல், அம் முன்மொழிவுகளை செயற்திறனாக நடைமுறைப்படுத்தப்படுத்தல் மற்றும் தேவையான சட்டரீதியான மற்றும் தொழில்நுட்ப உதவிகளை பெற்றுக்கொள்வதற்கு சட்ட வரைஞர் குழு மற்றும் தொழில்நுட்பக் குழுவாக அரச நிறுவனங்களினாலான இரண்டு குழுக்கள் அமைச்சரவை அனுமதிக்கமைய நியமிக்கப்பட்டுள்ளன. அத் தொழில்நுட்பக் குழுவினால் ஐரோப்பிய சங்கத்தின் யுத்த உபகரணப் பட்டியல் (EU Military List) மற்றும் ஐரோப்பிய சங்கத்தின் இரட்டைப் பயன்பாட்டுக் கட்டுப்பாட்டுப் பட்டியலை (EU Dual – Use Control List) ஆங்கில மொழிக்கு மேலதிகமாக சிங்கள மற்றும் தமிழ் மொழிகளில் மொழிபெயர்த்து மும்மொழிகளில் தயாரிக்கப்பட்டுள்ளது.

எனினும், தற்போது இதற்கு வழங்கப்பட்டுள்ள அமைச்சரவை அனுமதி 2019 இல் வழங்கப்பட்டதென்பதால் அது காலம் கடந்த முடிவொன்றாகும். அதற்காக தற்போதைய அமைச்சரவையின் கொள்கை ரீதியான உடன்பாட்டைப் பெற்றுக் கொள்வது சிறந்தது என சட்ட வரைஞரினால் கருத்து தெரிவிக்கப்பட்டிருந்தது. அதன்படி தயாரிக்கப்பட்ட புதிய அமைச்சரவை விஞ்ஞாபனம் அமைச்சரவையின் அனுமதிக்காக முன்வைக்கப்பட்டதுடன் அதற்கு 2023 சனவரி மாதத்தில் அமைச்சரவையின் அனுமதி கிடைக்கப் பெற்றது.

மேலும், அம் முன்மொழிவுகளை நடைமுறைப்படுத்துவதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்வதற்கு மூலோபாய வர்த்தக முகாமைத்துவ சட்டம் (Strategic Trade Management

Act) வரைவு செய்யப்பட்டுள்ளதுடன் அது சட்ட வரைஞருக்கு அனுப்பப்பட்டுள்ளது. இங்கு 1540 ஆம் முன்மொழிவை இலங்கையில் மிகவும் செயற்திறனாக நடைமுறைப்படுத்துவதற்கு நியமிக்கப்பட்ட சட்ட வரைவுக் குழுவில், ஐக்கிய நாடுகளின் 1540 ஆம் முன்மொழிவு சம்பந்தமாக செயற்படுகின்ற விடய நிபுணர்களின் கண்காணிப்புடன், ஆசிய பசுபிக் வலய நாடுகளில் தற்போது நடைமுறைப்படுத்தப்படும் மூலோபாய வர்த்தக முகாமைத்துவச் சட்டத்தையும் ஆய்வு செய்து தயாரிக்கப்பட்ட இச் சட்ட வரைவானது சட்ட வரைஞருக்கு அனுப்பப்பட்டுள்ளது. அது தொடர்பாக சட்ட வரைஞரின் கண்காணிப்பின் அடிப்படையில் எதிர்கால நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

### 2.5.3 ஏற்றுமதிக்கு முன்னைய சோதனைச் சான்றிதழ் (Pre-Shipment Inspection Certificate)

பயன்படுத்தப்பட்ட வாகனங்களை இலங்கைக்கு இறக்குமதி செய்யும் போது, அவ் வாகனங்களுக்கு உரிய வாயு உமிழ்வுகளின் தரநிலைகள் மற்றும் பாதுகாப்பு அலகுகள் தர நிலைகளுக்கு உட்பட்டதா என சோதனைக்கு உட்படுத்தப்பட வேண்டியதால், அதற்காக ஏற்றுமதிக்கு முன்னைய சோதனைச் சான்றிதழை பெற வேண்டிய அதிகாரமளிக்கப்பட் நிறுவனங்கள் எவை என்பதனை உள்ளடக்கி 2013 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 04 ஆம் திகதிய 1804/17 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானிப் அறிவித்தல் மூலம் வெளியிடப்பட்டது.

2020 ஆம் ஆண்டிலிருந்து வாகன இறக்குமதி, கொவிட்-19 உலகளாவிய தொற்று நோய் காரணமாக தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டதுடன், இதன் காரணமாக வாகனங்களுக்கான ஏற்றுமதிக்கு முன்னைய சோதனைச் சான்றிதழ் வழங்கும் அதிகாரம் பெற்ற சோதனை நிறுவனங்களின் எண்ணிக்கையை அதிகரிக்கும் செயற்பாடு தற்காலிகமாக நிறுத்தப்பட்டது.

எவ்வாறாயினும், 2024 ஆம் ஆண்டில் நாட்டில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி நிலைமை படிப்படியாக மீட்சி நிலையை அடைந்ததுடன், வாகன இறக்குமதி இறக்குமதி தொடர்பாக அரசு கவனம் செலுத்தி, சில சில வாகனத் தொகுதிகளை இறக்குமதி செய்வதற்கு காணப்பட்ட தற்காலிகத் தடையை நீக்கியதுடன், ஏற்றுமதிக்கு முன்னைய சோதனைச் சான்றிதழை வழங்கும் நிறுவனங்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்கான செயற்பாட்டை மீண்டும் ஆரம்பித்து, 2019 இல் விசேட தொழில்நுட்பக் குழுவினால் தெரிவு செய்யப்பட்ட நிறுவனங்களினால் மீண்டும் முன்மொழிவுகளைப் பெற்று, பின்னர் பொருத்தமான நிறுவனங்களைத் தெரிவு செய்வதற்கான ஆரம்பகட்ட நடவடிக்கைகளை எடுத்தது.

2025 ஆம் ஆண்டின் முதற் காலாண்டில் அந் நிறுவனத்தைத் தெரிவு செய்யும் செயற்பாட்டை நிறைவு செய்து வர்த்தமானி அறிவித்தலொன்றை வெளியிடப்படவுள்ளது. அதன் மூலம் எதிர்காலத்தில் இறக்குமதியாளர்களுக்கு, வாகன இறக்குமதியின் போது எதிர்நோக்கும் சிரமங்களைக் குறைப்பதற்கும் அவற்றை கொள்வனவு செய்யும் நுகர்வோரின் பாதுகாப்பை உறுதி செய்வதற்கும் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

### 2.5.4. இறக்குமதிக் கட்டுப்பாட்டு ஒழுங்குவிதிகளை மீறும் இறக்குமதியாளர்களின் கருப்புப் பட்டியலை வெளியிடுவதற்கான வர்த்தமானி அறிவித்தல்

இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் (கட்டுப்பாட்டு) ஒழுங்குவிதிகளின் மூலம் விதிக்கப்பட்டுள்ள தரநிலைகளுக்கு இணங்காது இறக்குமதி செய்கின்ற இறக்குமதியாளர்களின் பட்டியலை வெளியிடுதலானது தேசிய பொருளாதாரம், பொது சுகாதாரம் மற்றும் பாதுகாப்போடு சுற்றுச் சூழல் பாதுகாப்பையும் உறுதி செய்யும் சமூகப் பொறுப்பைச் செய்கின்ற ஓர் குறியீடாகும். அதனால் இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) ஒழுங்குவிதிகளின் மூலம் விதிக்கப்பட்டுள்ள தரநிலைகளுக்கு இணங்காது இறக்குமதி செய்கின்ற இறக்குமதியாளர்களின் பட்டியலை வெளியிடுவதற்கான ஏற்பாடுகள் இதன் கீழ் தயாரிக்கப்பட்டுள்ளன.

இவ் வர்த்தமானி அறிவித்தல் தொடர்பாக, சட்டமா அதிபர் திணைக்களத்தினால் அனுப்பப்பட்டுள்ள கண்காணிப்பை உள்ளடக்கி வரையப்பட்டுள்ள வர்த்தமானி அறிவித்தல் அமைச்சரவைக்கு சமர்ப்பிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

### 2.5.5 இறக்குமதி மற்றும் ஏற்றுமதி உரிமங்களை வழங்கும் கொள்கை ரீதியான கட்டமைப்பை தயாரித்தலும் இறக்குமதி மற்றும் ஏற்றுமதி உரிம நிபந்தனைகளை மதிப்பாய்வு செய்தலும்.

இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் கட்டுப்பாட்டுத் திணைக்களத்தினால் வழங்கப்படும் உரிமங்களுக்கு பரிந்துரை வழங்கும் நிறுவனங்களை தெளிவாக அறிந்து கொள்வதும், அப் பரிந்துரை வழங்கும் நிறுவனங்களுக்கு உரித்தான பொருட்களை சரியாக அறிந்து கொள்வதும், அதன் மூலம் உரிய பொருட்களை இறக்குமதி செய்வதற்கு, அவ் உரிய நிறுவனத்தின் மூலம், தெளிவான பரிந்துரையை வழங்குவதை நோக்காகக் கொண்டு மேலே குறிப்பிடப்பட்டுள்ள கொள்கை ரீதியான கட்டமைப்பை தயாரிப்பது ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

அதன் முதல் நடவடிக்கையாக, உரிய இறக்குமதி உரிமங்களை வழங்கும் அலகுகள் மூலம் ஒவ்வொரு உரிமப் பொருட்களுக்குமான சம்பிரதாய முறையில் பரிந்துரைகளை வழங்கும் நிறுவனங்களை வெவ்வேறான கண்டறியப்பட்டுள்ளதுடன், அந் நிறுவனங்கள் தொடர்பாக பிரச்சினைகளுடன் கூடிய சந்தர்ப்பங்களை அறிந்து கொள்வதற்கும் அப் பிரச்சினையை நிவர்த்தி செய்வதற்கும் அந்தந்த பரிந்துரை வழங்கும் நிறுவனங்களை இத் திணைக்களத்திற்கு அழைத்து கலந்துரையாடல்கள் மேற்கொள்ளப்பட்டது. அதன்படி, அந் நிறுனங்களினால் மாத்திரம் இறக்குமதி உரிமங்களுக்குப் பரிந்துரைகளைப் பெற்றுக் கொள்வதற்கு இயலுமான வகையில் புதிய முறையொன்று தயாரிக்கப்பட்டுள்ளது.

அதே போன்று, உரிமங்களில் உள்ளடக்கப்படும் பல்வேறுபட்ட நிபந்தனைகள் தொடர்பாக நீண்ட கலந்துரையாடல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் உரிமங்களின் நிபந்தனைகள் ஒவ்வொரு அலகுகள் மற்றும் தொகுதிகளுக்கமைய அறியப்பட்டுள்ளதுடன், அதன்படி இதுவரை காணப்பட்ட உரிமங்களின் நிபந்தனைகள் ஒழுங்கான முறையில் மதிப்பாய்வு செய்து தயாரிக்கப்பட்டுள்ளன.

இதற்கு மேலதிகமாக, ஒவ்வொரு அலகினாலும் உரிமங்களை வழங்கும் போது காணப்பட்ட பிரச்சினைக்குரிய நிலைமைகளை அறிந்து கொண்டு, அப் பிரச்சினைகள் அனைத்தையும் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது.

அதன்படி, 2025.01.01 ஆம் திகதி முதல் நடைமுறைப்படும் வகையில், புதிய கணனி முறைமை மூலம் வழங்கும் உரிமங்களுக்கு, ஒவ்வொரு தொகுதிகளுக்கும் உரிய நிபந்தனைகள், அனைத்து அலகுகளுக்கும் வெவ்வேறாக அமைத்து, 2024.12.31 திகதியாகும் போது உள்ளக அறிவுறுத்தல்களும் வழங்கப்பட்டது.

## 2. 6 புதிய மேம்படுத்தல்கள்

### 2.6.1 இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் கட்டுப்பாட்டுத் திணைக்களத்தில் நிறுவப்பட்டுள்ள STRATLINK கணனி மென்பொருள் முறைமை

இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் கட்டுப்பாட்டுத் திணைக்களத்தின் செயற்பாடுகளை திறமையான சமூகத்திற்குப் (Smart Society) பொருத்தமான வகையில், அமைக்கும் நோக்கில், பல காலமாக இலத்திரனியல் உரிமங்களை வழங்குவதற்கான வசதிகளை வழங்குவதை மெய்ப்பிப்பதற்கு 2024 ஆம் ஆண்டில் முடிந்தது. அதன்படி, இத் திணைக்களத்தினால் முன்வைக்கப்பட்ட கோரிக்கையின் பிரகாரம் மின் உரிமங்களை வழங்கும் முறையை செயற்படுத்துவதற்கு வசதிகளை வழங்குவதற்காக ஐக்கிய நாடுகளின் பாதுகாப்பு சபையின் 1540 ஆம் இலக்க முன்மொழிவின் தேவையை நிறைவேற்றுவதற்காக நிதியுதவியை வழங்குவதை நோக்காகக் கொண்டு, ஐக்கிய அமெரிக்க அரச திணைக்களத்தின் கீழ் செயற்படும் ஏற்றுமதிக் கட்டுப்பாடு மற்றும் அதனோடு தொடர்புபட்ட எல்லைப் பாதுகாப்பு பணியகத்தினால் (EXBS வேலைத்திட்டம்) அன்பளிப்பொன்றாக STRATLINK கணனி முறைமையை வழங்குவதற்கு உடன்பட்டது.

அம் முறைமை தொடர்பாக முன்வைக்கப்பட்ட முன்மொழிவுக்கு අමප/23/0077/604/004 மற்றும் 2023.01.31 ஆம் திகதிய தீர்மானம் மூலம் அமைச்சரவையின் அனுமதி கிடைக்கப் பெற்றது.



அதற்கமைய, இம் முறைமையைப் பயன்படுத்தி இலத்திரனியல் இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் கட்டுப்பாட்டு உரிமங்களை வழங்குவதற்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதுடன், 2024 ஒக்டோபர் மாதம் 25 ஆம் திகதி பிரதமரின் செயலாளர் மற்றும் ஐக்கிய அமெரிக்கத் தூதரக பிரதிநிதிகளின் தலைமையில் இலங்கை சுங்கத் திணைக்களக் கேட்போர் கூடத்தில் ளுவுசுயுவுடுஐமுே இலத்திரனியல் உரிமங்களை வழங்கும் முறைமை உத்தியோகபூர்வமாக அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.



சேவை பெறுநர்களுக்கு மிகவும் இலகுவான முறையில் பயன்படுத்த முடியுமான வகையில் இம் முறைமையின் முகப்பு நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

சேவை பெறுநராக ஏதாவது ஓர் நிறுவனம் இம் முறைமையில் முதலில் பதிவு செய்ய வேண்டும். அவ்வாறு பதிவு செய்த நிறுவனத்தின் சட்டரீதியான தன்மை கம்பனிகள் பதிவுத் திணைக்களத்தின் தரவு முறைமையூடாகவும், தனிப்பட்ட இறக்குமதியாளர்களின் சட்டரீதியான தன்மை ஆட்பதிவுத் திணைக்களத்தின் தரவு முறைமையூடாகவும் உறுதிப்படுத்துவதற்கான சாத்தியப்பாடுகள் குறித்து தற்போது அந் நிறுவனங்களுடன் கலந்துரையாடல்கள் நடத்தப்பட்டுள்ளன. அதே போல், உரிமக் கட்டணங்களை மற்றும் மேலதிகக் கட்டணங்களை, அரச கொடுப்பனவு வலையமைப்பு (Lanka Pay (Pvt) Ltd) மூலம் செலுத்துவதற்கும் புதிய கணனி முறைமையில் வசதிகளை ஏற்படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

போன்று, இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் கட்டுப்பாட்டுத் திணைக்களத்தின் பணிகளுடன் மிக நெருக்கமாகச் செயற்படும் நிறுவனமொன்றாக இலங்கை சுங்கத் திணைக்களம் காணப்படுகிறது.



STRATLINK தரவு முறைமை சுங்கத் திணைக்களத்தின் தரவு முறைமையுடன் தகவல்களை பரிமாறிக் கொள்வதற்கு இயலுமான வகையில் தொழில்நுட்ப வசதிகளை செய்து கொள்வது அத்தியாவசியம் என்பதால், அதற்கு பயன்பாட்டு நிரல்படுத்தல் இடைமுகமொன்றையும் (API - Application Program Interface) உருவாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

2025 ஆம் ஆண்டில் முழுமையாக STRATLINK முறைமை புத்தம் புதிய வசதிகளுடன் கூடிய தகவல் தொழில்நுட்பக் கருவியொன்றாக திணைக்களத்தின் சேவை பெறுநர்களுக்கு வழங்க முடியுமானதாக இருக்கும்.

மேலும், இந்த STRATLINK இலத்திரனியல் உரிமங்கள் வழங்கும் முறையை மேலும் வினைத்திறனாகவும் விளைத்திறனாகவும் மேற்கொள்ளும் நோக்கில், எஸ்தோனிய அரசின் அலுவலர்களின் வளப் பங்களிப்புடன் திணைக்களத்தின் அனைத்து அலுவலர்களும் உள்ளடங்கும் வகையில் சில பயிற்சி அமர்வுகள் மூலம் அறிவூட்டப்பட்டதுடன், இத் திணைக்களத்துடன் தொடர்புபடும் சேவை பெறுநர்களுக்கும் இம் முறைமை தொடர்பான அறிவூட்டல்களும் கடந்த ஆண்டின் இறுதிக் காலாண்டில் நடாத்தப்பட்டன.

### 2.6.1.1 STRATLINK முறைமையின் மூலம் சேவை பெறுநர்களுக்குக் கிடைக்கும் நன்மைகள்




STRATLINK முறைமையில் சேவை பெறுநர்களைப் பதிவு செய்தல் 2024 நவம்பர் மாதம் முதல் ஆரம்பிக்கப்பட்டதுடன், அதில், கூட்டு உரிமங்களுக்கு விண்ணப்பிப்பதற்கான வசதி டிசம்பர் முதலாம் திகதி முதலும் ஏனைய

உரிமங்களுக்கு விண்ணப்பிப்பதற்கான வசதி 2025 ஆம் ஆண்டு சனவரி முதலாம் திகதி முதலும் சேவை பெறுநர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. அதன்படி, STRATLINK முறைமையைப் பயன்படுத்தி சேவை பெறுநர்களுக்கு கீழே குறிப்பிடப்பட்டுள்ள நன்மைகளை அடைய முடியும்.

- புதிய முறைமையின் மூலம் இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் கட்டுப்பாட்டு உரிமங்களுக்கான விண்ணப்பங்கள் மற்றும் பற்றுகளுக்கான விண்ணப்பங்களை நிகழ்நிலையூடாக விண்ணப்பிப்பதற்கான வசதிகள் சேவை பெறுநர்களுக்கு கிடைக்கின்றது.

- சேவை பெறுநர்களினால் அனுப்பப்படும் உரிமங்கள் / பற்றுக்களின் தற்போதைய மதிப்பீட்டு நிலைமைகள் பற்றிய விதிதாசார பெறுமானமொன்று சேவை பெறுநர்களுக்கு இம் முறைமையூடாக பார்க்கக்கூடிய வசதி உள்ளதுடன், அதற்கமைய, உரிய உரிமங்கள் / பற்றுக்கள் எந்தக் கட்டத்தில் உள்ளதென்பதை அவர்களுக்கு பார்க்கக்கூடிய சந்தர்ப்பம் உள்ளது.

- விண்ணப்பத்தில் குறைபாடுகள் இருந்தால் அவை முறைமையினூடாகவே விண்ணப்பதாரர்களுக்கு அனுப்பப்படுவதுடன் அவை சரி செய்யப்பட்டதன் பின்னர் மீண்டும் அனுப்புவதற்கான வசதிகளும் சேவை பெறுநர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. அதன் மூலம் உரிய குறைபாடுகளுடைய பகுதியை மாத்திரம் மீண்டும் சரி செய்வதற்கு சேவை பெறுநர்களுக்கு சந்தர்ப்பம் உள்ளது.

- உரிமங்கள் / பற்றுக்களுக்கு அனுமதி வழங்கப்பட்ட பின்னர் அத் தகவல் மின்னஞ்சல் மற்றும் குறுச்செய்தி மூலம் சேவை பெறுநர்களுக்கு தானாக அறிவிக்கப்படும்.

- உரிமங்கள் / பற்றுக்களுக்கு அனுமதி வழங்கப்பட்ட பின்னர் அதற்கான கொடுப்பனவு வவுச்சர்களை சேவை பெறுநர்களின் பயனர் கணக்கிற்கு உட்சென்று பதிவிறக்கம் செய்து கொள்ள முடியும்.

- உரிய கொடுப்பனவுகளை அரச கொடுப்பனவு வலையமைப்பு மூலம் நிகழ்நிலையூடாக மிகவும் விரைவாக செய்வதற்கான வசதி சேவை பெறுநர்களுக்கு உள்ளது. அதன் மூலம் ஒரு நாளில் எச் சந்தர்ப்பத்திலும் கொடுப்பனவுகளை மேற்கொள்வதற்கு சேவை பெறுநர்களுக்கு சந்தர்ப்பம் உள்ளது.

- இதுவரை அச்சிட்டு வழங்கப்பட்ட உரிமங்கள் மற்றும் பற்றுக்களுக்குப் பதிலாக இலத்திரனியல் உரிமமொன்றை (ஈ - உரிமம்) மற்றும் பற்றொன்று புதிய முறைமை மூலம் வழங்கப்படுகின்றது. அதன்படி, உரிய கொடுப்பனவை முழுமைப்படுத்திய பின்னர் அவ் ஈ - உரிமம் / பற்றினை சேவை பெறுநர்களுக்கு பதிவிறக்கம் செய்து கொள்ளும் வசதி உள்ளது.

- இலங்கை சுங்கத்தின் ASYCUDA முறைமையுடன் STRATLINK முறைமை ஒன்றிணைக்கப்பட்டுள்ளதால், உரிய உரிமம் தொடர்பான தகவல்கள் தானாக இலங்கை சுங்கத்திற்கு அனுப்பப்படும். அதுபோல் உரிமங்களை பற்று வைப்பதற்றுத் தேவையான சுங்க வெளிப்படுத்துகைத் தகவல்கள் ASYCUDA முறைமையூடாக STRATLINK முறைமைக்குக் கிடைக்கும். அதேபோன்று உரிமங்களை பற்று வைத்த பின்னர் பொருள் விடுவிப்பிற்கான அனுமதிகளும் இலங்கை சுங்கத்திற்குத் தானாக அனுப்பப்படுவதுடன், இதன் மூலம் பற்று வைக்கும் செயற்பாட்டை வினைத்திறனாக செய்வதற்கு முடியும்.

இது தவிர, சேவை பெறுநர்களுக்கு கீழே குறிப்பிடப்பட்டுள்ள வசதிகளும் STRATLINK முறைமையூடாகக் கிடைக்கும்.

- முன்னர் வழங்கப்பட்ட உரிமங்கள் மற்றும் பற்றுக்கள் தொடர்பான தகவல்களைப் பெற்றுக் கொள்ளல்.
- இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள இயைபு முறைக் குறியீடுகள் பற்றி அறிந்து கொள்ளல்.
- உரிமங்களுக்கான வழங்குனர்களின் தகவல்களை உள்ளிடும் போது உரிய பொருட்களுக்கு தடை விதிக்கப்பட்டுள்ள நாடுகள் மற்றும் நபர்கள் தொடர்பான விபரங்களை அறிந்து கொள்ள முடிதல்.
- சேவை பெறுநர்களின் பயனர் கணக்கின் மூலம் திணைக்களத்தினால் அறிவிக்கப்படும் விசேட அறிவித்தல்களை அறிந்து கொள்வதற்கான சந்தர்ப்பம்.

### 2.6.1.2. STRATLINK முறைமையின் எதிர்கால அபிவிருத்தி நடவடிக்கைகள்

சேவை பெறுநர்களை STRATLINK முறைமையில் பதிவு செய்த பின்னர், அதற்கு உரிய அரச நிறுவன முறைமையுடன் ஒன்றிணைப்பதற்கு திணைக்களம் எதிர்பார்த்துள்ளது. அதன் படி, கம்பனிப் பதிவாளர் திணைக்களம், ஆட்பதிவுத் திணைக்களம் மற்றும் குடிவரவு குடியகல்வுத் திணைக்களத்துடன் எதிர்காலத்தில் இக் கணனி முறைமையை ஒன்றிணைப்பதற்கான ஆரம்பத் திட்டமிடல் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன், அதன் மூலம் தரவுகளின் உண்மைத் தன்மையைத் (Consistency) தொடர்வதற்கு முடியும்.

மேலும், STRATLINK முறைமையை செயற்படுத்திய பின்னர் கண்டறியப்படும் மேம்படுத்தல்கள் மற்றும் செய்யப்பட வேண்டிய வேறு அபிவிருத்திகளை 2025 ஆம் ஆண்டின் முதற் காலாண்டின் முடிவில் STRATLINK இரண்டாம் கட்டத்தில் செய்வதற்கும் எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

### 2.6.1.3. முன்னைய கணனி முறைமை மற்றும் புதிய STRATLINK முறைமையின் செயற்பாடுகள் பற்றிய ஒப்பீட்டு விளக்கம்

| முன்னைய கணனி முறைமை | புதிய கணனி முறைமை |
|---|---|
| நிகழ்நிலை மற்றும் நிகழ்நிலையல்லாத என இரு முறைமைகளை ஒன்றிணைத்து செயற்படுத்தப்பட்டது. அதற்கமைய, அலுவலர்களுக்கு இரு முறைமைகளுக்கும் உட்பிரவேசித்து விண்ணப்பங்களை மதிப்பீடு செய்ய வேண்டியிருந்தது. | முழுமையாக ஒரே நிகழ்நிலை முறைமையொன்றாக அபிவிருத்தி செய்து செயற்படுத்தப்படுகின்றது. அதனால் ஒரே பிரவேசத்தில் உரிமங்கள் / பற்றுக்களை மதிப்பீடு செய்வதற்கு முடியும். |
| உரிமங்களை மாத்திரம் நிகழ்நிலையூடாகப் பெற்றுக் கொள்வதோடு, பற்றுச் செயற்பாட்டை நிகழ்நிலையற்ற முறைமையூடாக செய்ய வேண்டியிருந்தது. அதன் போது, சேவை பெறுநர்கள் பற்று வைப்பதற்காக திணைக்களத்திற்கு வர வேண்டியிருந்தது. | உரிமங்கள் மற்றும் பற்றுக்கள் என இரு வகைகளும் நிகழ்நிலையூடாகப் பெற்றுக் கொள்ளப்படுவதால் சேவை பெறுநர்களுக்கு திணைக்களத்திற்கு வராது நிகழ்நிலையூடாக உரிய விண்ணப்பங்களை அனுப்ப முடியும். |
| அச்சிடப்பட்ட உரிமமொன்றை மற்றும் பற்றொன்று வழங்கப்பட்டது. அதன்படி, கட்டணம் செலுத்திய பின்னர் உரிமத்தை / பற்றினைப் பெற்றுக் கொள்வதற்கு சேவை பெறுநர்கள் திணைக்களத்திற்கு வர வேண்டும். | இலத்திரனியல் உரிமமொன்று மற்றும் பற்றொன்று வழங்கப்படுவதால், கொடுப்பனவுகளைச் செய்த பின்னர் பயனர் கணக்கில் உரிமத்தை / பற்றை பதிவிறக்கம் செய்து கொள்ள முடியும். |
| உரிமம் மற்றும் பற்று தொடர்பான தரவு அறிக்கையைப் பெற்றுக் கொள்ளும் போது முன் நிர்ணயிக்கப்பட்ட அறிக்கைகளை மாத்திரம் பெற்றுக் கொள்ளும் சந்தர்ப்பம் காணப்பட்டதுடன், தனிப்பயனாக்கம் செய்யப்பட்ட அறிக்கைகளைப் பெற்றுக் கொள்ளும் வசதி இருக்கவில்லை. | அறிக்கைகளைப் பெற்றுக் கொள்ளும் போது முன் நிர்ணயிக்கப்பட்ட மற்றும் தனிப்பயனாக்கம் செய்யப்பட்ட என இரு வகை அறிக்கைகளையும் பெற்றுக் கொள்ளும் வசதியுண்டு. |
| உரிமங்களுக்கு பரிந்துரை வழங்கும் நிறுவனங்களுடன் முறைமை ஒன்றிணைப்பு அல்லது இணையத்தளப் பிரவேச இடைமுகமொன்று இணைக்கப்பட்டிருக்காமை. | பரிந்துரை வழங்கும் நிறுவனத்துடன் உரிய பரிந்துரை முறைமையூடாகப் பெற்றுக் கொண்டு மற்றும் சேவை பெறுநர்களுக்கு அனுப்பப்பட்ட பரிந்துரையின் உண்மைத்தன்மையை சரிபார்ப்பதற்கு |

| **முன்னைய கணனி முறைமை** | **புதிய கணனி முறைமை** |
|---|---|
| | உரிய நிறுவனங்களுக்கு இணையத்தள இடைமுகமொன்று வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| முன்னைய முறைமையில் வணிக வங்கிகளுடன் தொடர்பொன்று இருக்கவில்லை. | புதிய முறைமையின் மூலம் உரிமங்களின் தகவல்களை சரிபார்ப்பதற்காக உரிமம்பெற்ற வணிக வங்கிகளுக்கு இணையத்தள இடைமுகமொன்று வழங்கப்பட்டுள்ளது. |
| முறைமை திணைக்களத்தின் வளாகப் பராமரிப்பு முறையில் செயற்படும். | புதிய முறைமை கிளவுட் (cloud) பராமரிப்பு முறையில் செயற்படும். |

# 3. அத்தியாயம் - வருடத்திற்கான மொத்த நிதிச் செயலாற்றுகை

## 3.1 2024 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 ஆம் திகதி வரையான நிதி ஆண்டிற்கான செயலாற்றுகைக் கூற்று

ஏசீஏ- எப்

2024 டிசம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான
நிதிச் செயலாற்றுகைக் கூற்று

(ரூபா)

| திருத்தப்பட்ட ஒதுக்கீடு 2024 | | குறிப்பு | உண்மை நிலை 2024 | உண்மை நிலை 2023 | |
|---|---|---|---|---|---|
| - | வருமானப் பெறுகைகள் | | 3,762,583,369 | 3,304,992,140 | |
| - | வருமான வரி | 1 | - | - | ஏசீஏ-1 |
| - | உள்ளூர் பொருட்கள் மற்றும் சேவைகள் மீதான வரி | 2 | - | - | ஏசீஏ-1 |
| 3,100,000,000 | சர்வதேச வர்த்தகம் மீதான வரிகள் | 3 | 3,762,583,369 | 3,304,992,140 | ஏசீஏ-1 |
| - | வரியில்லாத வருமானங்களும் ஏனையவையும் | 4 | - | - | ஏசீஏ-1 |
| - | மொத்த வருமானப் பெறுகைகள் (அ) | | 3,762,583,369 | 3,304,992,140 | |
| - | வருமானமற்ற பெறுகைகள் | | - | - | |
| - | திறைசேரி பணிமுற்பணங்கள் | | 128,344,250 | 100,498,000 | ஏசீஏ-3 |
| - | வைப்புகள் | | 488,608 | 6,700,573 | ஏசீஏ-4 |
| 3,800,000 | முற்பணக் கணக்குகள் | | 6,338,278 | 7,890,405 | ஏசீஏ-5 |
| - | ஏனைய பிரதான பேரேட்டு கணக்கின் பெறுகைகள் | | 19,880,000 | - | |
| 3,800,000 | மொத்த வருமானம் அல்லாத பெறுகைகள் (ஆ) | | 155,051,136 | 115,088,978 | |
| - | மொத்த வருமானப் பெறுகைகளும் வருமானம் அல்லாத பெறுகைகளும் இ = (அ)+(ஆ) | | 3,917,634,505 | 3,420,081,118 | |
| | திறைசேரிக்கான அனுப்பீடு (ஈ) | | 3,763,676,594 | 3,276,491,226 | |
| | தேறிய வருமானம் கிடைப்பனவு மற்றும் வருமானம் அல்லாத கிடைப்பனவு உ = (இ)-(ஈ) | | 153,957,911 | 143,589.892 | |
| | கழி : செலவினம் | | | | |
| - | மீண்டுவரும் செலவினம் | | - | - | ஏசீஏ-2(ii) |
| 78,331,000 | சம்பளம், கூலி, மற்றும் ஏனைய ஊழியர் அனுகூலங்கள் | 5 | 76,542,418 | 65,801,629 | ஏசீஏ-2(ii) |
| 69,985,000 | ஏனைய பொருட்கள் சேவைகள் | 6 | 53,042,340 | 52,716,131 | ஏசீஏ-2(ii) |
| 1,200,000 | மானியங்கள், கொடைகள் மற்றும் மாற்றல்கள் | 7 | 814,457 | 860,264 | ஏசீஏ-2(ii) |
| - | வட்டிக் கொடுப்பனவுகள் | 8 | - | - | ஏசீஏ-2(ii) |
| - | ஏனைய மீண்டுவரும் செலவினம் | 9 | - | - | ஏசீஏ-2(ii) |
| 149,516,000 | மொத்த மீண்டுவரும் செலவினம் (ஊ) | | 130,399,215 | 119,378,024 | |
| | மூலதனம் செலவினம் | | | | |
| 2,800,000 | மூலதனச் சொத்துக்களின் புனரமைப்பும், மேம்படுத்தலும் | 10 | 1,380,382 | 7,253,342 | ஏசீஏ-2(ii) |
| 23,880,000 | மூலதனச் சொத்துக்களின் கொள்வனவு | 11 | 20,350,483 | 6,144,224 | ஏசீஏ-2(ii) |
| - | மூலதன மாற்றல்கள் | 12 | - | - | ஏசீஏ-2(ii) |
| - | நிதிச் சொத்துக்களின் கொள்வனவு | 13 | - | - | ஏசீஏ-2(ii) |
| 3,000,000 | திறன் விருத்தி | 14 | 602,588 | 1,661,943 | ஏசீஏ-2(ii) |
| - | ஏனைய மூலதனச் செலவினங்கள் | 15 | - | - | ஏசீஏ-2(ii) |
| 29,680,000 | மொத்த மூலதனம் செலவினம் (எ) | | 22,333,453 | 15,059,509 | |
| | வைப்புக் கொடுப்பனவுகள் | | 338,265 | 8,447,791 | ஏசீஏ-4 |
| 8,000,000 | முற்பணக் கொடுப்பனவுகள் | | 7,913,434 | 7,340,006 | ஏசீஏ-5 |
| | ஏனைய பிரதான பேரேட்டுச் செலவினம் | | - | 162,328 | |
| | மொத்தபிரதான பேரேட்டுச் செலவினம் (ஏ) | | 8,251,699 | 15,950,125 | |
| | மொத்த செலவினம் ஐ = (ஊ+எ+ஏ) | | 160,984,367 | 150,387,658 | |
| | டிசம்பர் 31 இல் உள்ளவாறு மீதி ஒ = (உ-ஐ) | | (7,026,456) | (6,797,766) | |
| | பணிமுற்பண சரிப்படுத்தல் அறிக்கையின்படி மீதி | | (7,026,456) | (6,797,766) | ஏசீஏ-7 |
| - | டிசம்பர் 31ல் உள்ளவாறான பணிமுற்பண மீதி | | - | - | ஏசீஏ-3 |

1

## 3.2 2024 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 ஆம் திகதி வரையான நிதி ஆண்டிற்கான நிதி நிலை கூற்று

ஏசீஏ -பி

**2024 டிசம்பர் 31 இல் உள்ளவாறான**
**நிதி நிலைமைக் கூற்று**

| | குறிப்பு | உண்மை நிலை 2024 ரூபா | 2023 ரூபா |
|---|---|---|---|
| **நிதி சொத்துக்கள் அற்றது** | | | |
| ஆதனம், பொறித் தொகுதி மற்றும் உபகரணம் | ஏசீஏ-6 | 83,327,235 | 56,456,442 |
| **நிதி சொத்துக்கள்** | | | |
| முற்பணக் கணக்குகள் | ஏசீஏ-5/5ஏ | 16,880,175 | 15,305,019 |
| காசு மற்றும் காசுக்குச் சமனானவை | ஏசீஏ-3 | - | - |
| மொத்த சொத்துக்கள் | | 100,207,410 | 71,761,461 |
| **தேறிய சொத்துக்கள் / உரிமைப் பங்கு** | | | |
| திறைசேரிக்கு தேறிய சொத்துக்கள் | | 15,422,759 | 13,997,946 |
| ஆதனம், பொறித் தொகுதி மற்றும் உபகரண ஒதுக்கம் | | 83,327,235 | 56,456,442 |
| வாடகை மற்றும் பணி முற்பண ஒதுக்கம் | ஏசீஏ-5பி | | |
| **நடைமுறைப் பொறுப்புக்கள்** | | | |
| வைப்புக் கணக்குகள் | ஏசீஏ-4 | 1,457,416 | 1,307,073 |
| தீர்க்கப்படாத பணிமுற்பண மீதி | ஏசீஏ-3 | - | - |
| மொத்தப் பொறுப்புக்கள் | | 100,207,410 | 71,761,461 |

பக்க இலக்கம் 01 முதல் 44 வரை ஏசீஏ 1 முதல் ஏசீஏ 7 வரையான மாதிரிப் படிவங்களின் மூலம் சமர்ப்பிக்கப்படுகின்ற கணக்குத் தகவல்கள் மற்றும் குறிப்புகளின்/பின்னிணைப்புகளின் பக்க இலக்கம் 45 முதல் 52 வரை உள்ளடங்கியுள்ள ஏனைய கணக்குக் குறிப்புகளின் விபரமும் இந்த இறுதிக் கணக்குகளில் உள்ளடங்கிய பகுதியாகும். இந்த நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளுக்கு இணங்கியதாக மேற்கொள்ளப்பட்டுள்ள அதேவேளையில் இங்கு நிதிக்கூற்றுக்களின் குறிப்புகளின் மூலம் வெளிப்படுத்தப்பட்டுள்ளவாறு, மிகவும் பொருத்தமான கணக்கீட்டுக் கொள்கைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. அதனால் மேலேயுள்ள இறுதிக் கணக்குகளில் குறிப்பிடப்பட்டுள்ள தொகைகள், அது தொடர்பான கணக்குக் குறிப்புகள் மற்றும் ஏனைய கணக்குத் தகவல்கள் திறைசேரிப் புத்தகங்களுடன் சீராக்கம் செய்யப்பட்டுள்ளது என்பதையும் அவை அந்தத் தொகைகளுடன் உடன்படுகின்றது என்பதையும் இத்தால் சான்றுப்படுத்துகிறோம்.

நிதி நிருவாகத்திற்காக விளைத்திறன்மிக்க உள்ளக நிருவாகத் தொகுதியொன்று அறிக்கையிடும் நிறுவனத்தில் காணப்படுகின்றது எனவும் நிதி நிருவாகத்திற்காக உள்ளக நிருவாகத் தொகுதியின் செயற்திறனை மேற்பார்வை செய்வதற்கும் அதற்கு அமைவாக அந்தத் தொகுதியை விளைத்திறனுடன் நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையானவாறு மாற்றங்களை மேற்கொள்வதற்கும் அடிக்கடி மீளாய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றது எனவும் இத்தால் சான்றுப்படுத்துகிறோம்.

| பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் | கணக்கீட்டு உத்தியோகத்தர் | பிரதான நிதி உத்தியோகத்தர்/ பிரதான கணக்காளர் பணிப்பாளர்(நிதி)/ஆணையாளர்(நிதி) |
|---|---|---|
| பெயர்: | பெயர்: | பெயர் : |
| பதவி : | பதவி : | |
| திகதி : 2025.02. 28 | திகதி : 2025.02. 28 | திகதி : 2025.02. 28 |

K.M. Mahinda Siriwardana
Secretary to the Treasury and Secretary
to the Ministry of Finance, Planning and Economic Development
Ministry of Finance
Colombo 01.

T.T. Upulmalee Premathilaka
Controller General of Imports & Exports
Department of Imports & Exports Control
Colombo 01.

I. P. Kothalawala
Chief Accountant
Import and Export Control Department
Colombo 01

2

## 3.3 2024 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 ஆம் திகதி வரை முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று

ஏசீடி - சீ

**2024 டிசம்பர் 31 இல் உள்ளவாறான**
**காசுப் பாய்ச்சல் கூற்று**

| | உண்மை | |
|---|---|---|
| | **2024**<br>**ரூபா** | **2023**<br>**ரூபா** |
| **தொழிற்பாட்டு செயற்பாடுகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்** | | |
| மொத்த வரிப் பெறுகைகள் | 3,762,583,369 | 3,304,992,140 |
| கட்டணங்கள், தண்டப்பணங்கள், தண்டனைகள் மற்றும் உத்தரவுப் பத்திரங்கள் | - | - |
| இலாபம் | - | - |
| வருமானம் அல்லாத பெறுகைகள் | 19,880,000 | - |
| ஏனைய வருமான தலைப்புகளுக்காக சேகரிக்கப்பட்ட வருமானம் | 4,158,551 | 3,604,925 |
| கிடைக்கப்பெற்ற கட்டுநிதி | 128,344,250 | 100,498,000 |
| முற்பணங்களை அறவிடல் | 7,474,212 | 8,443,510 |
| வைப்புக்களின் பெறுகை | 488,608 | 6,700,573 |
| செயற்பாடுகளிலிருந்து உருவாக்கப்பட்ட மொத்தக் காசு (அ) | 3,922,928,990 | 3,424,239,148 |
| **கழி - பகிர்ந்தளிக்கப்பட்ட காசு** | | |
| ஆளுக்குரிய வேதனங்கள் மற்றும் தொழிற்பாட்டுக் கொடுப்பனவுகள் | 127,853,087 | 115,363,541 |
| மானியங்களும் மாற்றுக் கொடுப்பனவுகளும் | 814,457 | 860,264 |
| ஏனைய செலவினத் தலைப்புகளுக்காக மேற்கொள்ளப்பட்ட செலவினம் | - | 330,700 |
| திறைசேரிக்குத் தீர்க்கப்பட்ட பணிமுற்பணம் | 3,763,676,594 | 3,276,491,226 |
| முற்பணக் கொடுப்பனவு | 7,913,434 | 7,523,789 |
| வைப்புக் கொடுப்பனவு | | 162,328 |
| தொழிற்பாடுகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்தக் காசு (ஆ) | 3,900,595,837 | 3,409,179,639 |
| தொழிற்பாட்டு செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (இ)=(அ)-(ஆ) | 22,333,153 | 15,059,509 |
| **முதலீட்டு செயற்பாடுகளிருந்தான காசுப் பாய்ச்சல்** | | |
| வட்டி | - | - |
| பங்கு இலாபம் | - | - |
| உரிமை இழந்த ஏற்பாடுகள் மற்றும் பௌதிக சொத்துக்களின் விற்பனை | - | - |
| உப கடன்கள் மீதான அறவீடுகள் | - | - |
| | - | - |
| முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்து உருவாக்கப்பட்ட மொத்தக் காசு (ஈ) | - | - |
| **கழி - பகிர்ந்தளிக்கப்பட்ட காசு:** | | |
| கொள்வனவு அல்லது பௌதிகச் சொத்தக்களின் நிர்மாணிப்பு மற்றும் ஏனைய முதலீடுகளின் கொள்வனவு | 22,333,153 | 15,059,509 |
| முதலீட்டுச் செயற்பாடுகளுக்கு வழங்கப்பட்ட மொத்தக் காசு (உ) | 22,333,153 | 15,059,509 |
| முதலீட்டுச செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (ஊ)=(ஈ)-(உ) | (22,333,153) | (15,059,509) |
| தொழிற்பாடுகள் மற்றும் முதலீட்டுச் செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (எ)=(இ)+(ஊ) | - | - |
| **நிதிச் செயற்பாடுகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்** | | |
| உள்ளூர்க் கடன்கள் | - | - |
| வெளிநாட்டுக் கடன்கள் | - | - |
| பெற்ற நன்கொடைகள் | - | - |
| நிதி நடவடிக்கைகளிலிருந்து உருவாக்கப்பட்ட மொத்தக் காசு (ஏ) | - | - |
| ***கழி - பகிர்ந்தளிக்கப்பட்ட காசு:*** | | |
| உள்ளூர் கடன்கள் மீதான மீளக் கொடுப்பனவுகள் | - | - |
| வெளிநாட்டுக் கடன்கள் மீதான மீளக் கொடுப்பனவுகள் | - | - |
| நிதிச் செயற்பாடுகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்தக் காசு (ஐ) | - | - |
| நிதிச் செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (ஒ)=(ஏ)-(ஐ) | - | - |
| காசில் ஏற்பட்ட தேறிய அசைவு (ஓ)=(எ)+(ஒ) | - | - |
| ஜனவரி 01 ஆம் திகதியிலுள்ளவாறான ஆரம்ப காசு மீதி | - | - |
| டிசம்பர் 31ஆம் திகதியிலுள்ளவாறான இறுதிக் காசு மீதி | - | - |

3

## 3.4 வருமானங்களை ஒன்று சேர்ப்பதற்கான செயலாற்றுகை அறிக்கை

ரூபா.

| வருமானக் குறியீடு | வருமானக் குறியீட்டின் விபரம் | வருமான மதிப்பீடு | | ஒன்று சேர்க்கப்பட்ட வருமானம் | |
|---|---|---|---|---|---|
| | | ஆரம்ப மதிப்பீடு | இறுதி மதிப்பீடு | தொகை (ரூபா.) | இறுதி வருமான மதிப்பீடுகள் % ஆக |
| 10.01.03.00 | இறக்குமதி மற்றும் ஏற்றுமதி உரிம கட்டணம் மற்றும் மேலதிகக் கட்டணம் | 3,100,000,000/- | 3,100,000,000/- | 3,762,583,369/- | 121.37% |

### 3.4.1 கடந்த 4 வருடங்களுக்கான இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் கட்டுப்பாட்டு உரிம மற்றும் மேலதிகக் கட்டணங்களின் பெறுமதி

ரூபா. ‘000

| வருடம் | 2021 | 2022 | 2023 | 2024 |
|---|---|---|---|---|
| தேறிய வருமானம் | 2,934,679 | 3,086,778 | 3,304,992 | 3,762,583 |



திணைக்களத்தினது கடந்த 3 ஆண்டுகளில் உரிமக் கட்டண வருமானத்தை கருத்தில் கொள்ளும் போது படிப்படியான வளர்ச்சியைக் காண முடிகின்றது. 2024 ஆம் ஆண்டில் உரிமங்களை வழங்குவதன் மூலம 3.7 பில்லியன் ரூபாய்கள் என்ற உயர் வருமானம் ஈட்டப்பட்டுள்ளதுடன், அது 2023 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 13% வீதமான வளர்ச்சியாகும். மேலும் இறக்குமதி (கட்டுப்பாட்டு) ஒழுங்குவிதிகளை மீறும் சந்தர்ப்பங்களில் மேலதிகக் கட்டணங்களும் அறவிடப்படுகின்றன.

### 3.5 2024 ஆம் ஆண்டு ஒதுக்கப்பட்ட ஒதுக்கீட்டினைப் பயன்படுத்தியதன் செயலாற்றுகை

**ரூபா.**

| ஒதுக்கீட்டின் வகை | ஒதுக்கப்பட்ட ஒதுக்கீடுகள் | | உண்மையான செலவு | பயன்படுத்தப்பட்ட நிறைவு செய்யப்பட்ட இறுதி ஒதுக்கீட்டுத் தொகை % ஆக |
|---|---|---|---|---|
| | ஆரம்ப ஒதுக்கீடு | இறுதி ஒதுக்கீடு | | |
| மீண்டெழும் | 143,885,000/- | 149,516,000/- | 130,399,215/- | 87.21 |
| மூலதனம் | 9,800,000/- | 29,680,000/- | 22,333,453/- | 75.24 |

### 3.6 நி.பி. 208 இன் பிரகாரம் ஏனைய அமைச்சுக்கள் / திணைக்களத்தினது முகவராக இத்திணைக்களத்திற்கு வழங்கப்பட்ட ஒதுக்கீடுகள் இல்லை.

### 3.7 நிதி அல்லாத சொத்துக்களை அறிக்கைப்படுத்தலின் செயலாற்றுகை

**ரூபா. ‘000**

| சொத்துக் குறியீடு | குறியீட்டு விபரம் | 31.12.2024 ஆம் திகதிக்கு இருப்புக் கணிப்பீட்டு அறிக்கையின் படி மீதி | 31.12.2024 ஆம் திகதிக்கு நிதி நிலைமைக் கூற்று அறிக்கையின் படி மீதி | முன்னாள் கணக்கீடுகளுக்கு உரியது | முன்னேற்றம் % ஆக காட்டப்பட்டு உள்ளது. |
|---|---|---|---|---|---|
| 9151 | கட்டடங்கள் மற்றும் கட்டமைப்புக்கள் | - | - | | |
| 9152 | இயந்திரங்கள் | - | 68,099,235/- | | |
| 9153 | காணி | - | - | | |
| 9154 | தொட்டுணர முடியாத சொத்துக்கள் | - | 15,228,000/- | | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 9155 | உயிருள்ள சொத்துக்கள | - | - | | |
| 9160 | நடந்து கொண்டிருக்கும் வேலைகள் | - | - | | |
| 9180 | வரியினைப் பெற்றுத் தருகின்ற சொத்துக்கள | - | - | | |

### 3.8 கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை (இணைப்பு 01)

## 4 அத்தியாயம் - செயற்திறன் குறியீடு

### 4.1 நிறுவன செயலாற்றுகைக் குறியீடு (செயற்திட்டத்தின் அடிப்படையில்)

| செயலாற்றுகைக் குறியீடு | எதிர்பார்க்கப்பட்ட வெளியீடுகளின் சதவீதமாக (%) உண்மையான வெளியீடு | | | |
|---|---|---|---|---|
| | 100% - 90% | 75% - 89% | 50% - 74% | 49% - 0% |
| இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் கட்டுப்பாட்டு உரிமங்கள் வழங்கல் மற்றும் பற்று வைத்தல | √ | | | |
| வர்த்தமானி அறிவித்தல்கள் | √ | | | |
| STRATLINK கணனி மென்பொருள் முறைமையை செயற்படுத்துதல். | √ | | | |
| பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை நடை முறைப்படுத்தல் | √ | | | |

## 5 அத்தியாயம்

### நிலையான அபிவிருத்தி இலக்குகளை (SDG) அடைந்து கொள்வதற்கான செயலாற்றுகை

2015 ஆம் ஆண்டில் நடைபெற்ற ஐக்கிய நாடுகள் மாநாட்டில் உலக அரச தலைவர்களினால் உலகளாவிய ரீதியில் 2030 ஆம் ஆண்டில் அடைந்து கொள்ள வேண்டிய நிலையான

அபிவிருத்தியின் 17 நோக்கங்கள் மற்றும் 169 இலக்குகள் அறிமுகப்படுத்தப்பட்டன. நிலையான அபிவிருத்திக்காக 2030 ஆம் ஆண்டுக்கான நிகழ்ச்சிநிரலில் மனிதன், பூமி மற்றும் சுபீட்சத்திற்கான செயலாற்றுகைத் திட்டம், பரந்த சுதந்திரத்திற்குள் உலகளாவிய சமாதானத்தினை வலுவூட்டுவதற்கான முயற்சி, தீவிர வறுமை, வறுமையின் வடிவங்களை நீக்குதல், மனித உரிமைகள், ஆண் பெண் சமனான தன்மை மற்றும் மகளிர், சிறுமிகள் போன்றவர்களை வலுவூட்டல் என்பவற்றை இலக்காகக் கொள்ளல் மற்றும் அனைத்து தரப்பினர்களையும் பங்குபற்றிக் கொண்டு செயற்படும் தன்மை இதில் அடங்கும்.

உலகளாவிய நிலையான அபிவிருத்திக்கான பிரவேசமாக இலங்கையின் அரச நிறுவனங்கள் அதனைத் தழுவிக் கொண்டு மற்றும் நீண்டகால அபிவிருத்திக்கான மூலோபாயத்தினை செயற்படுத்துவதற்குத் தேவையான நிலையான அபிவிருத்திச் சபையின் அனுசரணையில் நடாத்தப்பட்ட செயலமர்வுகளுக்காக எமது திணைக்களம் பங்குபற்றியது. அதன் பிரகாரம் திணைக்களத்தின் நோக்கம் மற்றும் செயற்பணி மற்றும் பணிகள் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு திணைக்கத்திற்கு உரிய உலகலாவிய நிலையான அபிவிருத்தியின் நோக்கம் மற்றும் இலக்குகளை மென்மேலும் விரிவாக்கி அறிந்து கொள்ள முடிந்தது. பின்னர் திணைக்களத்தின் அபிலாசைகள் உச்சமடைவதன் படி நீண்டகால நோக்குடன் கூடிய நிலையான அபிவிருத்திக்கான நோக்கு மற்றும் அதன் முன்னேற்றத்தினை மதிப்பிடுவதற்காக ஒழுங்குபடுத்தல்கள் நிறுவப்பட்டன. ஒழுங்குபடுத்திக் கொள்ளப்பட்ட நோக்கங்களின் மூலம் நாட்டின் நிலையான அபிவிருத்திக்கான உரிய தேவைப்பாட்டினை வழங்குவதனை முன்னிட்டு எமது திணைக்களச் செயற்பாடுகளை ஆரம்பித்து வைத்துள்ளது. திணைக்களத்திற்கு உரிய நோக்கங்களை ஒழுங்குபடுத்திக் கொள்ளும் போது அடிப்படையாகக் கொள்கின்ற நிலையான அபிவிருத்திக்கான நோக்கங்கள் கீழ்வருமாறாகும்.

## 5.1 இனங்காணப்பட்ட நிலையான அபிவிருத்தி இலக்குகள்

**நகர மற்றும் குடியேற்றங்களை முழுமையாக, பாதுகாப்பான, உறுதிமிக்கதாக, நிலையானதாக நிர்மாணித்தல். (நிலையான அபிவிருத்தி நோக்கங்கள் இலக்கம் 11)**

வாழ்வதற்கு உகந்த சூழலொன்றை நாட்டில் உருவாக்குவதற்கு காற்றின் தரத்தினை உறுதிப்படுத்துதல் மற்றும் நகர மற்றும் ஏனைய கழிவுகளை முகாமைப்படுத்துதல் வேண்டும். நகரமயமாக்கல் இடம்பெற்ற பிரதேசங்களில் மோட்டார் வாகனப் பயன்பாடு வேகமாக அதிகரித்ததன் காரணமாக அப் பிரதேசங்களில் காற்றில் வெளியேற்ற வாயுக்களின் வீதமும் அதிகரித்துள்ளதைக் காண முடிகின்றது. இங்கு வாகனங்களிலிருந்து வெளியேறும் நச்சுப் புகையினால் அதிகளவான காற்று மாசடைதல் இடம்பெறுவது கவனத்திற் கொள்ளப்பட வேண்டிய விடயமாகும். அதனால் வாயு வெளியேற்றத் தரத்திற்கு இணங்காத வாகனங்களை இறக்குமதி செய்வது நிறுத்தப்பட்டுள்ளது. அதற்காக 2019.01.25 ஆம் திகதி 2107/45 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் ஒழுங்குவிதிகள் விதிக்கப்பட்டுள்ளன.

**நிலையான பயன்பாடு மற்றும் உற்பத்தி முறைகளை உறுதிப்படுத்தல். (நிலையான அபிவிருத்தி நோக்கங்கள் இலக்கம் 12)**

சுற்றுச் சூழலுக்கு இசைவான இரசாயனப் பொருட்கள் மற்றும் அனைத்து கழிவுகளும் முகாமைத்துவம் செய்யப்படுவதனால் மனித சுகாதார மற்றும் சூழலுக்கு ஏற்படும் தீமைகளின் தாக்கத்தைக் குறைப்பதனால் அரசு எதிர்பார்க்கின்ற அபிவிருத்தி இலக்குகளை அடைந்து கொள்வதற்கு இத் திணைக்களம் ஒழுங்கமைப்பு நிறுவனமொன்றாக கடமை புரிகின்றது. அவ்வாறு தாக்கம் செலுத்தும் இறக்குமதி மற்றும் ஏற்றுமதிப் பொருட்களை கண்டறிந்து அவற்றைக் கட்டுப்படுத்த மற்றும் ஒழுங்குபடுத்த இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வருதல், இறக்குமதி மற்றும் ஏற்றுமதியை முழுமையாகத் தடை செய்தல் மற்றும் இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக்கு உரிய தரத்தினை நிர்ணயம் செய்தல், ஏனைய அரச நிறுவனங்களுடன் சரியான முறையில் தொடர்புகளை மேற்கொண்டு வருகின்றது.

அதன்படி, சுற்றாடல் அமைச்சினால், 2023 சனவரி மாதம் 31 ஆம் திகதிய 23/0265/622/003 ஆம் இலக்க ‘‘தனிப் பாவனைக்கான பிளாஸ்டிக் / பொலித்தீன் கழிவுகளைக் கட்டுப்படுத்தல்’’ என்ற தலைப்பிலான அவர்களின் அமைச்சரவைக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள முன்மொழிவுகளுக்கு பெறப்பட்ட அமைச்சரவையின் அனுமதி படி, 2023 யூன் மாதம் 01 ஆம் திகதியிலிருந்து நடைமுறைப்படுத்தும் வகையில், ஒரு முறை மாத்திரம் பயன்படுத்தப்படும் பிளாஸ்டிக் உறிஞ்சி குழாய்கள் மற்றும் கலக்கல் உபகரணங்கள், பிளாஸ்டிக்கினாலான ஒரு முறை மாத்திரம் பயன்படுத்தக்கூடிய தட்டுக்கள், கோப்பைகள் (யோகட் கோப்பை தவிர்ந்த), யோகட் கரண்டிகள் உள்ளிட்ட கரண்டிகள், முட்கரண்டிகள் மற்றும் கத்திகள், பிளாஸ்டிக் மலர் மாலைகள், பிளாஸ்டிக் இடியப்பத் தட்டுக்களை இறக்குமதி செய்வது 2023 ஏப்ரல் மாதம் 06 ஆம் திகதிய 2326/41 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் தடை செய்யப்பட்டுள்ளது.

இதற்கு மேலதிகமாக, 2024 ஆம் ஆண்டில் 304 இயைபு முறைக் குறியீடுகளின் கீழான இறக்குமதிப் பொருட்களுக்கு தரநிலைகள் மற்றும் தரக்கட்டுப்பாட்டு ஒழுங்குவிதிகளை விதித்து 2024 மே மாதம் 17 ஆம் திகதிய 2384/35 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி வெளியிடப்பட்டது. இதில் நேரடி மனித நுகர்விற்கு கொள்ளப்படும் உணவு வகைகள் மற்றும் உபகரணங்கள் மற்றும் பாகங்கள் பலவற்றுக்கு தரநிலைகள் கட்டாயப்படுத்தப்பட்டுள்ளன.

**நிலையான அபிவிருத்திக்காக அமைதியான மற்றும் பூரணமான சமூகமொன்றினை உருவாக்கல், நீதிக்காக அனைவருக்கும் சந்தர்ப்பம் வழங்கல் மற்றும் எல்லா மட்டங்களுக்கும் வினைத்திறனான, பொறுப்புடன் கூடிய முழுமையான நிறுவனம் ஒன்றினைக் கட்டியெழுப்புதல். (நிலையான அபிவிருத்தி நோக்கங்கள் இலக்கம் 16)**

அனைத்து நிலை அலுவலர்களினதும் பங்களிப்புடன் முடிவெடுக்கும் முறையையை நிறுவுவதும், அம் முடிவுகளை தொடர்ந்து மதிப்பீடு செய்வதனூடாக மிகுந்த வினைத்திறனை உறுதி செய்வதும் திணைக்களத்தின் இலக்காக உள்ளது. பணியாட்களின் கூட்டங்கள் மற்றும் முன்னேற்ற மதிப்பீட்டுக் கூட்டங்களிலினூடாக அனைத்து நிலை அலுவல்களினதும் முடிவெடுக்கும் முறையை தொடர்ச்சியாக செய்வதன் மூலம் வினைத்திறனான பொறுப்பு கூறல் மற்றும் வெளிப்படையான நிறுவனமொன்றை கட்டியெழுப்ப முடியுமானது.

தேசிய நீதி முறைமைக்கு மற்றும் சர்வதேச பிரகடனங்கள், ஒப்பந்தங்களுக்கு அமைவாக மக்களுக்கு தகவல்களை அறிவதற்கு உள்ள உரிமையை பூரணமாக உறுதிப்படுத்தும் விதமாக திணைக்களத்தில் தேவையான வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளன. திணைக்களத்திடம் கோரப்படுகின்ற தகவல்களுக்கு மிகவும் பொறுப்புக் கூறுவதோடு மிக அவசரமாக கோரிக்கையாளர்களுக்கு அளிக்கப்படுவதோடு, திணைக்களத்தின் இணையத்தளத்தின் ஊடாக புதுப்பிக்கப்பட்ட தகவல்களைப் பெற்றுக் கொள்ளவும் வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

### நிலையான அபிவிருத்திக்கான உலகளாவிய ஒத்துழைப்பை நடைமுறைப்படுத்துவதற்கான சந்தர்ப்பங்களை வலுப்படுத்தல் மற்றும் புத்துயிர்ப்படுத்தல் (நிலையான அபிவிருத்தி இலக்கு இலக்கம் 17

அரசினால் எதிர்ப்பார்க்கப்படுகின்ற நிலையான அபிவிருத்தி நோக்கங்களை அடைய எடுக்கப்படுகின்ற கொள்கைகளை நடைமுறைப்படுத்தல், வசதிகளை அளித்தல், ஒருங்கிணைத்தல் மற்றும் ஒழுங்குபடுத்தல் இத் திணைக்களத்தின் பொறுப்பாகும். இதன் கீழ் அரச கொள்கைகளை நடைமுறைப்படுத்தல் மற்றும் ஒழுங்குபடுத்தல் சரியான முறையில் நடைபெறுவதை உறுதிப்படுத்தல், சர்வதேச வர்த்தகத் தொடர்புகள் சம்பந்தமான ஒழுங்குவிதிகளை பலப்படுத்தல் என்பன திணைக்களத்தின் நோக்கங்களாகும். அதில் ஐக்கிய நாடுகளின் பாதுகாப்பு சபையின் 1540 ஆம் பிரகடனத்துடன் வர்த்தக வசதி வழங்கும் ஒப்பந்தத்தை (Trade Facilitation Agreement) இலங்கையில் நடைமுறைப்படுத்துவதனூடாக கொள்கை ஒருங்கிணைத்தல் மற்றும் நிலைப்படுத்தலின் மூலம் உலகளாவிய பொருளாதார ஸ்திரத்தன்மையை மேம்படுத்தல் போன்ற நிலையான அபிவிருத்தி நோக்கங்களை அடைய முடியும். 1540 மும்மொழிவு 2023 ஆம் ஆண்டில் அமைச்சரவையின் அனுமதிக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அதேவேளை இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் கட்டுப்பாட்டு உரிமங்களை நிகழ்நிலை முறையில் மிகவும் வினைத்திறனாக வழங்க ஐக்கிய அமெரிக்காவின் தூதரகத்துடன் தொடர்பான STRATLINK மின் கணனி முறைமை அமைப்பதற்கு அமைச்சரவையின் அனுமதி கிடைக்கப் பெற்றுள்ளது. அதற்கமைய, இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் கட்டுப்பாட்டுத் திணைக்களத்தின் அலுவலர்களுக்கு STRATLINK மின் கணனி முறைமையின் செயற்பாடு சம்பந்தமான ஆரம்ப கட்ட பயிற்சிகள் எஸ்தோனியா அரசின் பிரதிநிதிகளால் நடத்தப்பட்டது. அதன்படி, 2024.10.25 ஆம் திகதி கணனி முறைமை உத்தியோகபூர்வமாக ஆரம்பிக்கப்பட்டதுடன், இறக்குமதி ஏற்றுமதிக் கட்டுப்பாட்டு உரிமங்கள் மற்றும் பற்றுக்களை நிகழ்நிலையூடாக வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

| இலக்கு/நோக்கு | இலக்கு | அடைவு மட்டங்கள் | இது வரையில் அடையப்பட்ட அடைவு மட்டங்களின் முன்னேற்றம் | | |
|---|---|---|---|---|---|
| | | | 0%-49% | 50%-75% | 76%-100% |
| **11.** நகர மற்றும் குடியேற்றங்களை முழுமையாக, பாதுகாப்பான, உறுதி மிக்கதாக, | 11.6 2030 ஆகும் போது விஷேடமாக வாயுக்களின் தன்மையினை மற்றும் நகர மற்றும் ஏனைய கழிவுப் பொருட்கள் | 1.தரத்திற்கு இணங்க வாகன தயாரிப்புக்களுக்கு இடமளிக்காது இருத்தல். | | | ✓ |

| இலக்கு/நோக்கு | இலக்கு | அடைவு மட்டங்கள் | இது வரையில் அடையப்பட்ட அடைவு மட்டங்களின் முன்னேற்றம் | | |
|---|---|---|---|---|---|
| | | | 0%-49% | 50%-75% | 76%-100% |
| நிலையானதாக நிர்மாணித்தல். | முகாமைத்துவம் உட்பட நகரங்கள் மூலம் ஏற்படுகின்ற தனிநபர் சுற்றுச் சூழல் தாக்கத்தினைக் குறைத்தல். | | | | |
| **12.** நிலையான பயன்பாடு மற்றும் உற்பத்தி முறைகளை உறுதிப்படுத்தல். | 12.4. 2020 ஆகும் போது இணக்கப்பாட்டிற்கு வந்துள்ள சர்வதேச வேலைத் திட்டங்களுக்கு இணங்கி சூழலை நேசிக்கக் கூடிய விதத்தில் இரசாயனப் பொருட்கள் மற்றும் அனைத்து கழிவுப் பொருட்கள் முகாமைத்துவம் செய்தல் மற்றும் அதற்காக மானிட சுகாதார மற்றும் சூழலுக்கு நிகழ்கின்ற பாதகமான விளைவுகளை குறைப்பதற்காக காற்றிற்கு,நீரிற்கு மற்றும் மண்ணிற்கு வளிவிடுவதனைக் குறைத்தல். | 2. பாசல் மாநாட்டின் மதிப்பாய்வினை நிறைவு செய்தல் | | | ✓ |
| | | 3.உரிய அதிகாரிகளின் சிபாரிசின் பிரகாரம் கட்டுப்படுத்தப்பட்ட பொருட்களின் எண்ணிக்கை | | | ✓ |
| | | 4. ஆர்வமுள்ள தரப்பினர்களுடன் நடாத்தப்படுகின்ற ஆலோசணை கூட்டங்களின் எண்ணிக்கை | ✓ | | |
| | | 5. பதவி நிலை உத்தியோகத்தர்களுடன் நடாத்தப்படுகின்ற ஆலோசணை கூட்டங்களின் எண்ணிக்கை | | ✓ | |
| | | 6. விளிப்புணர்வு தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகளின் எண்ணிக்கை. | ✓ | | |
| | 12.5 2030 ஆகும் போது கழிவுப் பொருட்களின் பயன்பாட்டினை தடுத்தல்,குறைத்தல், மீள் சுழற்சி செய்தல் மற்றும் அவற்றை மீள் | 7. மின்னணுக் கழிவுகள் இறக்குமதியினைக் குறைப்பதற்காக வருடத்தினுள் பிரசுரிக்கப்பட்ட ஒழுங்கு விதிகளின் எண்ணிக்கை | ✓ | | |

| இலக்கு/நோக்கு | இலக்கு | அடைவு மட்டங்கள் | இது வரையில் அடையப்பட்ட அடைவு மட்டங்களின் முன்னேற்றம் | | |
|---|---|---|---|---|---|
| | | | 0%-49% | 50%-75% | 76%-100% |
| | பயன்படுத்துவதன் மூலம் குறைத்தல். | 8.நிராகரிக்கப்பட்ட இறக்குமதிப் செய்யப்பட்ட பயன்படுத்தப்பட்ட இலத்திரனியல் பொருட்களின் எண்ணிக்கை (கையடக்கத் தொலைபேசி,கணினிகள் போன்றவை) | | | ✓ |
| **16.**நிலையான அபிவிருத்திக்காக சுமூகமான மற்றும் பூரணமான சமூகம் ஒன்றினை உருவாக்கல், நீதிக்காக அனைவருக்கும் சந்தர்ப்பம் வழங்கல் மற்றும் எல்லா மட்டங்களுக்கும் வினைதிறனான, பொறுப்புடன் கூடிய முழுமையான நிறுவனம் ஒன்றினைக் கட்டியெழுப்புதல் | 16.7 அனைத்து மட்டங்களிலும் பதிலளிக்கக் கூடியதும், அனைவரையும் உள்ளடக்கி,பங்குபற்றலுடன் மற்றும் பிரதிநிதித்துவப்படுத்தி தீர்மானங்கள் எடுக்கின்ற செயற்பாடுகளை உறுதிப்படுத்தல். | 9.நடாத்தப்பட்ட பணிக்குழுக் கூட்டங்களின் எண்ணிக்கை | | ✓ | |
| | | 10. நடாத்தப்பட்ட மீளாய்வுக் கூட்டங்களின் எண்ணிக்கை | | ✓ | |
| | 16.10 தேசிய சட்ட முறைமை மற்றும் சர்வதேசக் பிரகடனங்கள், ஒப்பந்தங்களுக்கு இணக்கமாக பொது மக்களுக்கு தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்காகக் காணப்படுகின்ற உரிமையினை உறுதிப்படுத்தல் மற்றும் அடிப்படைச் சுதந்திரத்தைப் பாதுகாப்பதனை உறுதிப்படுத்தல். | 11. தகவல்களை அறிந்துகொள்வதற்கான உரிமைச் சட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட கோரிக்கைகளின் பேரில் 14 நாட்களுக்குள் வழங்கப்பட்ட பதில்களின் எண்ணிக்கை | | | ✓ |
| | | 12. தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் பிரகாரம் திணைக்கள இணையத்தளத்தில் அவ்வப்போது | ✓ | | |

| இலக்கு/நோக்கு | இலக்கு | அடைவு மட்டங்கள் | இது வரையில் அடையப்பட்ட அடைவு மட்டங்களின் முன்னேற்றம் | | |
|---|---|---|---|---|---|
| | | | 0%-49% | 50%-75% | 76%-100% |
| | | வெளியிடப்பட்ட அறிக்கைகள், தொகைமதிப்பு, வெளியீடுகளின் அளவு | | | |
| **17.** நிலையான அபிவிருத்திக்காக உலகளாவிய ஒத்துழைப்பை நடைமுறைப்படுத்துவதற்கான சந்தர்ப்பங்களை வலுப்படுத்தல் மற்றும் புத்துயிர்ப்படுத்தல் | 17.1.வரி மற்றும் ஏனைய வருமானங்களை சேர்த்தலை அதிகப்படுத்துவதற்காக அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளுக்கு சர்வதேச உதவியை வழங்குதல் உள்ளிட்ட உள்நாட்டு வள முகாமை. | ஐக்கிய நாடுகளின் பாதுகாப்பு சபையின் முன்மொழிவு (UNSCR) 1540 ஐ இலங்கையில் நடைமுறைப்படுத்தல். | | ✓ | |
| | 17.16.விசேடமாக அபிவிருத்தியடைந்து வரும் நாடுகள் உள்ளிட்ட அனைத்து நாடுகளினதும் நிலையான அபிவிருத்தியை நோக்காகக் கொண்டு பல்வேறு தரப்பினரின் பங்களிப்புடன் அறிவு, அனுபவம், தொழில்நுட்பம் மற்றும் நிதி வள மற்றும் பகிர்ந்து கொள்ளலினூடாக நிலையான அபிவிருத்திக்காக உலகளாவிய பங்களிப்பை மேம்படுத்தல். | STRATLINK மின் கணனி முறைமையை நிறுவுதல் | | | ✓ |

## 5.2 நிலையான அபிவிருத்தி இலக்குகளை அடைந்து கொள்வதற்கான வெற்றிகள் மற்றும் சவால்கள்

நிலையான அபிவிருத்தி இலக்குகளை அடைந்து கொள்வதற்கு திணைக்களத்திற்குள்ள பணிகளை நிறைவேற்றும் போது வேறு அரச நிறுவனங்களுடன் தொடர்புபட்டு செயற்பட வேண்டியுள்ளது. அதன் போது, ஒரு சில பணிகள் அந் நிறுவனங்களுக்கு ஒப்படைக்கப்படுவதுடன், அப் பணிகளின் முன்னேற்றமும் திணைக்களத்தின் இலக்குகளை அடைவதில் தீர்மானமிக்க பாதிப்பை செலுத்துகின்றது. அவ் அரச நிறுவனம், அப் பணிகளை செய்வதில் காட்டும் முன்னேற்றம் எமது திணைக்களத்தின் கட்டுப்பாட்டை மீறிய விடயம் என்பதுடன், அதனை முகங்கொடுக்க வேண்டியது இன்னுமோர் சவாலாகும். திணைக்களமானது பெரும் சிரமத்துடன் இச் சவாலை வெற்றி கொள்வதற்கு செயற்படுகின்றது.

கடந்த காலங்களில் ஏற்பட்ட உலகளாவிய நெருக்கடிகள் மற்றும் அந்நிய செலாவணிப் பிரச்சினைகளை நிவர்த்தி செய்தவற்கு விதிக்கப்பட்டிருந்த இறக்குமதி ஏற்றுமதி கட்டுப்பாடுகள் படிப்படியாக தற்போது நீக்கப்பட்டு வருகின்றது. தேசிய பொருளாதாரம் ஓரளவுக்கு நல்ல திசைக்கு திரும்பியுள்ளதுடன், அந்நிய செலாவணி இருப்பில் ஓரளவு வளர்ச்சியைக் காண முடிகின்றது. அதனடிப்படையில் பொது மக்களின் வாழ்வை மிகவும் வசதியாக்குவதற்காக இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் கட்டுப்பாட்டு ஒழுங்குவிதிகள் பல நீக்கப்பட்டன. வாகன இறக்குமதியின் போது சில பகுதிகளை விடுத்து ஏனைய இறக்குமதிகளை விடுவித்ததன் காரணமாக நுகர்வுப் போக்கில் சில தளர்த்தல்களை காணக்கூடியதாக உள்ளதுடன், கைத்தொழில் துறையில் வளர்ச்சியொன்று ஏற்படுவதற்கும் அது காரணமாகும்.

# 6. அத்தியாயம் - மனித வள சுயவிபரம்

## 6.1 ஊழியர் எண்ணிக்கை முகாமைத்துவம்

திணைக்களத்தின் பணிக்குழுவினர் இறக்குமதி மற்றும் ஏற்றுமதமி ஒழுங்குபடுத்தல்கள் தொடர்பான கொள்கைகளை தயாரித்தல், உரிமங்களை வழங்குதல் / பற்றுக்களை வைத்தல் மற்றும் வருமானத்தை சேர்த்தல் போன்ற பணிகளை செய்வதில் தமது முழுமையான பங்களிப்பை வழங்குவதுடன், மிகவும் வினைத்திறனான மற்றும் விளைத்திறனான சேவையொன்றை சேவைபெறுநருக்கு வழங்குவதற்கு மிகுந்த பொறுப்புக் கூறலுடன் மற்றும் தியாகத்துடன் பணி புரிகின்றனர். திணைக்களத்தின் 2024.12.31 ஆம் திகதிக்கான ஊழியர் எண்ணிக்கை விபரம் கீழே உள்ளவாறாகும்.

| பதவி, சேவை மற்றும் தரம் | அனுமதிக்கப்பட்ட பணியாட்களின் எண்ணிக்கை | காணப்படுகின்ற பணியாட்களின் எண்ணிக்கை | வெற்றிடம்/ | மேலதிகம் |
|---|---|---|---|---|
| சிரேஷ்ட | 14 | 12 | 02 | 00 |
| மூன்றாம் நிலை | 04 | 04 | 00 | 00 |
| இரண்டாம் நிலை | 84 | 76 | 09 | 01 |
| ஆரம்ப நிலை | 20 | 17 | 03 | 00 |
| **மொத்தம்** | **122** | **109** | **14** | **01** |

## 6.2 திணைக்களத்தின் செயலாற்றுகையினை முன்னிட்டு மனித வள பற்றாக்குறை அல்லது மேலதிகத்தின் பாதிப்பு

திணைக்களத்தில் காணப்படும் ஊழியர் வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு பொது நிர்வாக, உள்நாட்டு அலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளருக்கு, ஒன்றிணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்திற்கு, நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் செயலாளருக்கு அறிவித்து அனுப்பப்பட்டுள்ளது. மேலும் மனித வளப் பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதற்கு கீழே உள்ளவாறு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

- தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப அலுவலர் பதவி வகித்த அலுவலர் பொ.நி.சு 14/2022 இன் கீழ் வேதனமற்ற வெளிநாட்டு விடுமுறையைப் பெற்றுக் கொண்டுள்ளதுடன் திணைக்களத்தின் தகவல் தொழில்நுட்பப் பிரிவின் செயற்பாடுகளுக்கு அது எதிர்மறையான தாக்கமொன்றைச் செலுத்தினாலும் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப உதவியாளர் பதவி வகிக்கும் ஒருவருக்கு தொழில்நுட்ப அலுவலர் பதவியை முழுநேரமாக பதில் கடமை புரிவதற்கு அனுமதியைப் பெற்றுக் கொள்வதற்கு கோரப்பட்டுள்ளது.

- சட்ட அலுவலர் பதவி வெற்றிடத்திற்கான வெற்றிடம் பூரணப்படுத்தப்பட்டுள்ளது.

- வெற்றிடமாக இருந்த சாரதிப் பதவிகள் 03 இல் ஒருவர் சேவையிலிருந்து நீங்கிச் சென்றுள்ளதுடன் இன்னுமொருவர் இடமாற்றம் பெற்று வந்துள்ளார். ஒரு சாரதி முறையில்லாமல் சேவைக்கு வருகை தராத காரணத்தினால் சேவையிலிருந்து நீங்கிச் சென்ற கட்டளைக்கு ஆளாகியுள்ளார். இது பற்றி நிதியமைச்சுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. சாரதி வெற்றிடம் காரணமாக அலுவலகத்தின் போக்குவரத்து நடவடிக்கைகளை சரியாக மேற்கொள்ள முடியாதுள்ளது.

பதவி வெற்றிடங்களில் அதிக வீதத்தினை முழுமைப்படுத்த முடிந்ததுடன் சிறந்த மனித வள முகாமைத்துவத்தின் காரணமாக 2024 ஆம் ஆண்டில் திணைக்களத்தின் செயலாற்றுகை எதிர்பார்த்த அடைவை அடைந்துள்ளது.

## 6.3 மனித வள அபிவிருத்தி

2024 ஆம் ஆண்டில், திணைக்களத்தின் மனித வள மேம்பாட்டுடன் நேரடியாக தொடர்புடைய பின்வரும் திட்டங்கள்/பாடநெறிகளுக்கு பணியாளர்கள் வழிநடத்தப்பட்டனர்.

| நிகழ்ச்சித் திட்டத்தின் அல்லது கற்கை நெறியின் பெயர் | பயிற்சி வழங்கப்படுகின்ற பணியாட்களின் எண்ணிக்கை | நிகழ்ச்சித் திட்டங்களின் கால எல்லை | மொத்த முதலீடு(Rs'000) | | நிகழ்ச்சித் திட்டத்தின் தன்மை (உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு) | முடிவு/பெற்றுக் கொண்ட அறிவு |
|---|---|---|---|---|---|---|
| | | | உள் நாட்டு | வெளி நாட்டு | | |
| வளர்ச்சியடைந்து வரும் நாடுகளில் சர்வதேச வர்த்தக தடைகளுக்கு முகம் கொடுப்பது பற்றிய AIBO 0228-0312 கருத்தரங்கு | 01 | 2024.02.28 தொடக்கம் 2024.03.12 வரை | - | அமெரிக்க டொலர் 375 + பவுண் 75 | வெளி நாட்டு | சர்வதேச வணிக சுங்க நடைமுறைகள் மற்றும் உலக வணிக அமைப்பின் நடைமுறைகள் பற்றிய அறிவைப் பெற்றுள்ளதோடு, அதனை திணைக்களத்தின் கடமைகள் மற்றும் செயற்பாட்டிற்கு பயன்படுத்தல். |
| மூலோபாய வர்த்தக முகாமைத்துவப் பயிற்சி திட்டம் | 01 | 2024.05.13 தொடக்கம் 2024.05.24 வரை | - | அமெரிக்க டொலர் 375 + பவுண் 75 | வெளி நாட்டு | ஐரோப்பிய ஒன்றியத்தின் வாழ்நாள் பயன்பாட்டுப் பட்டியல் மற்றும் யுத்த உபகரணப் பட்டியலை ஒழுங்குபடுத்தல் மற்றும் ஐக்கிய நாடுகளின் பாதுகாப்பு சபையின் 1540 ஆம் முன்மொழிவை எண்ணங்கள் உள்ளிட்ட மூலோபாய வணிக முகாமைத்துவ அமைப்பு பற்றிய விரிவான அறிவைத் திணைக்களத்தின் கடமைகளில் பயன்படுத்தல். |

| நிகழ்ச்சித் திட்டத்தின் அல்லது கற்கை நெறியின் பெயர் | பயிற்சி வழங்கப்படுகின்ற பணியாட்களின் எண்ணிக்கை | நிகழ்ச்சித் திட்டங்களின் கால எல்லை | மொத்த முதலீடு(Rs'000) | | நிகழ்ச்சித் திட்டத்தின் தன்மை (உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு) | முடிவு/பெற்றுக் கொண்ட அறிவு |
|---|---|---|---|---|---|---|
| | | | உள் நாட்டு | வெளி நாட்டு | | |
| டிஜிட்டல் யுகத்தின் கட்டுப்பாடு – அவுஸ்திரேலிய விருதின் குறுகிய பாடநெறி | 01 | 2024.06.24 தொடக்கம் 2024.07.05 வரை | - | அமெரிக்க டொலர் 375 | வெளி நாட்டு | டிஜிட்டல் வயதை கட்டுப்படுத்துவது எப்படி என்பது பற்றிய அறிவு மற்றும் அனுபவங்களைப் பெற்றுக்கொள்ளல். |
| பிலிப்பைன்ஸ் மூலோபாய வணிக முகாமைத்துவ PHTSTM 2024 மாநாடு | 01 | 2024.09.08 தொடக்கம் 2024.09.13 வரை | - | அமெரிக்க டொலர் 150 | வெளி நாட்டு | பிலிப்பைன்ஸின் ஏற்றுமதி கட்டுப்பாடு மற்றும் தொடர்புடைய நாடுகளின் பாதுகாப்பு நிகழ்ச்சித் திட்டத்துடன்(Export Control and Related Border Security Program, EXBS) இரு தரப்பு கலந்துரையாடலொன்றை நடாத்தி மூலோபாய வணிகக் கட்டுப்பாடு மற்றும் Stratlink உரிமங்களை வழங்கும் நிகழ்நிலை முறைமையின் அபிவிருத்தி தொடர்பான முன்னேற்றங்கள் மற்றும் வெற்றிகளை அறிவித்தல். மூலோபாய வணிக முகாமைத்துவம் தொடர்பான செயற்பாட்டுத் திட்டமொன்றை தயாரிப்பதற்கு இலங்கையை மாதிரியொன்றாக எடுப்பதற்கு ஐக்கிய நாடுகளின் |

| நிகழ்ச்சித் திட்டத்தின் அல்லது கற்கை நெறியின் பெயர் | பயிற்சி வழங்கப்படுகின்ற பணியாட்களின் எண்ணிக்கை | நிகழ்ச்சித் திட்டங்களின் கால எல்லை | மொத்த முதலீடு(Rs’000) | | நிகழ்ச்சித் திட்டத்தின் தன்மை (உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு) | முடிவு/பெற்றுக் கொண்ட அறிவு |
|---|---|---|---|---|---|---|
| | | | உள் நாட்டு | வெளி நாட்டு | | |
| | | | | | | பிரதிநிதிகள் இங்கு உடன்பட்டனர். |
| நிலைபேறான வளர்ச்சி நோக்கங்களுக்கான நிகழ்ச்சித் திட்டம் | 28 | 01 மணித்தியாலயம் | - | - | உள்நாட்டு | நிலைபேறான வளர்ச்சி நோக்கங்கள் மற்றும் இலக்குகளை பற்றிய புரிதலை வழங்குதல். |
| தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபையின் செயற்பாடுகள் பற்றிய தெளிவுபடுத்துதல். | 27 | 01½ மணித்தியாலயம் | - | - | உள்நாட்டு | மருந்துகளுக்கான இறக்குமதி மற்றும் ஏற்றுமதி கட்டுப்பாட்டு அனுமதிப் பத்திரங்களை வழங்கும் போது, தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபையின் செயற்பாடுகள் பற்றிய விழிப்புணர்வை பெறுதல் |
| சுங்கப் பதிவு குறித்த விழிப்புணர்வு வழங்கல் | 32 | 2 மணித்தியாலயம் | - | - | உள்நாட்டு | சுங்கப் பதிவு தொடர்பான தெளிவொன்றை வழங்கல் |
| இலங்கை தரநிலைகள் தொடர்பான நிகழ்ச்சித்திட்டம் | 23 | 2 மணித்தியாலயம் | - | - | உள்நாட்டு | இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் கீழ் நிலவும் தரநிலைகள் தொடர்பான விழிப்புணர்வு பெறுதல். |
| பணச் சலவை | 30 | 02 மணித்தியாலயம் | - | - | உள்நாட்டு | குற்றச் செயல்கள் மூலம் சம்பாதித்த பணத்தை தெளிவாக சட்டரீதியாக ஆதாரத்துடன் நிதிகளாக |

| நிகழ்ச்சித் திட்டத்தின் அல்லது கற்கை நெறியின் பெயர் | பயிற்சி வழங்கப்படுகின்ற பணியாட்களின் எண்ணிக்கை | நிகழ்ச்சித் திட்டங்களின் கால எல்லை | மொத்த முதலீடு(Rs'000) | | நிகழ்ச்சித் திட்டத்தின் தன்மை (உள்நாட்டு மற்றும் வெளி நாட்டு) | முடிவு/பெற்றுக் கொண்ட அறிவு |
|---|---|---|---|---|---|---|
| | | | உள் நாட்டு | வெளி நாட்டு | | |
| | | | | | | மாற்றுவது தொடர்பான தெளிவொன்றைப் பெற்றுக் கொள்ளல். |
| தகவல் தொழில்நுட்பம் தொடர்பான அறிவு | 22 | 02 மணித்தியாலயம் | - | - | உள்நாட்டு | தகவல் தொழில்நுட்பம், மென்பொருள் மற்றும் வன்பொருள் பற்றிய அறிவு |
| அரச பெறுகைச் செயற்பாடு | 23 | 02 மணித்தியாலயம் | - | - | உள்நாட்டு | அரச பெறுகை செயற்பாடு பற்றிய அறிவு |
| தேசிய தொழிற் கல்வி நிறுவனத்தினால் அலுவலக உதவியாளர்கள் சேவை / சாரதிகள் சேவை அலுவலர்களுக்கு சிறந்த அலுவலக பணி சூழல் ஒன்றை உருவாக்குவதற்கான நிகழ்ச்சி திட்டம் | 04 | நாள் 01 | ரூ. 20,000 | - | உள்நாட்டு | சிறந்த பணிச் சூழல் ஒன்றை உருவாக்குவதற்கு அலுவலக உதவியாளர்கள் மற்றும் சாரதிகளால் மேற்கொள்ளப்பட வேண்டிய பணிகள் பற்றி அறிவூட்டல் |
| இயைபு முறைக் குறியீட்டு இலக்கம் பற்றிய அறிவு | 39 | 02 மணித்தியாலயம் | - | - | உள்நாட்டு | இயைபு முறைக் குறியீட்டு இலக்கம் பற்றிய தெளிவொன்றைப் பெற்றுக் கொள்ளல். |
| கணக்காய்வுக் கேள்வி | 50 | 02 மணித்தியாலயம் | - | - | உள்நாட்டு | கணக்காய்வுக் கேள்விகளுக்கு பதிலளித்தல், கணக்காய்வு கேள்விகளின் முக்கியத்துவம் மற்றும் கணக்காய்வுச் சட்டம் தொடர்பாக |

| நிகழ்ச்சித் திட்டத்தின் அல்லது கற்கை நெறியின் பெயர் | பயிற்சி வழங்கப்படுகின்ற பணியாட்களின் எண்ணிக்கை | நிகழ்ச்சித் திட்டங்களின் கால எல்லை | மொத்த முதலீடு(Rs'000) | | நிகழ்ச்சித் திட்டத்தின் தன்மை (உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு) | முடிவு/பெற்றுக் கொண்ட அறிவு |
|---|---|---|---|---|---|---|
| | | | உள் நாட்டு | வெளி நாட்டு | | |
| | | | | | | தெளிவைப் பெறுதல். |
| அரச சம்பள அமைப்பின் செயல்முறை | 01 | நாள் 03 | ரூ.18,000 .00 | - | உள்நாட்டு | அரச சம்பள அமைப்பின் செயல்முறை தொடர்பான புரிதலை பெற்றுக் கொள்ளல். |
| முதலுதவி பயிற்சி | 01 | 03 மணித்தியாலயம் | ரூ.4235.9 0 | - | உள்நாட்டு | அவசர சந்தர்ப்பத்தில் வைத்திய உதவி வழங்குதல் தொடர்பான விளிப்புனர்வொன்றை பெற்றுக் கொள்ளல். |
| துறைமுகத்திற்கு வருகை தரும் கப்பல்களுக்கான எரிபொருள் வழங்கல் தொடர்பான செயல்முறை | 53 | 02 மணித்தியாலயம் | - | - | உள்நாட்டு | துறைமுகத்திற்கு வருகை தரும் கப்பல்களுக்கான எரிபொருள் வழங்கல் தொடர்பான செயல்முறை தொடர்பான தெளிவை பெற்றுக் கொள்ளல். |
| இறக்குமதி மற்றும் ஏற்றுமதி கட்டுப்பாட்டு ஒழுங்குவிதிகள் வெளியிடுதல் சம்பந்தமாக வெளியிடப்படும் அதிவிசேட வர்த்தமானிகள் வெளியிடும் செயற்பாடு தொடர்பான விளக்கப் பயிற்சி. | 33 | 02 மணித்தியாலயம் | - | - | உள்நாட்டு | வர்த்தமானிகளை வெளியிடும் செயற்பாடு தொடர்பான விளக்க அறிவு. |

